www.padippakam.com
நன்றி - நூலகத்திட்ட

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
நவம்.21-27.1993
ரூபா 8/50

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 26



ஒட்டிப் பிறந்த இரட்டையர்



## அரசியல் வானில் தோன்றும் நம்பிக்கை நட்சத்திரங்கள்!

பீதியைக் கிளப்பியுள்ள பில்லி–சூனியப் புத்தகம்





## காதலின் விதிகள்
## சுவையான குறிப்புகள்
## கூந்தல் அழகும்
## உணவு முறையும்

பிரபல அழகுக் கலை நிபுணரின் ஆலோசனை

உங்கள் ராசிபலன்

வேகமாய்ப் பரவும் தும்மல்

மருத்துவம்

வளர்ந்துவரும் இராணுவ பலம்

உலக ரவுண்டப்

நிலவு தூங்கும் நேரம்

மற்றும் பல சிறுகதைகள்

ஸ்போர்ட்ஸ்

துணுக்குகள் + செய்திகள்

சினிவிசிட்

லேடீஸ் ஸ்பெசல்

கூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
25வது வெள்ளிவிழா வார
வெற்றி முரசின் பின்னர்
உங்களோடு வந்து கலப்பதில் மகிழ்ச்சி.
உங்கள் வசீகர-அணைப்பில்
வெற்றிப்படிகளில் தொடர்ந்து முன்னேற
மனதில் வியாபித்திருக்கிறது உறுதி.

விளம்பரங்களைக் குறைத்து
விசயங்களையே அதிகம் தர
விருப்பம் கொண்டிருப்பதால்
விரிவான, பெரிதான அன்பளிப்புக்களை
உங்களோடு
பகிர்ந்துகொள்ள முடியாது போகிறது.
புரிந்து கொள்வீர்கள்
என்ற நம்பிக்கை இருக்கிறது.

சில பகுதிகளில்
முரசின் விலை அதிகமாக்கி
விற்பனை செய்யப்படுவதாக
புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன.
முகப்பிலே தெளிவாக விலை
குறிப்பிடப்பட்டிருக்கிறது.
இலங்கை எங்கும் விலை ஒன்றுதான்
என்றும் ஏற்கனவே
முறையாக அறிவித்துள்ளோம்.
எனவே
வாசக நெஞ்சங்கள்
விழிப்பாயிருப்பது முக்கியம்.
நேற்றுக்கூட,
கிண்ணியாவில் இருந்து வந்த
நண்பர் ஒருவர் அங்கு
ஒரு ரூபாய் அதிகம் வைத்து
முரசு விற்கப்படுவதாகப் புகார் சொன்னார்.
இன்னும் ஒரு குறை.
தங்கள் பகுதிக்கு முரசு வரத்தாமதமானதும்
வாசகர்கள் பலர்
தொலைபேசியில் தொடர்பு கொள்கின்றனர்.
ஏன் தாமதம்? என்று உரிமையோடு கேட்கின்றனர்.
சில நேரங்களில்
போக்குவரத்தில் இடையூறுகள்.
விநியோகிப்போரின் தாமதங்கள்.
முகவர்கள் ஒரு சிலர்
அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப
ஒத்துழைக்காமல் போவதும்
அதனால் நிர்வாகம்
முரசு அனுப்புவதை நிறுத்துவதும்
இன்னொரு காரணம்.
தவிர எந்தவொரு பகுதியையும்
முரசு புறக்கணிக்காது.
அங்கு ஆறுதலாய் அனுப்பலாம்
என்று உங்கள் ஆர்வத்தை
அலட்சியம் செய்யாது.

அரசியல் அரங்கம்
வழக்கம் போல் சலிப்பூட்டுகிறது.
திருப்பங்கள் இருந்தால்
தினசரிகளுக்கு கலகலப்பூட்டும்.
தீர்வுகள் தெரிந்தால்
திருவாளர் பொது ஜனத்துக்கு
தெம்பூட்டும்.
இரண்டுமே இல்லை.
சோர்வுகளே தலைகாட்டுகின்றன.
அதிகம் சொல்ல எதுவுமில்லை.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை,
என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்.

தினமுரசு முலமாகப் புதிய வாரவெளியீடு எதுவும் வரவும் இல்லை, தற்போது அந்த எண்ணமும் இல்லை. தவறான ஒரு செய்தியை வியாபார நலன்கருதி சிலர் சொல்லித் திரிவதால் இதனைத் தெரிவிக்க வேண்டியதாகிறது.

## யோசியுங்கள் - யோசியுங்கள்



இது ஒரு வித்தியாசப் படம். விபரம் அறிய வேண்டுமா? அப்படியே 19ம் பக்கம் செல்லுங்கள்.



இந்தப் படத்தில் இருப்பது என்ன? யோசியுங்கள். நீங்கள் நினைத்தது சரியா என்று அறிய 19ம் பக்கத்துக்குச் செல்லுங்கள்.

தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-23

களம் தேடி வந்து குவிந்தவற்றில் வெற்றிபெற்ற கவிதையும், வியக்கவைத்த கவிதைகளும்

### பரிசுக்குரிய கவிதை

எதிர்பார்ப்பு
மலர்ந்து வரும் புத்தாண்டில்
போர் ஒன்று முளுமா?
தவழ்ந்து சென்று நாம்-அதனை
தடுத்திடத்தான் இயலுமா?
ஏ. புஸ்பராஜ்
நிவித்திகல.

### பாராட்டுக்குரியவை

அறவழிப்போராட்டம்
இதென்ன-
அன்னை பூமியின்
அமைதி வேண்டி
அரும்புகள் நடத்தும்
அறவழிப்போராட்டமா?
ஆர்.பாலகிருஷ்ணன்
மாத்தளை.

பிறந்தது பாவம்
அவசரப்பட்டு விட்டார்கள்!
அமைதிக்கு முன்
ஆஜராகிவிட்டார்கள்.
மு.சர்தார்
கிண்ணியா-02.

(அ)நாகரீகத்தின் விளைச்சலோ
கூடைகளில் குழந்தைகள்!
நகீப் இந்தியான்
கொழும்பு-14.

ஒற்றுமை
வஞ்சக உலகுக்கு
ஒற்றுமை புகட்டும்
பிஞ்சு நெஞ்சங்கள்.
பாலை பாலபவான்.

கருச்சிதைவைத்
தடுக்க
குழந்தைகளின்
மகாநாடு
எம்.எம். முலாபர்
அக்குறஸ்ஸ.



மழலைகள்
உலகம் உணராத
உள்ளங்கள்
மரணம் நெருங்கக்
கூடாத
மழலைகள்.
பிறேமலதா-நாவலப்பிட்டி.

ஜீவ மலர்கள்
நாங்களும் மலர்கள்தான்
ஜீவமலர்கள்
எங்களைப் பிரிக்காதீர்கள்
எங்கள்
இனிமையைப் பறிக்காதீர்கள்
தி.ஜெகப்பிரியா
புசல்லாவ.

எங்கள் முகங்களை
மனனஞ் செய்து
கொள்ளுங்கள்;
நாளை
எங்கள் முகவரிகள்
தொலைந்துபோகலாம்.....
எம்.எம். உமர்
சாய்ந்தமருது.

இனவெறி வேடர்களால்
பலியாக்கப்பட்ட
அன்னையர்களின்
குழந்தைகளோ?
பாலமுனை வாஹிட்

சமாதானப் புறா
யுத்தம்
வேண்டாமென்று
உண்ணாவிரதமாம்
இவர்கள்.
எஸ். நதீஸா
தும்பாகொட-பலாங்கொட.

இந்த மழலைகள்
பயங்கரவாதத்தை
பார்க்க சகியாமல்....
அமைத்த
பதுங்குகுழிகளா?
பாத்திமா ஷானா
ஆலம்குளம்-17.

சமாதானச்சின்னங்கள்
"வெள்ளைப் புறாக்களைக்
காணவில்லை.
நாமாவது
சமாதானச்
சின்னங்களாவோம்."
தி.சுரேந்தினி
திருகோணமலை.

பங்கர்
போரில் எஞ்சிய
குழந்தைள்
புதிய 'பங்கர்'
அமைத்துக்கொண்டனவோ?
திருமதி.கா.இராஜேஸ்வரி
ஹட்டன்.

குழந்தைகள்
சிதைக்கப்பட்ட பூமியில்
விதைக்கப்பட்ட
புது விதைகள்.
செல்வி. அ. ஈசா
திருகோணமலை.

பங்கரில் பதுங்கும்
பயிற்சியோ
பால்யத்திலே!
ரிஸ்வி முஹம்மத்
திஹாரிய.

## கவிதைப் போட்டி இல-26



சிந்தனைகள் குழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். தபாலட்டையில் உங்கள் உணர்வினைப் பொறித்து எமக்கு அனுப்புங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27.11.1993.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 26
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

மழலை விதை
போர்த்தீயில்
எரிந்துபோன
மனித மரம்
தொல்பொருளாய்
ஆகிடாமல்
காத்திடவே
மலர்ச்சாடி
மழலை விதை
தாங்கி நிற்கும்
நாற்றுமேடை
ஆனதுவோ?
ஒலூர் றகீமா.

# வாசக(ர்)சாலை



நேர்மையான விமர்சனம்
அரசியலில் சொல்ல வேண்டிய விசயங்கள் அனைத்தையும் துணிச்சலோடு தரும் முரசுக்கு பாராட்டுக்கள். நேர்மையான விமர்சனக் கண்ணோட்டத்தை முரசு தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே என் போன்றவர்களின் அவா.
வீ.தெய்வநாயகம்-மட்டக்களப்பு.

•

முரசு 23 தாங்கிவந்த-எம்-சுரேசின் ஷெல்லரித்த நினைவுகள் கண்டு புல்லரித்துப்போனேன். சபாஷ்! சுரேஷ்.
க.தே.ரஜினி-சம்மாந்துறை.

•

உலக ரவுண்டப் பிரமாதம். விமானத்தைக்கலக்கிய விரல் எங்களையும் கலக்கிவிட்டது.
வே.வதனா-புத்தளம்.

•

மதிப்பிற்குரிய தினமுரசே,
உன்னுடைய அரசியல் அலசல், எக்ஸ்ரே ரிப்போர்ட் போன்றவைகளை படிக்கத் தொடங்கியதும்தான்- நாட்டை நினைத்து குழம்பியிருந்த நான்...நாடே குழம்பிப்போயிருப்பதைப் புரிந்து கொண்டேன். உனது சேவைக்கு ஒரு சபாஷ்.
ஏ.ஜீ. சேகர்-அக்கரைப்பற்று-08.

•

வியாழன் வந்துவிட்டால் எனக்கு கொண்டாட்டம். மனசு பறக்குது வண்டாட்டம். கண்ணே மதுமிதாவில் பதித்த கண்ணை வேறு பக்கம் அகற்ற முடியவில்லை. ரசிகன் சொக்கு பொடிபோட்டு எழுதுகிறாரோ? யார் அந்த ரசிகன்? ஏன் இன்னும் மர்மம் அறியத் தருவாயோ என் இனிய முரசே?
எ.பரீனா.பைதா-புத்தளம்.

•

வாரம் ஒரு முறை பல சுவையான தகவல்களை கொண்டு வரும் தினமுரசே நீ கொண்டுவரும் அத்தனை அம்சங்களும் தேனும் பாலும் போல் பிரமாதம்.
ஜெயந்தி மேரி-மாத்தளை.

•

இருட்டறைபோல் கிடக்கும் எம் இதயத்திற்கு உன் கருத்தால் உயிரூட்டி அறிவு வெளிச்சம் தருகிறாய். என்ன வசியம் செய்தாயோ தெரியவில்லை. வியாழக்கிழமை காலையிலேயே பத்திரிகை விற்பனையாளரைத் தேடி உள்ளம் எங்குகிறது. ஆமாம் இன்று காதலர்கள் தம் காதலனிடமிருந்தோ காதலியிடமிருந்தோ வரும் காதல் கடிதத்தை விட உன்னையல்லவா மிகவும் ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். உன்னைச் சுவைத்து ரசித்தபின்தான் எல்லாம் எமக்கு. எமது நல்லாசிகள் என்றென்றும் உனக்கு உண்டு.
எம்.விஜேந்திரன், எஸ்.கனிமலர், டி.செல்வசிகாமணி-டயராப எஸ்டேட்.

•

முரசே!
நீ தரும் ஆக்கங்கள் அனைத்தும் ரியலி சூப்பர். அதிரடி அய்யாத்துரை அசத்துகிறார். வியப்பூட்டும் சம்பவங்களை வித்தியாசமாகத் தருவதில் உனக்கு நிகர் நீயே. உன் புகழ் எட்டுத் திக்கும் ஓங்கி ஒலிக்க என் வாழ்த்துக்கள் பல.
எஸ்.எம்.சாதிக்-கிண்ணியா-06.

•

என்(னைப்) பிரியா தினமுரசே!
உன்னில் கொண்டுள்ள அபிமானம் புதியது. வாரந்தோறும் உன்னை வாங்காது விட்டால் வாழ்வே இல்லையென்றாகிவிடும். ஆயினும் உனக்கு ஒரு சிறிய வேண்டுகோள்.
குறுக்கெழுத்துப் போட்டிக்கான கூப்பனை பிரசுரிக்கும் போது மறுபக்கத்திலுள்ள கதையோ, கட்டுரையோ சிதைவுறாவண்ணம் வெட்டி எடுக்கக்கூடியதாய் பிரசுரிப்பாயாக.
இந்து-இரத்தினபுரி.




அன்பின் மலரே! நீ தரும் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' மூலம் நம் நாட்டில் அரசியல் நடவடிக்கை எந்த அளவிற்கு இருக்கின்றது என்பதை புரிந்துக்கொள்ள கூடியதாக இருக்கிறது. அத்துடன் நீ தரும் தேன் கிண்ணம் நன்றாகவே இனிக்கிறது.
செல்வி.மா. ஜோதிலக்சுமி
போபத்தலாவ.

•

ஏகோபித்த வாசகர்களின் நெஞ்சினில் இடம் பிடித்துக்கொண்ட தினமுரசு இலங்கையில் மட்டுமல்ல, சர்வதேச தமிழர்களின், மனதில் இடம்பிடித்து விட்டதை எண்ணி நெகிழ்கிறேன். வளர்க, வாழ்க, வெல்க என வாழ்த்துகிறேன்.
ஆர்.கே.செல்வநாயகம்-லபுக்கெலை.

•

பேஷ் பேஷ்
அன்பின் முரசே நீங்கள் லேடீஸ் ஸ்பெசலில் சமைப்போம் சுவைப்போம் பகுதியில் பிரசுரித்த அன்னாசிரசம் செய்து சோறோடு சாப்பிட்டோம். மிகவும் ருசியாய் இருந்தது. வாசனையோ அள்ளியது குசினியை.
டி.நளினி-வாழைச்சேனை.

•

தித்திக்கும் தினமுரசே உனது அங்கங்களின் உறுப்புகளாகிய பாப்பாமுரசு, நகர ரவுண்டப், கண்ணே மதுமிதா, எக்ஸ்ரே ரிப்போர்ட், சினிவிசிட் அனைத்தும் சூப்பர்.
இஸ்மாயில் சுபைதா, நஜிமுதீன் ஜெரினா, ஜெஸ்மி முபாஸா, ஜவ்பர் பதுறுநிஸா-காத்தான்குடி.

•

வண்ண வண்ண இதழ்களுடன் வாரம் தோறும் வெளிவரும் எனது அன்புக்குரிய தினமுரசே, உன் புகழ் நீடித்து இருக்க எனது மனமார்ந்த வணக்கங்கள் பல உரித்தாகுக!
பி.சிவானந்தன்-பூண்டுலோயா.

•

வெள்ளிவிழா வாரம் கண்ட தினமுரசு நாம் அல்லவா முரசே! பரிசு தரணும். மாறாக எமக்கு அன்பளிப்பு தரும் நீ உன் பரந்த நோக்கத்துக்கு எனது விரிந்த நன்றிகள் பல...
எம்.ஹயாத்-மட்டக்குளிய.

•

பாராட்டிட வார்த்தைகள் இல்லை
என் இனிய முரசே!
உன் ஆக்கங்கள் அனைத்தையும் ரசித்து ரசித்து சுவைக்கும் எனக்கு உன்னைப் பாராட்டிட ஒரு எண்ணம், ஆனால் தகுந்த வார்த்தைகள் தான் கிடைக்கவில்லை. ஏனென்றால் நீ ஒவ்வொரு பக்கமும் அள்ளி வழங்கிடும் ஆக்கங்கள் அனைத்தும் அப்படி ஒரு தேன்சுவை தருகின்றன. இப்படி ஒரு இன்சுவையை தந்திடும் உன்னை பாராட்டிட வார்த்தைகளும் உண்டோ?
செல்வி.ராமசுவாமி
பவானி-கோட்லோஜ் எஸ்டேட்.

•

தினமுரசே, வாராவாரம் நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம்.
சினிவிசிட் பார்த்தால் படம் ஒன்று பார்த்தாப்போல் ஒரு பிரமை. நீ வளர்க வாழ்க என் வாழ்த்துக்கள்.
கோ. ஆனந்தன்-ஒந்தாச்சிமடம்

•

தித்திக்கும் முத்தானதகவல்களையும், திகைப்பூட்டும் விசித்திர நிகழ்வுகளையும், தாங்கிவந்து என்னை மகிழ்விக்கும் முரசே! நான், உன் பணி மறப்பேனா? நீ தினமும் வந்துதித்தாலும் நெஞ்சமெனும் மஞ்சமதில்அணைத்துக்கொள்வேன்.
வாழ்க உன் சேவை!
வளர்க உன் பணி!
மகிழ வாசகர்கள் உள்ளம்!
அ.ச.மு.பௌஸ்-மூதூர்.

•

அன்பு மலரே தினமுரசே!
என் இதய மலராய் வாரம் ஒரு வெள்மியின் விடியலுக்காய் காத்திருக்க வைப்பதேனோ? உன் அம்சங்கள் அத்தனையும் அறிவுக்கோர் விருந்தளிப்பு. இளைய உள்ளங்களின் புனித திலகமாய் என்றும் ஒளிவிட என் மனம் நிறைந்த ஒரு கோடி நல்லாசிகள் உரித்தாகட்டும்!
செல்வி.ஏ.டீ. ரேவதிப்பிரியா
களுத்துறை தெற்கு.

www.padippakam.com    நன்றி - நூலகத்திட்டம்

**மடிந்தன ஆயிரம் மனித உயிர்கள்**

# கைப்பற்றிய ஆயுதங்களின் பெறுமதி 25 கோடியாம்
# “கரும்புலிகளே வெற்றிக்கு மூல காரணம்”
## யாழ்ப்பாணத்தில் புலிகள் தெரிவிப்பு

பூநகரி இராணுவ-கடற்படை முகாம்கள் மீது புலிகள் நடத்திய தாக்குதலுக்கு “தவளைத் தாக்குதல்” எனப் பெயர்சூட்டப்பட்டிருந்தது.

11ம் திகதி அதிகாலை 1.45 மணி யளவில் புலிகள் நடத்திய தவளைத் தாக்குதலில் கரும்புலிகளே படையினரின் காவல் அரண்களை ஊடுருவிச் சென்றனர்.

கடற்பகுதியிலும் கரும்புலிகள் தாக்குதல் நடத்தினர். அதில் ஒரு விசைப்படகு மூழ்கடிக்கப்பட்டதாகப் புலிகள் கூறியுள்ளனர்.

தாக்குதலின் ஆரம்பத்தில் புலிகளின் அதிரடி நடவடிக்கை படையினரை சீர்குலைத்தது. முகாம்களை விட்டு படையினர் பின்வாங்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

பின்வாங்கிச் சென்ற படையினரை சுற்றிவளைத்தும், தேடியும் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

முதல்நாள் மோதலில் தமது தரப்பில் 150 பேர் பலியானதாகப் புலிகள் அறிவித்தனர். படையினர் தரப்பில் 200ற்கு மேற்பட்டவர்கள் பலியானதாகவும் புலிகள் கூறினார்கள்.

யாழ்குடாநாட்டின் மீதான இராணுவ முற்றுகைக்கு பூநகரி முகாமே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அதனைக் கைப்பற்றுவதே தமது நோக்கம் என்று மோதலின் ஆரம்பத்தில் புலிகளால் யாழ்ப்பாணத்தில் அறிவிக்கப்பட்டது.

பின்வாங்கிச் செல்லும் துருப்புக்களை முற்றாக அழிக்கப் போவதாகவும் புலிகள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தனர்.

மோதலின் ஆரம்பத்தில் பூநகரிப்பகுதி முற்றாகவே புலிகளின் கைகளில் விழுந்துவிடும் என்ற நிலைமையே காணப்பட்டது.

ஹெலிகள், விமானப்படை விமானங்கள் போன்றவை தாழப்பறந்து குண்டு வீசுவதற்கு முடியாதவகையில் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

அதனால் மோதல் நடைபெற்ற பகுதியை விட்டு விலகி யாழ்நகருக்குள் சென்ற குண்டுவீச்சு விமானங்கள் புலிகளின் காவல்துறை தலைமை அலுவலகம் மீது தாக்குதல் நடத்தின. அதில் ஒரு குண்டு யாழ் அரச செயலகம் மீதும் விழுந்தது.

யாழ் அரச செயலகத்திற்கு சொந்தமான காணியில் புலிகள் தமது காவல்துறை அலுவலகத்தை கடந்த பல மாதமாக நடத்திவருகின்றனர்.

பூநகரிப் பகுதியை புலிகளின் கரங்களுக்கு செல்லவிடாமல் தடுக்க பாதுகாப்புப்படை தளபதிகள் கடுமை யான முயற்சிகளை எடுத்தனர்.

சுமார் 900 மேலதிகத் துருப்புக்கள் கடல்வழியாக முன்னேறி பூநகரியில் இறங்கியதோடு யுத்த நிலமை மாற்ற மடைந்தது.

பூநகரிப்பகுதியை முற்றாகக் கைப்பற்றும் திட்டத்தைப் புலிகள் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டது.

14.11.93 ஞாயிறு அன்று தமது தாக்குதல் பிரிவினர் முகாம் திரும்பி விட்டதாக புலிகளின் அறிக்கை ஒன்று தெரிவித்தது.

தமது தரப்பில் 372 உறுப்பினர்கள் பலியானதாகப் புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்தனர்.

பூநகரிப் பகுதியை புலிகளின் கரங்களுக்கு செல்லவிடாமல் தடுக்க முடிந்ததில் பாதுகாப்புப்படை வட்டாரங்களில் திருப்தி காணப்பட்டது. எனினும் “புலிகளின் மிகப் பெரிய தாக்குதல் இது.” என்று சில அதிகாரிகள் தெரிவித்தனர்.

புலிகளைப் பொறுத்தவரை தமது திட்டத்தில் ஒரு பகுதி வெற்றி யடைந்துவிட்டதில் திருப்தியோடு இருக்கின்றனர்.

பூநகரிப் பகுதியை முற்றாகக் கைப்பற்றுவது முழுத்துருப்புக்களையும் அழித்து படையினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்துவது என்ற திட்டங்களை செயற்படுத்த இயலவில்லை.

ஆயினும் பெருந்தொகையான ஆயுதங்களை கைப்பற்றிக்கொண்டமை யானது புலிகளின் இராணுவ ரீதியான பலத்தை அதிகரித்துள்ளது.

25 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை தாம் கைப்பற்றியுள்ளதாகப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நான்கு நீண்ட தூர பீரங்கிகள் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் இராணுவத்தளங்கள் மீது புலிகள் தாக்குதல்களை நடத்தக்கூடும்.

முல்லைத்தீவு மாவட்ட புலிகள் இயக்கச் சிறப்புத் தளபதி அன்புவும் மோதலில் கொல்லப்பட்டுள்ளார்.

மேஜர் கணேஷ், மேஜர் கோபி ஆகியோர் பலியான கரும்புலிகளில் முக்கியமானவர்கள் என்று கூறப்படுகிறது.

கரும்புலிகளான மேஜர் கணேஷ், மேஜர் கோபி ஆகியோர் பூநகரித் தாக்குதல் வெற்றிக்கு மூல காரணமாக இருந்ததாக புலிகள் அறிவித்துள்ளனர். அந்த இருவரதும் படங்களோடு கூடிய அலங்கார ஊர்த்திகள் யாழ்குடா நாடெங்கும் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு வருகின்றன.

“தவளைத் தாக்குதலை” பிரபாகரனே திட்டமிட்டதாக யாழ்ப்பாணத்தில் புலிகள் கூறியுள்ளனர். ஆனாலும் மோதல் முனைகளில் பிரபாகரன் காணப்படவில்லை என்று யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளால் பெயரிடப்பட்டு நடத்தப்பட்ட மூன்றாவது தாக்குதல் இதுவாகும்.

பூநகரித் தாக்குதலின் பின்னர் வடபகுதியில் அமைந்துள்ள இராணுவ கடற்படைத் தளங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் புதிய மாற்றங்கள் செய்யப்படும் என்று தெரிகிறது.

வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் புலிகளின் தாக்குதல் நடவடிக்கையை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. பாதுகாப்புப்படைகளுக்கு பலத்த இழப்பு என்று கருத்துத் தெரிவித்தன.

இதே வேளையில் தமது தரப்பில் மாண்டவர்களின் முழு எண்ணிக்கை யையும் இதுவரை பாதுகாப்புப்படை யினரால் கண்டறிய முடியவில்லை. இழப்புக்கள் அதிகம் என்றே தெரிவிக்கப்படுகிறது.

இரு தரப்பிலுமாக 1000ற்கும் மேற்பட்ட மனித உயிர்கள் பூநகரி மோதலில் பலியாகியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ●

# “மேசைக்குக் கீழே பதுங்கினேன்”
## யாழ் அரச அதிபர் பேட்டி

புலிகள் அமைப்பின் காவல் துறை அலுவலகம் மீது விமானப் படையினர் நடத்திய தாக்குதலின் போது அருகில் இருந்த யாழ் அரச செயலகமும் சேதமடைந்தது.

புலிகள் இயக்க காவல்துறையைச் சேர்ந்த ஒருவர் பலியானார். 6 பேர் காயமடைந்தனர். தாக்குதல் நடைபெற்ற சமயத்தில் வீதியால் சென்றுகொண்டிருந்த பொதுமக்கள் 12 பேரும் காயமடைந்தனர்.

சுண்டுக்குளி தபால் நிலையமும் சேதமடைந்தது. யாழ் அரசாங்க அதிபர் திரு.மாணிக்கவாசகர் சிறு காயத்துக்கு உள்ளானார்.

காயப்பட்ட நிலையில் அவர் அளித்த பேட்டியொன்றில், “நான் அலுவலகத்தில் இருந்த போது பலத்த குண்டுச்சத்தம் கேட்டது. உடனே கூரை விழ ஆரம்பித்தது. நான் எனது மேசைக்கு கீழே பதுங்கி விட்டேன். சத்தம் ஓய்ந்ததும் பின் பக்கம் சென்றேன். படியால் இறங்கும் போது மீண்டும் குண்டுச்சத்தம் கேட்டது. அப்போது நிலத்தில் படுத்துவிட்டேன். முதல் தாக்குதலில் நான் காயமடைந்து எனது நெஞ்சு வழியாக இரத்தம் வந்தது. இத்தாக்குதல் குறித்து, ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் உடனடியாக அறிவித்துள்ளேன்.” என்று கூறியுள்ளார்.

மேலதிக அரச அதிபர் செயலகம், பிரதிமாவட்ட ஆணையாளர் அலுவலகம், பிரதம கணக்காளர் அலுவலகம் என்பவையும் யாழ் அரச செயலகத்தில் விழுந்த குண்டால் சேதமடைந்தன.

யாழ் அரச செயலகம் கூரைகள் தகர்ந்து திறந்த வெளி போல இருப்பதாக பிந்திக்கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

## கொழும்பு பல்கலைக்கழகத்தில் இந்து மன்றம் உதயம்! நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது!!

(எம்.எஸ்)

கொழும்பு வளாகத்தில் இந்து அமைப்பொன்று இல்லாத குறை அண்மையில் (10.11.93) ஒரு புதிய இந்து மன்றத்தை தோற்றுவித்ததன்மூலம் நிறைவேற்றப்பட்டது.

மன்றம் தோற்றுவிப்பு தொடர்பாக நடந்த நிகழ்ச்சியில் ஆரம்ப உரையாற்றிய திரு வி.டி. தமிழ்மாறன் (விரிவுரையாளர்) அவர்கள், 83க்கு முன்னர் கொழும்பு வளாகத்தில் இந்து மன்றம் சிறப்பாக இயங்கியதென்றும், பல்வேறு சூழ்நிலைகாரணமாக பிற்காலத்தில் அதை செயற்படுத்தமுடியாமல் போனதென்றும் கூறினார். ஆரம்பிக்கப்பட்ட இம்மன்றத்தின் வெற்றி மாணவர்களின் ஒத்துழைப்பிலேயே தங்கியிருக்கிறதென்பதையும் வலியுறுத்தினார்.

மன்றத்தின் பெரும்பொருளாளர் பதவியை ஏற்றுக்கொண்ட பேராசிரியை திருமதி யோகா ராசநாயகம் உரையாற்றுகையில் தமக்கு சமயம், கலாசாரம் தொடர்பாக இருக்கும் நீண்ட அனுபவத்தின் மூலமாக இம்மன்றத்திற்கு சகல விதத்திலும் உதவியளிக்கத் தயாராய் இருப்பதாகத் தெரிவித்தார்.

அவரின் தலைமையில் மன்ற செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டபோது, தலைவராக விஜயாலனும், உபதலைவராக தட்சணா மூர்த்தி சிவநாதனும், இணை செயலாளர்களாக சுலோசனா, குலசிங்கம் ஆகியோரும், பொருளாளராக சுகந்தனும், இதழாசிரியர், துணை இதழாசிரியர் முறையே மயூரன், சத்திய லோஜனா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். இதற்கு மேலதிகமாக சகல பீடங்களையும் உள்ளடக்கக் கூடியவாறு 8 செயற்குழு அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதையடுத்து திரு. தமிழ்மாறன் அவர்கள் மன்றத்தின் யாப்பு விதிகளை விளக்கி, மாணவர்களின் சில சந்தேகங்களையும் தெளிவுபடுத்தினார்.

புதிய மன்றத்தின் புதிய தலைவர் உரையாற்றுகையில், மன்றம் இந்து சமய விசேஷ விழாக்களையும், பண்டிகைகளையும் கொண்டாடுவதோடு, அவ்வப்போது இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்து சமயப் பெரியவர்களை அழைத்து சொற்பொழிவுகளையும் எற்பாடு செய்யுமென்று தெரிவித்தார்.

கடைசியாக மன்ற செயலாளர்களில் ஒருவரான செல்வி சுலோசனாவின் நன்றியுரையோடு புதிய இந்து மன்றத்தின் “சிருஷ்டிப்புக் கூட்டம்” இனிதே நிறைவெய்தியது.

மன்றம் தொடர்பாக ஒரேவரியில் விமர்சனம் கூறுவதாயின் “அடம்பன் கொடியும் திரண்டால்தான் மிடுக்கு”!!

## கிழக்கில் மீண்டும் ஆரம்பம்!

(திருகோணமலை நிருபர்)

பல வருடகாலமாக மறுக்கப்பட்டிருந்த பொதிகள் தபால் மூலம் அனுப்பும்சேவை கிழக்கு மாகாணத்தில் மீண்டும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

எனினும் இத்தடை வட மாகாணத்துக்குத் தொடர்ந்தும் இருக்கும் என்பதால் வட மாகாண நகரங்களுக்கு பொதிகள் அனுப்ப முடியாது எனவும் இது சம்பந்தமாக வெளியான உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

பொதிகள் ஏற்றுக்கொள்ளும் போது ஆபத்தான, தடை செய்யப்பட்ட பொருட்கள் இல்லையென்பதை தபால் அதிபர் உறுதி செய்து கொள்வதோடு அனுப்புபவரின் ஆளடையாளமும் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதுடன் “பொதி எனது முன்னிலையில் கட்டப்பட்டது. தடைசெய்யப்பட்ட பொருட்கள் அதில் இல்லை” என்ற வாசகமும் அஞ்சல் உத்தியோகத்தரால் எழுதப்பட்டு பொதியின் மேற்புறத்தில் கையொப்பமிடப்பட வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

## வினையாக முடிந்த விளையாட்டு! வெற்றி பெற்றவர்கள் மீது தாக்குதல்!

(திருகோணமலை நிருபர்)

பிரேமதாச வெற்றிக்கிண்ணத்துக்கான மாவட்ட சாம்பியன் தெரிவுப் போட்டியில் ஸ்ரீ கோணேஸ்வர இந்துக்கல்லூரி மாணவர்களும் துணை அதிபர் உட்பட ஆசிரியர் பலரும் தாக்கப்பட்டனர்.

திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலயத்துக்கும் திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வர இந்துக் கல்லூரிக்குமிடையே 09.11.93ல் முற்ற வெளியில் இடம் பெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் போதே இச் சம்பவம் இடம்பெற்றது.

ஆட்டம் முடிவுறும் தருவாயில் விளையாட்டுத்திடலில் நுழைந்த சிலர் விளையாடிக் கொண்டிருந்த மாணவர்களைத் தாக்க, அதைத் தடுக்க ஆசிரியர்கள் முன் வந்தபோது அவர்களும் தாக்கப்பட்டார்கள். கத்தி பொல்லுகள் சகிதம் வந்தோரால் தாங்கள் விரட்டப்பட்டதாக மாணவர்கள் கூறினர்.

இப் போட்டியில் 4-0 என்ற விகிதத்தில் இந்துக்கல்லூரி வெற்றி பெற்றது. பொலிசாரும் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டனர்.

திருமலை, ஜமாலியா முஸ்லிம் மகாவித்தியாலய அதிபர் நடைபெற்ற சம்பவத்தையிட்டு ஸ்ரீகோணேஸ்வர இந்துக் கல்லூரி அதிபரிடம் வருத்தம் தெரிவித்துள்ளார். தமது கல்லூரி மாணவர்கள் எவராவது சம்பந்தப்பட்டிருந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

## கைவிடப்பட்ட மண்டபம்! அமைச்சரின் கண்பட்டதால் கலகலப்பாகிறது

(கண்டி நிருபர்)

• வெளவால்கள் குடிகொண்டு பாழடைந்து பல வருடங்கள் அனாதரவாக விடப்பட்டிருந்த கண்டி ஜின்னா நினைவு மண்டபம் கடந்த 1.11.93ல் திடீரென புனரமைப்புக்காக அடிக்கல் நடப்பட்ட சம்பவம் இப்பிரதேச மக்களை பெரும் ஆச்சரியத்திலும் ஆனந்தத்திலும் மூழ்கடித்துள்ளது.

1950ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ம் திகதி பாகிஸ்தானின், அன்றைய நிதி அமைச்சர் குலாம் முஹம்மத் கண்டி திருகோணமலை வீதி 279ஆம் இலக்க இல்லத்தில் இந்த மண்டபத்தை, காலம் சென்ற பாகிஸ்தான் ஸ்தாபகர் முஹம்மத் அலி ஜின்னாவின் நினைவாக ஆரம்பம் செய்து வைத்தார். சில வருடங்கள் மாத்திரமே சீராக அது தொடங்கப்பட்ட நாட்களில் இருந்து இயங்கிவந்த போதிலும் பின்னர் அண்மைக்காலமாக வெளவால்கள் உறைவிடமாகி இடிந்து விழும் நிலைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்தப் பரிதாபகரமான நிலையை உணர்ந்த முஸ்லிம் விவகார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் அஸ்வர், 12 இலட்சம் ரூபாயை தந்து இதனைப் புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ள சம்பவம் இப்பகுதி மக்களுக்கு தேன் வார்த்தது போல் ஆகிவிட்டது. இன்னும் சில நாட்களில் எல்லோருக்கும் பொது மண்டபமாக இது அமையப்போகின்றது. ■

## மலையக மக்கள் அவலம்! தினேஷ் குணவர்தனாவுக்குத் தெரியாமல் போனது ஏன்?
### மலையக மக்கள் முன்னணி கேட்கிறது

2.11.1993 அன்று “கடன் பெற்றாவது இந்தியா கடவுச் சீட்டுடன் மலையகத்திலுள்ள 169000 பேரையும் விமானமூலம் அனுப்புக” என்று பாராளுமன்ற உறுப்பினர் திரு. தினேஷ் குணவர்தனா பேசிய பேச்சு மனிதாபிமானமற்ற பேச்சாகவே இருக்கும் என்று சுட்டிக்காட்ட மலையக மக்கள் முன்னணி விரும்புகிறது.

150 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில், மனித காலடியே படாத வெறும் காடுகளாக இருந்த பிரதேசங்களை அழித்து செல்வம் கொழிக்கும் பூமிகளாக மாற்றி, இந்த நாட்டின் தேசிய வருமானத்தில் கணிசமான பங்கை ஈட்டிக்கொடுப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் என்பதை, திரு. தினேஷ் மறந்து விட்டார் போற் தெரிகிறது.

ஒரு பிரஜை தொடர்ச்சியாக ஒரு நாட்டில் 5 வருடங்கள் வசித்தாலே அந்த நாட்டின் குடியுரிமை வழங்கப்படவேண்டுமென்று சர்வதேச சட்டம் கூறுகிறது. உலக நாடுகள் இன்றும் அதை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தளவில், கடந்த 150 வருடங்களாக அதே லயன் காம்பிராக்களில், ஏனைய சமூக மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும், அதே வாழ்வியல் சூழல், அடக்குமுறைக்குட்பட்டு வாழ்ந்து வருவது திரு. தினேஷ் குணவர்தனாவுக்குத் தெரியாமற் போனது ஆச்சரியமே.

மலையக தோட்டத் தொழிலாளர்கள் ஏன் கடவுச்சீட்டுப் பெற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்? அவ்வாறு விரக்தி ஏற்பட என்ன காரணம் என்பவற்றை ஆய்வு செய்யாமல், பெரும்பான்மையினரைத் திருப்திப்படுத்தவும், மலையக மக்களுக்கெதிராக அவர்களைத் தூண்டி விடவும் ஏதுவான வகையில் கருத்துத் தெரிவிப்பது,பேசுவது தொழிலாள வர்க்கத்தைப் பெரும் எண்ணிக்கையில் கொண்ட மலையக மக்களை வெறுப்புணர்வுக்கே இட்டுச் செல்லும். இவ்வாறான பேச்சு திரு. தினேஷின் அரசியல் முதிர்ச்சியைப் பற்றி சந்தேகம் கொள்ளவே வைக்கும்.

40 முதல் 50 வீதமான தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையில் பிறந்தவர்கள் என்று 1928ம் ஆண்டு டொனமூர் கமிஷன் கூறியது. 60 வீதமானவர்கள் இலங்கையில் பிறந்தவர்கள் என்று 1938ம் ஆண்டு ஜாக்சன் அறிக்கை கூறியது. 1946ம் ஆண்டு வெளியான சோல்பரி அறிக்கை 80 வீதமானவர்கள் இலங்கையில் பிறந்தவர்கள் என்று கூறுகிறது.

இவ்வாறான வரலாற்றை அறியாது,உண்மையான சூழ்நிலைகளைப் புரிந்து கொள்ள முற்படாமல், இந்நாட்டுக்காகவே, சகலதையும் இழந்து அர்ப்பணித்த மக்களைப் பலவந்தமாக நாடு கடத்த வேண்டும் என்னும் கருத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறு மலையக மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

## ‘கம் உதாவ’வை முன்னிட்டு கம்பஹாவில் புதிய தொலைபேசி இணைப்புக்கள்!

(கம்பஹா நிருபர்)

“கம் உதாவ” (கிராம எழுச்சி) இம்முறை கம்பஹா மாவட்டத்தில் நடைபெறவிருப்பதை முன்னிட்டு இம்மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராமப்புற வீதிகள் புனரமைப்பு, கிராமியக்கைத்தொழில் ஊக்குவிப்பு, காணிப்பகிர்வு, வீடுகள் புனரமைக்க கடனுதவி ஆகிய செயல் திட்டங்கள் துரித கதியில் செயற்படுத்தப்படுகின்றன.

பிரஸ்தாப திட்டங்களில் விஷேட அம்சமாக கம்பஹா மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் கிராமியத் தொலைபேசி இணைப்பு ஏற்பாடு முக்கியமானதாகும். ஏனெனில் கிராமப்புறங்களிலுள்ள நடுத்தர வர்க்கத்தினரில் பெரும்பாலானோர் புதிதாக வழங்கப்படவுள்ள தொலைபேசி இணைப்புக் கோரி விண்ணப்பித்து வருகின்றனர்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்


விளம்பரப் பகுதி

SARIKA TEX
Ladies Tailoring
24 மணிநேரத்தில்
சாறி பிளவுஸ்
சல்வார் கமீஸ்
உங்கள் உடலமைப்புக்கேற்றபடி
நவீன முறையில் தைத்துக்கொள்ள
Hewa Shopping Complex
No. 69/5-1/1, 1st Floor,
Galle Road,
Dehiwela South.



மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
33, Daily fair Complex, NUWARA ELIYA.
Dial: 052-2508 & 3093
Celltel. 072-26088, 078-61933

COLOMBO BRANCH:
26, CHARLYMONT ROAD,
WELLAWATTA.
DIAL:01-583250. 078-71243 FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.


## தமிழ் கொலைக்கு இடமளிப்பதா?
## தினமுரசை ஏந்தியபடி உறுப்பினர் ஆவேசம்!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபையில் தினமுரசின் செய்தி பிரஸ்தாபிக்கப்பட்டது.

கடந்த அக்டோபர் மாதம் 31ம் திகதி வெளியாகிய 23ஆவது தினமுரசு வாரமலரில் 4ஆம் பக்கத்தில் வெளியான "மாகாண சபை கவனித்தால் என்ன?" என்ற செய்தி தொடர்பாக மாகாண சபை கண்டி மாவட்ட உறுப்பினரான திரு. ஆர். தங்கவேல் தினமுரசைக் கையில் ஏந்தியவாறு, சிறப்புரிமைகள் என்ற அம்சத்தின் கீழ மாகாண சபை மகாவலி நுழைவாயிலின் பெயர்ப்பலகையில் மாகாண சபை எழுதப்பட்டுள்ள "மஹாவெலி ஆரு" என்ற பதத்தில் தமிழ்க்கொலை இடம் பெற்றிருப்பதை மிகுந்த ஆவேசத்துடன் சுட்டிக்காட்டினார். அவ்வேளையில் சபைக்கு பிரதித் தலைவரான திரு.வீ.புத்திரசிகாமணி தலைமை தாங்கினார்.

திரு.தங்கவேல் ஒலிவாங்கிக்கு முன்னால் எழுந்து பேச முற்பட்ட பொழுது நீங்கள் சிறப்புரிமை விடயத்தின் கீழ்த்தானே பேசப்போகின்றீர்கள் என வினவினார், திரு.புத்திரசிகாமணி.

திரு. தங்கவேல் "ஆம் ஐயா!" எனப் பதில் வந்தது. "தமிழ்க் கொலைகள் நாம் எல்லோரும் செல்லும் நுழைவாயிலில் இடம் பெற்றிருப்பது எமக்கு வேதனையைத் தருகின்றது. கொட்டை எழுத்தில் எழுதப்பட்டுள்ள இந்தப் பிழையைக் கண்டு பலரும் விசனப்படுகிறார்கள். எனவே இந்தப் பிழையை முரசு சுட்டிக்காட்டியிருப்பதை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்" எனக் கூறி தினமுரசை சபையில் சமர்ப்பித்தார்.

இம் மாகாண சபையில் தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் இருந்தும் கூட சிங்களத்திற்குரிய தமிழ் மொழிபெயர்ப்பு இடம் பெறாதிருப்பது குறித்து கவலையுடன் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது எனவும் தெரிவித்து இது போன்ற தவறுதல்களுக்கு இந்தச் சபை இடம் கொடுக்க கூடாதெனவும் வலியுறுத்திப் பேசினார்.

திரு.புத்திரசிகாமணி, இவ்வாறான தவறுகள் இடம் பெறுவதை நிவர்த்திக்க முயற்சிப்போம் எனத் தெரிவித்தார்.

## 1 கோடி செலவில் ஆலயப் புனரமைப்பு!

(நுவரெலியா நிருபர்)

ஆவெலியாவில் உள்ள 100 வருடப் பழமை வாய்ந்த ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவில் திருப்பணிவேலைகள் நடைபெற்று வருகின்றன.

சுமார் ஒரு கோடி ரூபா செலவில் ஆலயத்தை சிறப்புற திருத்தியமைக்க திட்டமிட்டு வேலைகள் ஆரம்பித்துள்ளன. அராலியூர் சிற்பக்கலைத் திலகம் மா.பன்னீர்செல்வம் திருப்பணி வேலைகளை பொறுப்பெடுத்துள்ளார்.

நுவரெலியாப் பகுதியில் உல்லாசப் பயணிகளையும் ஈர்த்துவரும் திருத்தலமான ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம் மேலும் பொலிவு காணப்போகிறது.

## புதல்வி மீது பாசம் காட்டலாம் பதவி கொடுக்கலாமா?
## நீதி கேட்கிறார் ஆயுர்வேத ஊழியர்

(திருகோணமலை நிருபர்)

முறைப்படி மருந்துக் கலவையாளர் பதவிக்குத் தேர்ந்தெடுக்க முதுநிலைப்படி காத்திருக்கும் தகுதியான ஊழியர்களைப் புறக்கணித்து வெளியிலிருந்து செல்வாக்கு மிக்க நபர் ஒருவரின் புதல்வியை நியமனம் செய்தது எவ்வகையில் நியாயமானது? இவ்வாறு கோரும் கடிதமொன்றை வடகிழக்கு மாகாண ஆயுர்வேத ஊழியரொருவர் வடகிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவுக்கு எழுதியுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் மாகாண சுகாதார அமைச்சு, கொள்கை திட்டமிடல் அமைச்சு உட்பட பல்வேறு இடங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

தகுதியானதாலும், வேறு பலரும் காத்திருக்க ஒரு பிரதேசசபை உறுப்பினர், நீதியற்ற முறையில் தனது புதல்விக்கு பின் கதவால் நியமனம் கொடுத்தது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. இதனால் சேவைமூப்பு, சேவை முன்னுரிமை என்பவற்றுக்கு ஏதாவது அர்த்தம் உண்டா? என்று அந்த ஊழியர் தினமுரசுக்குத் தெரிவித்தார்.

## சந்திரசேகரனின் சத்தியப்பிரமாண விசயம்
## மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை!

(கண்டி நிருபர்)

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் மத்தியமாகாண சபைக்கு சுயேச்சை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவருமான திரு. பெரியசாமி சந்திரசேகரன் இன்னும் 'இந்தச் சபைக்கு வந்து சத்தியப் பிரமாணம் எடுக்கவில்லையாதலால் அதற்கான சகல நடவடிக்கைகளையும் சபைத் தலைவர் மேற்கொள்ள வேண்டுமென மத்திய மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரும் மற்றொரு எதிர்க்கட்சி உறுப்பினரும் மாகாண சபையில் கோரிக்கை விடுத்தனர்.

மத்திய மாகாண சபைக் கூட்டம் திரு. சரத் கோங்கஹகே தலைமையில் நடைபெற்றபொழுது மேற்கண்ட வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

திரு சந்திரசேகரன் 17.5.93ல் நடைபெற்ற ம.மா சபைத் தேர்தலில் வெற்றியீட்டி சபைக்குத் தெரிவானார். 20.5.93 அரச வர்த்தமானியில் இவரது தெரிவு குறித்து தேர்தல் ஆணையாளரினால் வெளியிடப் பட்டது. திரு.சந்திரசேகரன் ஜே.ஓ.ஸி குண்டு வெடிப்பு சம்பந்தமாக வரதன் என்பவருக்குப் புகலிடம் அளித்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு அவர் மீது இப்பொழுது வழக்குத் தொடரப் பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை இப்பொழுது ஓரளவு முடியுந்தறுவாயில் இருப்பதாலும் அவர் இதில் சாட்சியம் அளிப்பதாலும் திரு. சந்திரசேகரன் சத்தியப் பிரமாணம் எடுப்பதில் தாமதங்கள் நிலவுவதாக சபையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு.விஜய விக்ரமரத்னவும் மற்றொரு எதிரணி உறுப்பினரான திரு.குறுப்பு ஆராச்சியும் கடந்த கூட்டத்தில் பிரஸ்தாபித்தனர்.

இவர் சத்தியப்பிரமாணம் எடுப்பது தொடர்பாக இந்தச் சபையில் பல மாதங்களாக பிரஸ்தாபிக்கப்பட்ட போதிலும் கூட சபைத் தலைவரும் தன்னாலியன்ற முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கின்ற போதிலும் தொடர்ந்து இவ்விடயம் குறித்து கவனமெடுக்கும் படியும் உறுப்பினர்கள் தலைவரைக் கேட்டுக்கொண்டனர்.




சலேவா அரிசானோ என்பது தான் இந்த மாமிசமலையின் பெயர். அமெரிக்க இளம்வீரன் ஒருவன் தன் பலத்தைப் பரிசோதிக்க இந்த மலையை அசைத்துப் பார்க்கிறான். நடக்கிற காரியமா இது?

## தமிழ் கலைஞர்களுக்கு இடம் இல்லையா?

எமது தொலைக்காட்சியில் உள்ள நான்கு ஒலிபரப்பிலும் தமிழ் நிகழ்ச்சிகள் மிகவும் குறைவாகவே உள்ளன. வாராவாரம் தமிழ் இரசிகர்களை வருத்தும் குறை இது தான்.

வாரத்தில் சனி, ஞாயிறு காலையில் சுப உதேசன, ஆயுபோவன் போன்ற சுதம்ப நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாவதை அறிவோம். இதில் சிங்கள கலைஞர்களை வாரம் ஒருவராக பேட்டி காண்பதையும் அறிவோம். ஆனால் இன்றைய நாள் வரை இதில் தமிழ் கலைஞர்களை பேட்டி கண்டதே இல்லை.

ஏன் நம் நாட்டில் தமிழ் கலைஞர்களே இல்லையா? அல்லது அதை இரசிக்கத் தான் இரசிகர்கள் இல்லையா?

மாதத்தில் குறைந்தது ஒரு வாரத்தை தமிழ் கலைஞர்களுக்காக ஒதுக்கினால் என்ன? இனியாவது தமிழ் இரசிகர் கூட்டத்தின் ஏக்கத்தை இது தொடர்பான அதிகாரிகள் 'புரிந்து கொள்வார்களா?

செல்வி சரவணேஸ் டெயிசி
கலவாணை.

## பாதிக்கப்பட்ட ஆலயங்கள்!
## இந்து கலாசார அமைச்சர் கவனிப்பாரா?

தொடர்கதையாகிவிட்ட வன் செயல் காரணமாக மூதூர் பிரதேசத்திலுள்ள பல இந்து ஆலயங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு, கவனிப்பாரற்ற நிலையில் சோபை இழந்து காணப் படுகின்றன.

பல ஆலயங்கள் பூசை எதுவுமின்றிப் பூட்டிக்கிடக்கின்றன.

இந்நிலையில் தமிழ் மொழி, இந்து சமயம் ஆகியனவற்றின் வளர்ச்சிக்காக அரிய பல சேவைகளைச் செய்து பாராட்டுப்பெறும் எமது அமைச்சர் மாண்புமிகு பி.பி.தேவராஜ் அவர்கள், இப்பிரதேச இந்து ஆலயங்களைப் பற்றியும், இவைகளுக்கு நிதி உதவி அளிப்பது பற்றியும், ஆலோசித்து ஆவன செய்ய வேண்டுமென்பதே இங்குள்ள இந்து மக்களின் கோரிக்கையாகும். அமைச்சர் அவன செய்வாராக.

கே.எஸ். துரை
மூதூர்.

புகார் பெட்டி

## இங்குமா இக்கொடுமை

SRI LANKA RED CROSS SOCIETY
ශ්‍රී ලංකා රතු කුරුස සමාජය
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்புக் கிளையினால் எமது பிரதேசத்தில் 01.11.93 தொடக்கம் 05.11.93 வரை தனது கொடிதினத்திற்கென அச்சிடப்பட்ட கொடியிலே எமது தமிழ் மொழியானது மிகவும் கொடூரமான நிலையில் இக்கொடியிலே அச்சிடப்பட்டிருந்தது. இச்செயல் எமது தமிழ் மொழிக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே இதனை நான் மட்டுமல்ல நீங்களும் அறிய வேண்டாமா? இதிலே இலங்கை செஞ்சிலுலைச் சங்கம் என அச்சிடப் பட்டுள்ளது.

சிறு எழுத்துப்பிழைகளைப் பெரிது படுத்த முடியாது. ஆனால் கொடி தினத்தன்று வெளியான கொடியில் ஏற்பட்ட தவறு என்பதால் கண்டிக்கப்பட வேண்டியதாகிறது.

ச.தர்முதாஸ்
வாழைச்சேனை.

## கட்டப்படுகிறது கால்வாய்! நன்றி!!
## இதையும் கொஞ்சம் கவனியுங்கள்

கல்முனை கடற்கரைப் பள்ளி வீதியின் குறுக்குப் பாதையின் பரிதாப நிலை பற்றி முரசு 22 வெளியிட்டிருந்த புகாரை அடுத்து உடனடியாக இவ்வீதிக்கு கால்வாய் கட்டும் வேலைகள் நடந்து கொண்டிருந்தாலும் இவ்வீதியில் வசிக்கும் மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியே செல்ல அவர்கள் வீட்டு வாசல் முன் கொங்றீட் பாலம் போடவேண்டும். ஆனால் இது எங்கள் வேலையில்லை என்றும் வீட்டுச் சொந்தக்காரர்கள்தான் அதைப் பார்க்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது உண்மையாக இருந்தாலும் குறிப்பிட்ட மக்களின் நிலையையும் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதாவது பாலம் போடுவதென்றால் கல், மண், கம்பி, சீமெந்து, பலகை போன்ற பொருட்கள் அவசியம் தேவை. இதனை வசதியுள்ளவர்கள் வாங்கி அவர்கள் வீட்டுக்கு முன் பாலம் அமைத்துக் கொள்வார்கள். ஆனால் இதற்கு வசதி இல்லாத மக்கள் என்ன செய்வார்கள்...? பாலம் அமைக்க முடியாதவர்கள் கால்வாயைக் கடந்தே போக்குவரத்துச் செய்ய வேண்டும். அதற்கு எல்லாராலும் முடியுமா? வயோதிபர்கள், குழந்தைகள் கால்வாயைக் கடக்கும்போது தலறி விழுந்து காலைக்கையை உடைத்துக் கொண்டால் வைத்தியச் செலவுக்கு யார் பணம் கொடுப்பார்கள்? எனவே கால்வாய் கட்டுவதோடு குடியிருப்பு வீடுகளுக்கு முன் பாலம் அமைக்கவும் வேண்டும். அதற்கு சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுக்க வேண்டும்.

செல்வி மஸாஹினா ஆதம்பாவா
கல்முனை-03.

## முரசின் செய்தியால் பலன்!

ஒக்டோ.31-நவம்.06 தினமுரசில் புகார்ப் பெட்டியில் பிரசுரிக்கப்பட்ட, "பரீட்சை திணைக்களம் கொஞ்சம் கவனிக்க வேண்டும்." என்ற செய்திக்கு பலன் கிடைத்துள்ளது.

முரசின் செய்தி வெளியாகி ஒரு வாரத்தால், பரீட்சைத் திணைக்களம் கே.கே.எஸ் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட்டிருப்பது, தினமுரசின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது என்றே கூறவேண்டும். எனவே, முரசிற்கு எனது நன்றிகள் பல.

சம்மாந்துறை ஏ. சஹாப்டீன்.

## திகைப்பூட்டும் சிதை தமிழ்!
## இது எப்படி இருக்கிறது?

பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள சில அரசகாரியாலயங்களின் பெயர்ப்பலகைகள் இப்படிக் காட்சி தருகின்றன:

1. மாவடட சுகதாரா வைத்திய பணிப்பாணர் காரியாளளம் பொலநறவை.
(திருத்தம்- மாவட்ட சுகாதார வைத்தியப்பணிப்பாளர் காரியாலயம் பொலன்னறுவை)
2. மாவட்டாம் வனம் காரியாழயம- பொழநறுவா.
(திருத்தம்- மாவட்ட வனக்காரியாலயம்- பொலன்னறுவை)
3. மாவடட வைத்திய அதிகரியின காரியாளளம்- பொலநறவை
(திருத்தம்- மரவட்ட வைத்திய அதிகாரியின் காரியாலயம்- பொலன்னறுவை)
4. அரசக்க விவசயா செவைகள அளுவளகம்- பொளநருவா
(திருத்தம்- அரசாங்க விவசாய சேவைகள் அலுவலகம்- பொலன்னறுவை)
5. இலங்கய் கப்புருதீ குட்டுத்தாபணம- போலநறவய
(திருத்தம்- இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம்- பொலன்னறுவை)

இது குறித்து சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் நடவடிக்கை எடுத்து "தமிழ் மொழிக்கொலையை" இனியாவது தடுக்குமா?

ஏ.இபுனுசாக்கானி-பொலன்னறுவை.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# பத்திரிகைச் சுதந்திரமும் புலிகளும்!

—நாரதர்

தெற்கில் இப்போது சிங்கள-ஆங்கிலப் பத்திரிகைகள் சில தங்கள் முகங்களை மாற்றிக்கொள்வது போலத் தெரிகிறது.

வடக்கே சென்று நிலைமைகளை அறிந்துவரவும் சிங்கள நிருபர்கள் மத்தியில் ஆர்வம் தோன்றியிருக்கிறது.

சிலர் சென்று வந்ததும் மேலும் பலர் செல்லத் துடிப்பதும், புலிகள் கொடுத்த புகைப்படங்களை கொண்டுவந்து நான் முந்தி நீ முந்தி என்று பிரசுரிப்பதும் ஒரு புதிய போக்காகியிருக்கிறது.

புலிகளும் சிங்களப் பத்திரிகையாளர்களை புறக்கணிக்கவில்லை. வரவேற்று பேட்டி கொடுத்திருக்கிறார்கள். புகைப்படங்கள் கொடுத்து அனுப்பியிருக்கிறார்கள்.

சிங்கள மக்கள் மத்தியில் புலிகள் பற்றிய அனுதாபம் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

சிங்கள் பத்திரிகைகளில் முன் பக்கத்தில் புலிகளின் புகைப்படங்கள் பிரசுரமாவது புலிகள் போராடுவது நியாயம் என்கின்ற கருத்தை சிங்கள மக்களிடம் தோற்றுவிக்கப் போவதும் இல்லை.

ஆனால், இலங்கை இராணுவத்தினரை ஆட்டிப்படைக்கும் புலிகள் என்ன செய்கிறார்கள், எப்படி இருக்கிறார்கள், எப்படி செயல்படுகிறார்கள் என்பதை அறியும் ஆவல் சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

அந்த ஆவலை பூர்த்தி செய்து செய்திகளையும், படங்களையும் பிரசுரிப்பது பத்திரிகைகளின் தேவையாகிவிட்டது.

"சிங்கள மக்கள் எங்கள் எதிரிகளல்ல" என்று புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் கூறியிருக்கிறார்.

என்றாலும், நூற்றுக்கணக்கான சிங்கள மக்களை புலிகளே படுகொலை செய்தனர் என்று ஆழமாகப் பதிந்துள்ள வெறுப்பை திரு. பாலசிங்கத்தின் பேட்டி அழித்து விடாது.

சிங்களம்-ஆங்கில பிரபல பத்திரிகைகளும் புலிகள் செய்வது நியாயம் என்று கருத்துச் சொல்லவில்லை.

புலிகள் இப்படியிருக்கிறார்கள், புலிகள் இப்படிச் சொல்கிறார்கள் என்றுதான் செய்திகளையும், பேட்டிகளையும் வெளியிடுகின்றன.

ஆனால், முன்புபோல சிங்களப் பத்திரிகையாளர்கள் வடக்கே புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு செல்ல இப்போதெல்லாம் பயப்படுவதில்லை.

புலிகளும் தாம் பலமாகவே உள்ளோம் என்பதை தெற்கில் வெளிப்படுத்த சிங்களப் பத்திரிகையாளர்களை வரவேற்கிறார்கள்.

தமது சாதனைகளைக் காட்டி புகைப்படங்கள் எடுக்க அனுமதித்து தமது நேர்த்தியான பிரச்சாரத்தை செய்கிறார்கள்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது புலிகளின் தாக்குதல் திறனை ஒரு பிரபல ஆங்கிலப் பத்திரிகை வியந்திருந்தது.

இராணுவத்தரப்பினர் அதனால் அப்பத்திரிகை மீது சற்றுக்கசப்படைந்ததாகவும், இராணுவத் தளபதி கோபமடைந்ததாகவும் கூட பல கதைகள் பத்திரிகைகள் வட்டாரத்தில் பேசப்பட்டன.

முன்பு போல் அல்லாமல் படையினர், புலிகள் என்ற இரு தரப்பினரதும் செய்திகளையும், இரு தரப்பினரதும் யுத்தத்திறனையும் சில பத்திரிகைகள் வெளியிட முனைந்துள்ளமை செய்திகளின் நம்பகத் தன்மைக்கு வழிவகுக்கின்றன.

இதே சமயம் போர்முனைச் செய்திகளுக்கு தணிக்கை வரும் என்றும் ஒரு செய்தி அடிபட்டது. பின்னர் அப்படி எதுவும் நடக்கவில்லை.

வடக்கே புலிகள் சாதாரண செய்தியில் இருந்து, போர்முனைச் செய்திவரை தமது விருப்பப்படியே வெளியாகும் நிலையை ஏற்படுத்திவைத்திருக்கிறார்கள்.

வடக்கே இருந்து வெளியாகும் தமிழ் பத்திரிகைகள் புலிகள் சொல்வதைத்தான் போர்முனைச் செய்திகளாகப் போடமுடியும்.

புலிகள் பின்வாங்கினாலும் கூட புலிகளின் அதிரடி, இராணுவம் அதிர்ச்சி என்றுதான் செய்தி போட்டாக வேண்டும். இல்லாவிட்டால் பத்திரிகையை புலிகளே பொறுப்பேற்பார்கள்.

"மண்குதிரையை நம்பி" என்று ஒரு ஆசிரியர் தலையங்கம் எழுதியதற்காக யாழ்ப்பாணத்தின் பழம்பெரும் பத்திரிகையான ஈழநாட்டுக் காரியாலயத்தை குண்டுவைத்துத் தகர்த்தவர்கள் புலிகள்.

இந்திய அமைதிப்படையோடு இணக்கமாக நடந்து சார்பான செய்திகளை வெளியிடுவதாகக் கூறி பழம்பெரும் பத்திரிகையாளரான சண்முகலிங்கத்தை புலிகள் கொலை செய்தனர்.

ஆக, புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகளின் விருப்பப்படி எழுதும்வரை மட்டுமே பத்திரிகையாளர்கள் சுவாசிக்க முடியும். மீறினால் மூச்சு நின்றுவிடும்.

சிங்களப் பத்திரிகையாளர்களை அழைத்து புலிகள் பேட்டி கொடுப்பார்கள். கொடுத்தும் இருக்கிறார்கள்.

இதே புலிகள் அமைப்பினர் சில காலத்தின் முன்னால் கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றின் நிருபர் யாழ் சென்று நிலமைகளை அறிய முற்பட்ட போது பிடித்துத் தடுத்து வைத்து விசாரணை நடத்தினார்கள்.

சம்பந்தப்பட்ட பத்திரிகையும் அதனைக் கண்டிக்கவில்லை. ஒரு வேளை அரசாங்கம் தமது நிருபரை தடுத்து விசாரித்திருந்தால் தடித்த எழுத்துக்களில் அதனை வெளியிட்டிருக்கக்கூடும்.

அந்தளவுக்குத் தமிழ் பத்திரிகைகள், தமிழ் பத்திரிகையாளர்கள் விடயத்தில் புலிகள் ஒரு கண்டிப்பான போக்கை கடைப்பிடிக்கிறார்கள்.

தமிழ் பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக சிந்தித்தால் புலிகள் ஏன் கோபப்படுகிறார்கள் என்று தெரியவில்லை. அதே சமயம் தமிழ் பேசும் மக்களது அரசியல் அபிலாசைகளுக்கு எதிராகப் பேசும், எழுதும் பத்திரிகையாளர்கள் பிறமொழிகளை பேசுவோராக இருந்தால் புலிகள் வரவேற்று உபசரிக்கிறார்கள்.

சண்முகலிங்கம் சுதந்திரமாக எழுதக் கூடாது. சந்திரா பண்டார அல்லது சக்நொரிஸ் சதந்திரமாத எழுதலாம். அதனை புலிகளும் பாராட்டுகிறார்கள். இதுதான் கொடுமை.

"இராணுவத்தளபதி ஆங்கிலப் பத்திரிகையாளரை மிரட்டல்" என்று வடக்கே புலிகள் செய்தி வெளியிடுகிறார்கள்.

பத்திரிகைச் சுதந்திரத்தை இராணுவமோ அல்லது அரசாங்கமோ அச்சுறுத்தக்கூடாது



என்பதில் இருவித கருத்துக்கே இடமில்லை.

எனினும், இராணுவத்தின் தளபதி கூட பத்திரிகை சுதந்திர விடயத்தில் ஒரு வரையறைக்கு மேல் தலையிட முடியாது என்கின்ற நிலைமை தெற்கே இருக்கிறது.

ஆனால், வடக்கே, புலிகளின் சாதாரண உறுப்பினர் ஒருவரே தான் நினைத்ததை பத்திரிகையாளர்கள் மீது சாதிக்க முடியும்.

எனவே, பத்திரிகையாளர்களை மதித்தல், பத்திரிகைச் சுதந்திரத்தைப் பேணுதல் என்கின்ற விசயங்களில் புலிகள் தமக்கு அக்கறையிருப்பதாக கூறுவது ஏற்கத்தக்கதல்ல. வேண்டுமானால் இனிவரும் காலங்களில் தமது அணுகுமுறைகளை அவர்கள் மாற்றிக் கொண்டால் பத்திரிகைச் சுதந்திரம் பற்றி பேசும் தகுதி பெறுவார்கள்.

மறுபுறம்- தெற்கே தமது வீர-தீர தோற்றப்பாட்டை நிறுவிக்காக்கும் வகையில் படையினர் தமது இழப்புக்களை மறைக்க முயல்வதும் கவனிக்கத்தக்கது.

போர் முனையின் உண்மை நிலவரங்களை எழுதுவதால் யார் கசப்படைந்தாலும் அது தவறான அணுகுமுறையாகவே இருக்கும்.

மக்களிடம் உண்மையான, நேர்மையான செய்திகள் சென்றடைவதை எவரும் தடுக்க முயலக்கூடாது.

வடக்கே புலிகள் கைக்கொள்ளும் அணுகுமுறையை தெற்கே படையினரோ, அரசாங்கமோ கைக்கொள்ள முயன்றால் அது மக்களின் அதிருப்திகளையே சம்பாதிக்கும்.

இப்போது மக்கள் செய்தியறிய பல வழிவகைகள் இருக்கின்றன.

விஞ்ஞான முன்னேற்றத்தை பயன்படுத்தி உடனுக்குடன் செய்திகளை மக்களுக்கு எடுத்துக் கொடுப்பது பற்றி உலகச் செய்தி நிறுவனங்கள் புதிய புதிய யோசனைகளை தேடிக் கொண்டிருக்கின்றன.

ஆனால், நாமோ மக்களுக்கு செய்திகள் சொல்லாமல் தடுப்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம். எதிலுமே பின்தங்கி நின்று சிந்திப்பதே நமது விரிந்த மனப் போக்குகளுக்கு தடையாக இருக்கிறது.

அரசும் சரி-புலிகளும் சரி இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். ■

# பூநகரியில் புலிகளின் பாய்ச்சல்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்



பூநகரியில் புலிகள் ஒரு வெற்றிகரமான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை தமக்கே வெற்றி என்று தெற்கில் நிரூபிக்க இராணுவத்தினர் பெரும் பாடுபட வேண்டியிருந்தது.

கிழக்கில் புலிகள் மீது இராணுவத்தினர் தொடுத்துவரும் தொடர்தாக்குதல்கள் படைத்தலைமையினருக்கு நம்பிக்கையூட்டுவதாக அமைந்திருந்தது.

கிளாலியில் நிலைகொள்ள முடியாமல் போனாலும் கூட, 'போய்வந்தோம், புலிகளைப் பலவீனப்படுத்தியுள்ளோம்' என்று படைத் தலைமையினர் கூறக்கூடியதாக இருந்தது.

தெற்கே படையினர் குறித்து எழுந்துள்ள நம்பிக்கையீனங்களை களைத்தெறிவது ஒரு வேலை.

மறுபுறம் புலிகளின் தடை அரண்களை தாண்டி வடக்கே முன்னேற முடியும் என்ற நம்பிக்கையை படையினர் மத்தியில் கட்டியெழுப்ப வேண்டியதும் இன்னொரு வேலை.

இந்த இரண்டு வேலைகளையும் படையின் உயர் தளபதிகள் செய்தாக வேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

கடந்த சமீப மாதங்களில் படைத் தளபதிகள் அவ்வாறான வேலைகளில் தீவிர ஈடுபாடு காட்டியதையும் கவனிக்கக்கூடியதாக இருந்தது.

பாதுகாப்புச் செயலாளராக ஜெனரல் ஹமில்டன் வணசிங்க நியமிக்கப்பட்டமை, படைத் தளபதிகள் தமது சுதந்திரமான முடிவுகளின்படி செயல்பட வழி ஏற்படுத்தியமை என்று அரசாங்கமும் படை நடவடிக்கைகளில் ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்த முனைப்புக் காட்டியது.

நாட்டில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சனையே என்று கூறியதன் மூலமாக, யுத்தமே தீர்வு என்பது போன்ற அர்த்தப்பட ஜனாதிபதியும் பேசிவந்தார்.

இவ்வாறான ஒரு சூழலில் பூநகரியில் புலிகள் ஒரு பாரிய தாக்குதலை மேற்கொண்டனர்.

இராணுவம் வடக்கே வரப்போகிறது என்ற பிரச்சாரம் மூலமாக படு வேகமாக திரட்டப்பட ஆட்பலத்தை பூநகரியிலும் புலிகள் பயன்படுத்தி இருக்கிறார்கள்.

மிகவும் திட்டமிடப்பட்டு, தற்கொலைப் படையினரின் ஊடுருவும் தாக்குதலை பிரதான முதுகெலும்புப் பலமாக பாவித்து பூநகரித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

பெருந்தொகையான ஆயுதங்களோடும், ஆட்பலத்தோடும் இருந்த படையினர் நிலைகுலைந்துபோனார்கள்.

இலண்டன் பி.பி.சி. போன்ற வெளி நாட்டுச் செய்திச் சேவைகள் இராணுவத்தின் நம்பிக்கைகள் காற்றில் பறந்துவிட்டன என்று விமர்சனம் செய்திருந்தன. அந்த விமர்சனங்களில் உண்மை இல்லாமல் இல்லை.

தமது மாவீரர் தினக் கொண்டாட்ட காலங்களில் புலிகள் பாரிய தாக்குதல்களை நடத்துவது வழக்கம்.

ஆக, இராணுவத்தினருக்கும் அது நன்கு தெரிந்தும் தாக்குதலுக்குஈடுகொடுக்க முடியவில்லை.

மழைக்காலமும், போர்வைக்குள் சுருள வைக்கும் கடும் குளிருமே கெரில்லாத் தாக்குதலுக்கு ஏற்ற தருணம் என்பது படையினருக்கு புரியாமல் போனதுதான் ஆச்சரியம்.

படையினரின் அயர்ந்து போகும் நேரம் அறிந்து, பலவீனம் தெரிந்து தாக்குதல் திட்டத்தை நிறைவேற்றியது மூலம் புலிகள் தமது கெரில்லா யுத்தத் திறமையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

படைத்தலைமை கூட இவ்வாறான ஒரு தாக்குதலை எதிர்பார்க்கவில்லை என்றே தெரிகிறது.

பத்திரிகையாளர்களுக்கு தமது தரப்பு நிலை குறித்து விபரங்களை வெளியிட முடியாத தர்மசங்கட நிலையில் அதிகாரிகள் இருந்தார்கள்.

சிலர் பத்திரிகையாளர்களிடமே விபரங்களை கேட்டறிய முற்பட்டார்கள்.

மொத்தத்தில் பூநகரித்தாக்குதல் மூலமாக புலிகள் ஒரு பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

அடுத்த வருடத்தில் வடக்கை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவருவது பற்றி படையினர் யோசித்துக்கொண்டிருந்த போது, வடக்கே தாம் இப்போது நிலைகொண்டுள்ள பகுதிகளை தக்கவைத்திருப்பது பற்றிய யோசனைக்கு அவர்களை புலிகள் தள்ளி விட்டிருக்கின்றனர்.

பூநகரியில் இருந்து பெறப்பட்ட பெருந் தொகையான அயுதங்கள் புலிகளுக்கு பெரிய பலம்.

பூநகரித்தாக்குதலின் வெற்றியானது உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் புலிகளின் மீது வியப்பான பார்வையை உருவாக்கியிருக்கிறது.

மறுபுறம் - அரசுக்கு நெருக்கடியான நிலைமை. வடக்கு-கிழக்கு பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவந்து விடுவோம் என்று அரசு கூறுவதை தெற்கில் எந்தளவுக்கு ஏற்றுக்கொள்வார்கள் என்பதே பிரச்சனை.

கிழக்கே தேர்தல் நடத்தி, அடுத்தது வடக்கிலும் தேர்தல் என்று செல்லக்கூடிய சூழ்நிலையில் தமது சாதனையை வெளிப் படுத்தலாம் என்று அரசாங்கம் நினைத் திருக்கலாம். இப்போது பெரிய அடி விழுந்திருக்கிறது.

எதிர்க்கட்சிகள் துள்ளப் போகின்றன.

அரசாங்கத்தால் புலிகளை அடக்க முடியவில்லை என்று உரத்துச் சொல்லப் போகின்றன.

ஏற்பட்டுள்ள சரிவில் இருந்து தம்மை மீளவைக்க படையினருக்கு நீண்ட அவகாசம் தேவைப்படலாம் என்றே தெரிகிறது.

இரு தரப்பிலும் கணிசமான இழப்புகள். முடிவு எங்கே என்று தெரியாத யுத்தம் நீண்டுகொண்டே இருக்கிறது. இழப்புக்களும் அவ்வாறுதான். ■

## அதிரடி அய்யாத்துரை



திருமலையிலை ஒரு சாமியார் மாட்டுப்பட்டுப்போனாராம். வேறை ஒண்டும் இல்லை. நாலு காசு சம்பாதிக்கும் ஆசை. கள்ளமரம் கடத்தியிருக்கிறார் சுவாமிகள். தலைநகரில் அரசியல் செல்வாக்கு எண்டு முந்தி அவரை மடக்காமல் விட்டிருந்தவையாம். இப்ப தலைநகரில் இருந்தும் சிக்னல் கிடைச்சுத்தான் சுவாமிகளின் மோசடியை நாறவைச்சிருக்கினம். சோக்கான சுவாமிதான்.

திருமலை எண்டவுடனை இன்னொரு விசயத்தையும் சொல்ல வேணும். கற்றுக்கொடுக்கிற நிறுவனம் நடத்தும் சிலர் அங்கேயே மினி சினிமாவும் நடத்துகினம். போடுற படங்கள் இளவட்டங்களுக்கு பிடிக்குதோ இல்லையோ படங்களில் வாறவைக்கு துணி பிடிக்கிறேல்லையாம். இன்னொரு விசயம் கற்றுக்கொடுக்கும் நிலையப் போர்வையில் கெட்டுக் குட்டிச்சுவராக்கும் விசயத்தைக் கவனிக்க வேண்டியவை கவனிக்கிறேல்லே. வரியும் இல்லாமல் சினிமா காட்டுகினம். உருப்பட்டமாதிரிதான்.

மாவீரர் தினம் எண்டு இரண்டு எழுத்தாளர் அறிவிச்சா கொஞ்சம் அலேட்டாய் இருந்திருக்கலாம். இருக்கேல்ல. இனி விசாரணை அது இது எண்டு வைச்சு என்ன செய்யிறது.

ஒரு கிழமையிலை ரெண்டு எழுத்தாளர் யாழ்ப்பாணத்திலை ஏழாயிரம் பேர் திரட்டினவை எண்டு ஒரு தகவல். ஒரு படம் காட்டுகினமாம். பார்க்கிற சனம் கண்ணீர் விடுகுதாம். சிலர் தாங்களாப் போய் இயக்க வாகனத்தில ஏறி இருக்கினமாம். பிரசார யுக்தியிலும் அவை இரெண்டு எழுத்துத்தான்.

மைந்தனுக்கு பதவி கொடுக்கிற விசயத்திலை பச்சை வட்டாரத்துக்குள் சின்னச் சின்ன மனக்குறையளாம். பழைய ஆட்கள் சிலர் வருத்தப்படுறமாதிரியும் ஒரு கதை. மகாவலியாரை கொண்டுவந்து பதவி கொடுத்தாலும் பரவாயில்லை. அவர் எங்கட பழைய ஆள் எண்டமாதிரிப் பேசுகினமாம்.

கிரிக்கெட்டிலை ஸ்கோர் போடுற மாதிரி யுத்தத்திலையும் நடக்குமோ. ஒவரு சைட்டும் தாங்கள் இவ்வளவு பேரை விழுத்திப்போட்டம் எண்டு கணக்குச் சொல்லேக்கை இந்த ஸ்கோர் போடுறவையையும் கொண்டுபோய் பக்கத்திலை வச்சிருக்கிறவையோ எண்டு நான் யோசிக்கிறனான். என்ன நீங்களும் யோசிக்கிறனீங்களோ?

தமிழ் அமைப்பிலை ஒண்டு அரசியல் இப்ப வேண்டாம் புனர்வாழ்வு வேலைதான் பொருத்தம், எண்டு அறிவிச்சது. வேறை ஒண்டும் இல்லைப் பாருங்கோ. சும்மா வாய் கிழியக் கத்துறதைவிட அது வருமானம் உள்ள வழி எண்டு யோசித்திருக்கினம்.

சண்டை நிக்கிற மாதிரித்தெரியேல்லை. சாகிறது யார் சிங்களமோ தமிழோ எண்டதும் பிரச்சனை இல்லை. மனித உயிர்கள்தானே. பெத்ததுகள் என்ன பாடுபடும். தேசிக விநாயகம் பிள்ளையார் அற்புதமான புலவர். அவர் எழுதின ஒரு கவிதையைப் படிக்கேக்கை எங்கட தாய்மார்தான் கண்ணிலை தெரியினம்.

"பெற்ற வயிறு துடிக்குதையா- ஒரு
பிள்ளையும் வேறு எனக்கு இல்லை ஐயா
உற்ற உறவினர் இல்லை ஐயா- என் மீது
உள்ளம் இரங்கிட வேணும் ஐயா."

உலக ரவுண்டப்

# 'நேட்டோ'வுக்கு இனி என்ன வேலை?

# புதிய திட்டம் போடுகிறது அமெரிக்கா!



அணி வகுத்து பயிற்சி பெறும் செக்கோஸ்லாவிய துருப்புகள்

இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்றபோது அமெரிக்காவும், சோவியத் யூனியனும் தோளோடு தோள் நின்று போரிட்டன.

யுத்தம் முடிவுக்கு வந்ததும் இரு நாடுகளும் இரு துருவங்களாக மாறின.

இரு நாடுகளும் தமக்கு நெருக்கமான நாடுகளை அணி சேர்த்துக்கொண்டு இரு முகாம்களாக பிரிந்து நின்றன.

தமது முகாம்களுக்குள் நாடுகளை இழுத்துப் போடும் முயற்சியில் போட்டி போட்டுக் கொண்டன.

சோவியத் யூனியன் அத்திலாந்திக் பெருங்கடல் நாடுகள் மீது பாயக்கூடும் என்று காரணம் காட்டி அந்த நாடுகளை தன் பக்கம் சேர்த்துக்கொண்டது அமெரிக்கா.

அவ்வாறு தன் முகாமில் சேர்த்துக்கொள்ளப்பட்ட நாடுகளை "வட அத்திலாந்திக் (பாதுகாப்பு) உடன்படிக்கை அமைப்பு" என்ற பெயரில் ஒரு அணியாக வைத்துக்கொண்டது. அதுவே நேட்டோ (NATO) என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறது.

சோவியத் அபாயம் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்புக்கு இனி என்ன வேலை? என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

சோவியத் யூனியன் என்ற பேரமைப்பின் அணைப்புக்குள் கிடந்த நாடுகள் தனிநாடுகளாக சிதறிவிட்டன. இப்போது ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டும் இருக்கின்றன.

ஆகவே, சோவியத் அபாயம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஆனாலும், நேட்டோ நாடுகளின் அணு ஆயுதத் தளபாடங்கள் இப்போதும் சோவியத் யூனியன் என்ற நாடு இருப்பது போல அத்திசை நோக்கியே திருப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்போது சோவியத் உடைந்து ரஷ்யா அமெரிக்காவுடன் குலவிக் கொண்டிருக்கும் காலகட்டம்.

உறவு முறைகள் மாறிய போதும் நேட்டோ அமைப்பின் படைகள் தங்கள் இரத்தத்தில் ஊறிப்போன சோவியத் எதிர்ப்புக்கருத்துக்களை கைவிடவில்லை.

கற்பனையான ஒரு எதிரியை நோக்கி தயாராக இருப்பது போன்ற நிலைதான்.

அமெரிக்காவும் நேட்டோ அமைப்பை கலைத்துவிடத் தயாராக இல்லை. அதற்கொரு புதிய தோற்றத்தை ஏற்படுத்த முயல்கிறது.

வட அத்திலாந்திக் நாடுகளின் எல்லைகளைத் தாண்டியும் நேட்டோவின் ஆதிக்கத்தை விரிவுபடுத்த அமெரிக்கா விரும்புகிறது.

அதற்கு அமெரிக்கா சொல்லும் காரணம், ஏனைய பிராந்தியங்களிலும் இராணுவ ரீதியான மோதல்களை தடுக்க உதவவேண்டும்.

இதே வேளை 'நேட்டோ' அமைப்பின் தலைமைச் செயலாளர் இப்படிக் கூறுகிறார்:

"ஐரோப்பாவைத் துண்டு போட விட மாட்டோம்... அதே போல் ரஷ்யாவையும் தனிமைப் படுத்தி விடமாட்டோம்."



பயிற்சியில் உள்ளவர்கள் ஹங்கேரிய வீரர்கள்

# நெற்றிகள் ஒட்டியுள்ள இரட்டையர்கள்!

## சில நேரங்களில் சில சங்கடங்கள்!!



ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் ஒட்டியபடியே வளர்ந்து, பெரியவர்களாகி வாழ்க்கையை கழிக்கும் போது அங்கே சுவையான சம்பவங்களுக்கும் இடமுண்டு. சோகமான நிகழ்வுகளுக்கும் இடமுண்டு. வெளியே சொல்லமுடியாத சங்கடமான சம்பவங்களுக்கும் இடமுண்டு.

லோறி-டோறி.

இருவரும் ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள்.

இருவரது நெற்றியும் பிறக்கும் போதே ஒட்டியிருந்தது.

வெட்டிப் பிரித்துவிடலாம் என்று மருத்துவர்கள் சொன்னார்கள்.

வேண்டாம், பிரிக்க வேண்டாம் என்று பெற்றவள் தடுத்துவிட்டார்.

பிரிக்கும் போது பிள்ளைகளுக்கு ஏதாவது நேர்ந்துவிடுமோ என்ற அச்சத்தில் பெற்ற மனம் பதைத்தது. வேண்டாம் என்று தடுத்தது.

ஓரளவு வளர்ந்த பின்னர் பிரிக்கலாம் என்று நினைத்தனர்.

ஆனால் இரட்டையர்களான லோறியும், டோறியும் தங்களைப் பிரிப்பதை விரும்பவில்லை.

'அண்ணன் தம்பி என்றாலும் வாயும் வயிறும் வேறு- வேறு' என்பார்கள்.

ஒட்டிப்பிறந்தாலும் லோறியும்-டோறியும் வெவ்வேறு மனப்போக்குகளைக் கொண்டுள்ளனர்.

இடைக்கிடையே இருவருக்கும் இடையே விவாதம் நடக்கும்.

விவாதம் வாக்குவாதமாகி இடைக்கிடையே பேசாமல் இருந்து விடுவதும் உண்டு.

உதடுகள்தான் பேசாதே தவிர உடல்கள் எங்கு போனாலும் இணைந்துதானே செல்ல வேண்டும்!

ஒருவர் சினிமாவுக்கோ, அல்லது தனது நண்பர் வீட்டுக்கோ செல்ல வேண்டும் என்று முடிவு செய்வார்.

மற்றவருக்கோ அந்த முடிவு பிடிக்காது. ஆனால் என்ன செய்வது?

"நான் வரமாட்டேன் போ" என்று சொல்லிவிட்டு இருக்க முடியுமா என்ன? லோறி போகாவிட்டால் டோறியும் போக முடியாது.

அதனால் ஒருவர் எடுக்கும் முடிவுக்கு மற்றவர் விரும்பியோ விரும்பாமலோ விட்டுக்கொடுத்தே ஆகவேண்டும்.

லோறிக்கு இசையில் நாட்டமுண்டு. டோறிக்கு விருப்பம் இல்லை.

லோறி கிளப்புகளுக்கு சென்று இசை நிகழ்ச்சிகளை நடத்துவார். வேறு வழியின்றி லோறியும் அனுசரித்துப் போகிறார்.

டோறிக்கு ஒரு ஆசை. குடும்ப வாழ்க்கையில் ஈடுபட வேண்டும். குழந்தை பெறவேண்டும்.

லோறிக்கு அந்த ஆசை கிடையாது. சரி ஆசைதான் வந்தாலும் கூட எப்படி குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவது? பிரச்சனையே அதுதான்.

இருவருக்கும் இப்போது 31 வயது. இருவருக்கும் தனித்தனி நண்பர்கள் இருக்கின்றனர்.



லோறியைத் தேடி வரும் நண்பர்கள் அவரோடு ஒரு மணிநேரம் அறுவைக் கச்சேரி நடத்தினால் டோறியும் அதைப் பொறுமையாக இருந்து கேட்டுத் தொலைக்க வேண்டும். "போதுமடா சாமி" என்று எழுந்து போக முடியாது.

இப்படி பல்வேறு பிரச்சனைகள், சங்கடங்கள்.

ஆனாலும் இரட்டையர்கள் சந்தோஷமாகவே இருக்கின்றனர்.

இன்னொரு விசயம்.

ஒருவருடைய இடதுபுற நெற்றி மற்றவருடைய வலது புற நெற்றியில் ஒட்டியிருப்பதால் நேருக்கு நேர் ஒருவர் முகத்தை மற்றவர் பார்க்க முடியாது.

கண்ணாடியின் உதவியைத்தான் நாட வேண்டும். ■

# இரு இனங்கள் மோதுகின்றன!

## ஆதிக்கப் போட்டியில் இன்று அதிகாரம் யாரிடம்?



மத்திய ஆபிரிக்காவில் சின்னஞ்சிறிய நாடு புருண்டி. 1962ல் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த நாட்டில் இரு இன மக்கள் ஆதிக்கப் போட்டியில் ஒன்றுடன் மற்றொன்று மோதிக்கொண்டிருக்கின்றனர். விளைவு மரணம், பசி, பிணி- அகதிப் பெருக்கம்.

1972ல் மட்டும் 100,000 பேர் வரை கொல்லப்பட்டனர். பல இலட்சம் மக்கள் வீடு வாசல்களையும் உடைமைகளையும் இழந்து அகதிகளாக்கப்பட்டனர்.

ஆபிரிக்க நாடுகளில் பல்வேறு இனப் பிரிவுகள் தனித்தனியாகப் பிரிந்து வாழப் பழக்கப்பட்டவர்கள். ஒரு இனத்துடன் மற்ற இனம் எப்போதும் பகைமை பாராட்டியே வருவது பண்டு தொட்டு தொடரும் பழக்கம். இன்றுவரை மறையவல்ல அந்தப்பழக்கம்.

புருண்டியின் மக்கள் தொகை ஏறத்தாழ 70 இலட்சம். இதில் 15 சத விகிதமானோர் துசி இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள், ஏற்கனவே புருண்டியை ஆண்டு வந்த அந்நிய ஏகாதிபத்திய வாதிகளின் நட்பினைப் பெற்றமையினால், அந்நிய ஆதிக்கம் அகன்ற போது நாட்டின் ஆதிக்கத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். பாதுகாப்புப்படையிலும் சிறுபான்மையினரான துசி இனத்தவர்களே பலத்தைப் பெருக்கிக் கொண்டனர்.

ஹூட்டு இனத்தவர்கள், அந்நிய ஆதிக்கத்தின்போது, அண்டிவர மறுத்தமையினால் துசி இனத்தவர்கள் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டனர். ஹூட்டு இனத்தவர்களை ஒதுக்க முற்பட்டதுடன் மட்டுமல்லாமல் அந்த இனத்தை தலையெடுக்க வொட்டாமல் அடிக்கு மேல் அடி கொடுக்கவும் தலைப்பட்டனர்.

துசி இனத்தவர்களே இராணுவத்திலும் அதிகமானவர்களாக இருந்தமையினால் ஹூட்டு இனத்தவர்களை சித்திரவதை செய்வது அவ்வளவு பிரச்சனையாக இருக்கவில்லை.

'பொறுத்தது போதும் பொங்கி எழு' என்பது போல் இதுகாலவரை பொறுத்திருந்த ஹூட்டு இனத்தவர்கள் தாங்கள் அனுபவித்து வந்த கொடுமைகளுக்கெல்லாம் பரிகாரம் தேட கிளர்ந்தெழுந்தனர்.

துவங்கியது உள்நாட்டுப் போர். இதனால் புருண்டாவில் இரத்த ஆறு பெருக்கெடுத்தோடுகிறது:

மக்கள் தொகையில் 10 சதவிகிதமான மக்கள் நாட்டை விட்டு வெளியேறி அருகிலுள்ள ரவுண்டா மற்றும் தான்ஸானியா ஆகிய நாடுகளில்- அகதிமுகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். அங்கெல்லாம் செல்ல முடியாதவர்கள் அயலிலுள்ள காடுகளிலும் பனிபடர்ந்த மலைகளிலும் ஓடி ஒழிந்து கொண்டனர்.

நகரங்களும் கிராமங்களும் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

துப்பாக்கிக் குண்டுகளுக்கும், பீரங்கிக் குண்டுச் சிதறல்களுக்கும் பலியாகி இறந்து கிடக்கும் மக்களின் சடலங்களை எடுத்து அடக்கம் செய்ய எவருமே இல்லாமல் எங்கும் அலங்கோலமான நிலையே காட்சி அளிக்கின்றது. திரும்பிய பக்கமெல்லாம் பிணக்காடாகவே காட்சிதருகின்றது என்று தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

இன ஒழிப்புப் பணியில் இறங்கிய துசி இனத்தவர்களைத் துடித்தெழ வைத்த ஒரு நிகழ்ச்சி- ஹூட்டு இன மக்கள் ஒரு ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்தமையேயாகும்.

கடந்த ஜூன் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற போது பெரும்பான்மை இன மக்களின் வாக்குகளைப் பெற்று மெல்சியார் தாதயே என்பவர் வெற்றி பெற்றார். 40 வயதுடைய இவர் ஓரளவு கல்விகற்றவர். ரவுண்டா நாட்டில் படித்த இவர் ஒரு வங்கியாளர். இவர் தெரிவான தன் பின் ஹூட்டு இனத்தவர்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

1962ல் நாடு சுதந்திரம் பெற்றாலும், புதிய ஜனாதிபதித் தேர்தலின்பின்னரே உண்மையான விடுதலை கிடைத்ததாக ஹூட்டு இனத்தவர்கள் மகிழ்ச்சிக் கடலில் குதித்தனர். ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

ஹூட்டு இனத்தவர்களின் கை ஓங்கி விடாமல் தடுக்கும் நோக்குடன் கடந்த மாதம் துசி இராணுவ்மே ஜனாதிபதி தாதயேயைக் கொன்றுவிட்டது. இதனால் ஆத்திரமுற்ற ஹூட்டு மக்கள் தங்கள் எதிர்ப் பினைக் காட்டப் பொங்கி எழுந்தனர். இராணுவத்திடமுள்ள நவீன ஆயுதங்களுடன் சாதாரண விவசாயிகளின் கலப்பையும் கம்பும் பொருத முடியுமா? ஆயிரக் கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர்.



கல்லால் அடித்துக் கொல்லப்பட்ட ஹூடு இன மனிதன்

ஜனாதிபதி தாதயேயின் அரசாங்கத்தைக் கொண்டு நடத்துவதற்காக அமைக்கப்பட்ட பிரதமரும் அமைச்சர்களும் ஏனைய அதிகாரிகளும் தலைநகரான புஜும்புராவில் பிற நாட்டுத் தூதரகங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இந்நிலையில் நாட்டின் ஆட்சி அதிகாரம் யாரிடம் இருக்கிறது என்பதைத் தீர்மானிக்க முடியாதிருக்கிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது – இராஜதந்திரி

# அரசியல் வானில் தோன்றும் நம்பிக்கை நட்சத்திரங்கள்!

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாக, புதிய குரல் ஒன்று தற்போது ஒலிக்க ஆரம்பித்துள்ளது.

அக்குரலுக்கு உரியவர் வேறு யாருமல்ல; அவரே இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகர் திரு.எம்.எச். மொஹமட் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் திரு.சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென இதுவரைகாலமும் கூறிவந்தார். புலிகளை நேரில் சந்திப்பதற்கு யாழ்குடாநாட்டுக்குச் சென்றுவரவும் தாம் தயாராக இருப்பதாக திரு.தொண்டமான தெரிவித்திருந்தார்.

ஆனால் திரு. தொண்டமான் கூறிவந்தவற்றை ஆட்சியாளர்கள் தகுந்த வகையில் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

திரு.தொண்டமான், இன்று நேற்றல்ல, திரு.ரணசிங்க பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்திலேயே புலிகளுடனான சமரசப் பேச்சுக்களில் உதவுவதில் தமக்குள்ள அக்கறையை வெளியிட்டிருந்தார். ஆனால் அரசதரப்பினர் தொண்டாவின் பங்களிப்புக்கு இடந்தராதவகையிலேயே நடந்துகொண்டனர். கூடவே தென்னிலங்கையில் தொண்டாவுக்கு எதிராக கருத்துக்கள் வெளியிட்ட போதெல்லாம், ஆட்சியார்கள் மௌமனமாகவே இருந்து வந்தனர்.

ஆயினும் திரு.தொண்டமான் தமது நிலைப்பாட்டிலிருந்தும் விலகிச் சென்றுவிடவில்லை.

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு பலம்மிக்க ஆயுத சக்தியாகவே இயங்கி வருகின்றனர். அவர்களை முறியடிப்பதற்கான இராணுவ ரீதியிலான நடவடிக்கைகள் ஆரோக்கியமான வெற்றிகளைத் தராதவையாகவே விளங்குகின்றன.

ஆட்சியாளர்கள் 'நிலத்தில் வீழ்ந்த போதிலும் மீசையில் மண்படவில்லை' என்ற பாங்கிலேயே இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவருகின்றனர். மேலும் அந்நடவடிக்கைகள் மூலமாக ஏற்பட்டுவரும் அபாயகரமான சூழ்நிலைகளைத் தவிர்த்துக்கொள்வதில் அக்கறையற்றவர்களாகவும் அவர்கள் காணப்படுகின்றனர்.

அரசியல் ரீதியாக வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத்தீர்வை எட்டுவதன் மூலம் ஏற்படும் வெற்றியைக் கொண்டாடத் தயாரற்ற நிலையில் இருக்கும் ஆட்சியாளர்கள், ஒரு தனிமனிதனான திரு. அநுரா பண்டாரநாயக்கா கட்சி மாறியதை தமக்குக் கிடைத்த ஒரு பெரும் வெற்றியாகக் கருதி நிற்கின்றனர்.

அநுராவின் கட்சி மாறல் குறித்து ஆட்சியாளர்கள் களிப்படைவதை அவதானிக்கும்போது, நாட்டின் அரசியலைவிட கட்சி அரசியலிலேயே அவர்கள் நாட்டங்கொண்டிருப்பது புலனாகின்றது. அத்துடன் ஆட்சியார்கள் கட்சியின் விருப்பு, வெறுப்புக்களின் அடிப்படையிலேயே நாட்டை வழிநடத்த முயலுவதனையும், ஊகிக்கக்கூடியதாக இருக்கின்றது.

அடுத்த ஆண்டின் இறுதிப் பகுதியில் இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவிருக்கின்றது.

இன்றைய ஜனாதிபதி திரு. டிங்கிரி பண்டா விஜேதுங்க அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஆளுங்கட்சி வேட்பாளராக நிறுத்தப்படவுள்ளார்.

எனவே இந்த தேர்தல் நடவடிக்கைக்கான ஆரம்ப கட்டப் பணியாகவே, அநுராவை வாரி எடுத்துக்கொண்ட விடயம் காணப்படுகின்றது.

இவ்வாறு ஆட்சியாளர்கள் ஜனாதிபதித் தேர்தல் முஸ்தீபுகளை முடுக்கிவிட ஆரம்பித்துள்ள இத்தருணத்திலேயே சபாநாயகர் திரு. எம்.எச்.மொஹமட் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த முன்வந்துள்ளார்.

சபாநாயகர் திரு.எம்.எச் மொஹமட் ஐக்கியதேசியக் கட்சியை பொறுத்தவரை இன்று ஒரு சிரேஷ்ட உறுப்பினராக இருக்கின்றார். அத்துடன் நாட்டில் அனுபவமிக்க அரசியல்வாதிகள் வரிசையிலும் ஒருவராக இருக்கின்றார்.

திரு.மொஹமட் பாராளுமன்ற சபாநாயகராக இருப்பதுடன், அப்பதவிக்கேற்றவகையிலேயே நடுநிலையாக வடக்கு- கிழக்குப் பிரச்சனை குறித்து தமது கண்ணோட்டத்தையும் வெளியிட்டுள்ளார்.

“இலங்கையில் எந்தவொரு அரசியல் கட்சியும் ஒரு நேர்த்தியான அரசியல் தீர்வை வடக்கு-கிழக்குப் பிரச்சனை குறித்து முன்வைக்கவில்லை” என்று கூறியுள்ள சபாநாயகர் மொஹமட், வடக்கு-கிழக்குப் பகுதியில் யுத்த நிலை நீடிப்பதனால், நாட்டில் தோன்றியுள்ள பாதிப்புக்களையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு-கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஒரு பிரதான ஆயுதப்போராட்டக் குழுவாக இயங்கி வருகின்றனர். அரசாங்கம் புலிகள் இயக்கத்தினரைப் பயங்கரவாதிகள் என்றே வர்ணித்து வருகின்றது.

> “Let us never negotiate out of fear,
> But let us never fear to negotiate.”
>
> -Late U.S. President John F. Kennedy.
>
> “அச்சத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடக் கூடாது. இருப்பினும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு அச்சம் கொள்ளக்கூடாது.”
>
> -மறைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ். கென்னடி.

புலிகள் பயங்கரவாதிகளாக இருக்கலாம்; ஆனால் அவர்கள் தமது ஆயுதமேந்திய நடவடிக்கையால் இன்று வடக்கு-கிழக்குப் பகுதியில் ஒரு பெரும் போராட்ட சக்தியாக வளர்ச்சியடைந்துள்ளார்கள் என்பதனை எவரும் மறுத்துவிட முடியாது.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பகுதியில் ஆயுதரீதியாக இயங்கிவரும் புலிகளை அணுகி அவர்களுடைய நிலைப்பாடுகளை அறியவேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் அரசியல் ரீதியிலான நடவடிக்கை எத்தகைய வெற்றியையும் ஈட்டவில்லை என்பதனை சபாநாயகர் மொஹமட் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். அத்துடன் எந்தவொரு கட்சியும் தகுந்த தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



சபாநாயகர் எம்.எச்.மொஹமட்

இந்நிலையில் சபாநாயகர் மொஹமட் தெரிவித்திருப்பதைப் போல வடக்கு- கிழக்குப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான புதிய முயற்சிகள் தமிழீழ விடுதலைப் புலிகளையும் உள்ளடக்கியதாகவே இடம் பெறவேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

இலங்கையிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாக முன்வைத்த தீர்வு யோசனைகள் குறித்து சாதகமான பதில் எதுவும் கிடைக்காத நிலையே காணப்படுகின்றது.

இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றழைக்கின்றது. அமைதிக்குக் குந்தகம் விளைவிப்போர் என்று வர்ணிக்கின்றது.

ஆனால் அமைதி வழிநின்று இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு ஆகியவற்றுக்குட்பட்ட வகையில் தீர்வுயோசனைகளை முன்வைத்த தமிழ் அரசியல் கட்சிகளை ஆட்சியாளர்களும், பிரதான எதிர்க்கட்சியினரும் புறக்கணித்துள்ள நிலையே தென்னிலங்கையில் காணப்படுகின்றது.

தமிழ்க்கட்சிகளின் தீர்வு யோசனைகளை ஆட்சியாளர்கள் தட்டிக்கழித்துள்ளார்கள். ஆனால் தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்காதவர்களாகவே தென்னிலங்கையர்கள் அரசியல் நடத்துகின்றனர்.

கூடவே அரசியல் ரீதியாக தீர்வு ஒன்றை எட்டுவதற்கான சூழல்களை உருவாக்குவதற்கு பதிலாக, இராணுவ ரீதியாகப் பிரச்சனையை அணுகுவதிலேயே ஆட்சியாளர்கள் ஆர்வங்காட்டுகின்றனர்.

இந்நிலையில், ஒரு முதிர்ச்சி பெற்ற சிந்தனாசக்தியின் வெளிப்பாடாகவே சபாநாயகர் மொஹமட்டின் புலிகளுடனான சமரசப் பேச்சுக் குறித்த கண்ணோட்டம் விளங்கி நிற்கின்றது.

ஆயுதபாணிகளுடன் பேசுவதை ஒரு கௌரவப்பிரச்சனையாக அரசு கருதினால், மறுபுறத்தே, ஆயுதபாணிகளும் தாமாக பேச்சுவார்த்தைகளுக்கு வர விருப்பந் தெரிவிப்பதனைத் தமக்குரிய ஒரு கௌரவப் பிரச்சனையாகவே கருதுவார்கள்.

முன்னாள் ஜனாதிபதி திரு. ஜோன்.எவ். ,கென்னடி உலகின் தலைசிறந்த பேச்சாளராகவும், அரசியல் சிந்தனையாளராகவும் மதிக்கப்பட்டிருந்தார்.

திரு. கென்னடி வெளியிட்ட கருத்தொன்றில் “பயத்தின் காரணமாகப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றக்கூடாது; அதேவேளை பேசுவதற்கும் தயக்கம் காட்டக்கூடாது.” (“Let us never negotiate out of fear, But let us never fear to negotiate”) என்று தெரிவித்திருந்தார்.

இன்றைய இலங்கையின் அரசியல் சூழ்நிலைகளை நோக்கும்போது, திரு.கென்னடி கூறிய மேற்குறிப்பிட்ட கருத்தையே ஆட்சியாளர்களும், தமிழீழ விடுதலைப்புலிகளும் மனதில் நிறுத்த



அமைச்சர் தொண்டா

வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது. ஏனெனில் இந்த இரு தரப்பினருக்குமிடையிலேயே இன்று நேரடிப்பேச்சுக்கள் இடம்பெற வேண்டியது மிகவும் அவசியமானதாக இருக்கின்றது.

எனவே, இலங்கையின் பாராளுமன்ற சபாநாயகரான திரு.எம்.எச். மொஹமட் புலிகளுடன் சமரசப் பேச்சுக்களை நடத்த விருப்பந் தெரிவித்திருப்பது, திரு.கென்னடி கூறியதன் வெளிப்பாடாகவே இருப்பதை அறியமுடிகின்றது.

திரு.எம்.எச்.மொஹமட் முஸ்லிம் இனத்தவரான போதிலும் இலங்கையின் தேசிய அரசியலில் முக்கிய இடத்தை வகிப்பவராகக் காணப்படுகின்றார்.

வடக்கு-கிழக்கில் தொடர்ந்துகொண்டிருக்கும் இனப்பிரச்சனை காரணமாக தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் முஸ்லிம் மக்களும் பெருமளவு பாதிப்புக்களை அனுபவித்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

இலங்கையில் முஸ்லிம்கள் மதத்தினால் மட்டுமே வேறுபட்டுள்ளார்கள். ஆனால் மொழியால் அவர்கள் தமிழர்களுடன் ஒன்றுபட்டுள்ளார்கள்.

இருந்த போதிலும் 1990ம் ஆண்டு அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே மோதல்கள் இரண்டாவது தடவையாக வெடித்ததையடுத்து வடக்கிலும், பின்னர் கிழக்கிலும் முஸ்லிம் மக்கள் பெருமளவு பாதிப்புக்குள்ளாகியிருந்தனர்.

அப்பாவி முஸ்லிம் மக்களைத் தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ்குடாநாட்டிலிருந்தும் வெளியேற்றியிருந்தனர். புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக தமது வீடு, வாசல்கள், வியாபாரஸ்தலங்கள் மற்றும் சொத்து-சுகங்கள் என்பவற்றைக் கைவிட்ட



வர்களாக முஸ்லிம்கள் யாழ்குடாநாட்டிலிருந்தும் வெளியேறிருந்தனர்.

தமது போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவில்லை என்று காரணங்காட்டியே தமிழீழ விடுதலைப்புலிகள் அன்று முஸ்லிம்களை வடக்கே இருந்து விரட்டியிருந்தனர்.

முஸ்லிம்கள் ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவு நல்காமல் இருந்திருக்கலாம். ஆனால் யாழ்குடாநாட்டில் தமிழ் அரசியல் கட்சிகள் இயங்கிவந்த காலங்களில் அவர்கள் அக்கட்சிகளையும், அவற்றின் கோட்பாடுகளையும் ஆதரித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே புலிகள் இயக்கத்தினர் முஸ்லிம்களை குடாநாட்டிலிருந்து வெளியேற்றியமை, மனிதாபிமானத்தைக் கருத்தில் கொள்ளாத ஓர் அவசரப்பட்ட நடவடிக்கையாகவே விளங்கியிருந்தது.



அமைச்சர் ஹமீத்

ஆனால் அரசியல் மற்றும் யுத்தக் கெடுபிடிகளுக்கும் அப்பாற்பட்ட விதத்தில் முஸ்லிம்கள் வடக்கேயிருந்து வெளியேற்றப்பட்டதை இன்று அவதானிக்கும்போது, அவர்கள் தினமும் சிரந்தாழ்த்தித் தொழுது வணங்கும் அல்லாஹ்வின் அனுக்கிரகத்தின் விளைவாகவே வடக்கேயிருந்தும் அவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள் என்று எண்ணத் தோன்றுகின்றது.

வடக்கு-கிழக்கில் இடம் பெறும் யுத்தத்தினால் வடபகுதியே இன்று பாரிய பாதிப்புகளுக்குள்ளாகியுள்ளது. குண்டு வீச்சு, ஷெல் வீச்சு என்பன இடைவிடாது இடம்பெறுவதுடன், குடாநாட்டினர் தமது குடிமனைகளையும் கைவிட்டு, பதுங்கு குழிகளுக்குள் தஞ்சமடையும் நிலை உருவாகியுள்ளது.

இது தவிர யாழ்குடாநாட்டுக்கு வெளியே பயணங்களை மேற்கொள்வதுகூட, உயிரைக் கையில் பிடித்த ஒரு நடவடிக்கையாகவே இருக்கின்றது.

குடாநாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் கடந்த பத்துவருட கால யுத்தத்தினால் ஏதாவது ஒரு வகையில் பாதிக்கப்பட்டவனாகவே காணப்படுகின்றான்.

யாழ்குடாநாட்டில் எதுவித தீர்வையும் காணமுடியாது அல்லற்படும் அப்பாவித் தமிழ் மக்கள் கூட, குடாநாட்டைவிட்டு வெளியேறுவதிலேயே பெரும் ஆர்வங்காட்டி வருகின்றனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமையும், அவர்கள் அங்கு இடம்பெறும் யுத்தக் கெடுபிடிகளுக்குள் அகப்படாத நிலையும் அவர்களது பிரார்த்தனையின் பிரதிபலன்களே என்று எண்ணத் தோன்றுகின்றது.

யாழ்குடாநாட்டில் வாழ்ந்த முஸ்லிம்கள் பெரும்பாலும் வியாபாரா சமூகத்தினராகவே விளங்கியிருந்தனர்.

நாட்டின் அனைத்துப் பகுதியுடனும் அவர்கள் வியாபாரத் தொடர்புகளை வைத்திருந்தனர். எனவே யுத்தக் கெடுபிடிகளுக்கு மத்தியில் ஒரு வியாபார சமூகமாக அவர்களால் குடாநாட்டில் நிலைத்திருந்திருக்க முடியாது.

ஆகவே புலிகளால் வெளியேற்றப்பட்டிராவிடினும்கூட, அவர்கள் தாமாகவே யாழ்குடாநாட்டிலிருந்து வெளியேறும் சூழ்நிலையே நாளடைவில் தோன்றியிருக்க முடியும்.

வடக்கு-கிழக்கில் முஸ்லிம்கள் யுத்தக் கெடுபிடிகளினால் உயிர், உடமை இழப்புக்களை அனுபவித்தவர்களாகக் காணப்படும் இத்தருணத்தில், சபாநாயகர் எம்.எச். மொஹமட் புலிகளுடன் சமரசம் பேச முன்வந்திருப்பது, ஜனநாயக நடைமுறைகளில் அவருக்குள்ள நம்பிக்கையையே வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

கூடவே குறுகிய இன, மத வட்டத்தினுள் அவர் தம்மை வைத்துக் கொண்டிராத பண்பும் தெட்டத் தெளிவாகப் புலப்பட்டு நிற்கின்றது.

புலிகளுடன் நெருக்கமான முறையில் பேச்சுக்களை நடத்திய அரசாங்க உறுப்பினராக திரு. ஏஸி.எஸ்.ஹமீத் விளங்கியிருந்தார். அத்துடன் அவர் அண்மையில் வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் நிகழ்த்திய உரையில் இலங்கை

> ஆயுதபாணிகளுடன் பேசுவதை அரசு ஒரு கௌரவப் பிரச்னையாக கருதினால், தாமாகவே பேச்சுவார்த்தைகளுக்கு முன்வருவதை ஆயுதபாணிகளும் தமக்குரிய கௌரவப் பிரச்னையாகக் கருதுவார்கள்!

இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வு காணமுடியும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

தற்போது திரு.எம்.எச்.மொஹமட் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த முன்வந்துள்ளார்.

வெளிநாட்டமைச்சர் ஹமீத், சபாநாயகர் எம்.எச்.மொஹமட், மற்றும் அமைச்சர் எஸ்.தொண்டமான் ஆகியோரின் நிலைப்பாடுகள் குறுகிய இன, மதவாதக் கண்ணோட்டங்களுக்கு அப்பாற்பட்டதாகக் காணப்படுகின்றன.

அத்துடன் முதிர்ச்சியடைந்த ஜனநாயக அணுகுமுறைகளைப் பிரதிபலிப்பதாகவும் இருக்கின்றன.

இலங்கையின் ஆட்சியாளர்கள் இலங்கை இனப்பிரச்னைக்கு இலங்கையினாலேயே தீர்வுகாண முடியுமென்றே அடிக்கடி கூறி வருகின்றனர். அத்தகைய தீர்வுக்கான சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய நம்பிக்கை நட்சத்திரங்களாகவே சபாநாயகர் எம்.எச். மொஹமட், அமைச்சர்கள் எஸ். தொண்டமான், ஏ.ஸி.எஸ்.ஹமீத் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இந்த நட்சத்திரங்கள் ஜொலிக்குமா? அல்லது உதிர்ந்து விழுந்து விடுமா? என்பதற்கு காலம் தான் பதில்கூற வேண்டும்.

★

# அழகான கூந்தல் வேண்டுமா? இவர் சொல்வதை காதில் வாங்குங்கள்!



தலைமுடி தொடர்பான ஆராய்ச்சிகளை நடத்திவரும் நிபுணர்கள், உணவுப்பழக்கங்களின் மூலம் கவர்ச்சி கரமான தலைமுடியினைப் பெறலாம் என்கின்றனர். கொழுப்பு மற்றும் இனிப்பு வகை உணவுகளைக் குறைத்து புரதம் நிறைந்த உணவுகளை உட்கொண்டாலே தலைமுடி மிக அழகாக வளரும் என்று அவர்கள் கூறுகின்றனர். வகை வகையான எண்ணை, ஷாம்போ போன்றவற்றினால் பெறப்படும் முடியின் கவர்ச்சி தற்காலிக மானதே என்று கூறும் இவ்வாராய்ச்சி யாளர்கள், உணவுப் பழக்கங்களால் ஏற்படும் கேசம் நிரந்தர மான அழகினைத் தரும் என்று கூறுகின்றனர்.

பிலிப் கிங்ஸ்லி என்பவர் "உணவு முறையினால் இயற்கையாகச் செழித்து வளரும் தலைமுடி-பளபளப்பாகவும் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் விளங்கும்" என்கிறார். காண்டிஸ் பேர்கன் மற்றும் பிரிட்டிஷ் அரசகுடும்பப் பெண்கள் பலருக்கு கிங்ஸ்லி சிகை தொடர்பான மருத்துவ ஆலோசகராகவிருக்கிறார். அழகான சிகை வளர்ச்சிக்கு கிங்ஸ்லி பல ஆலோசனைகளை வழங்குகிறார்;

- இனிப்புவகைகள், சொக்கலேட், கிறீம், ஜாம், டப்பாக்களில் அடைக்கப்பட்ட பழங்கள், வாசனையூட்டப்பட்ட உணவுப் பதார்த்தங்கள், காரமுள்ள கறிவகைகள், எண்ணையில் பொரித்த உணவு, கொழுப்பு அதிகம் கொண்ட இறைச்சி வகைகள், தனியான உப்பு ஆகியவற்றை முற்றாக நீக்கி விட வேண்டும்.
- பிஸ்கட், கேக் வகைகள் ஒதுக்கிப்பட வேண்டும். மதுபான வகைகளையும் தவிர்க்க வேண்டும்.
- வெண்ணைக்குப் பதிலாக கொழுப் பற்ற மார்ஜரின், ஆடை நீக்கிய பால், சூரியகாந்தி எண்ணை, கீரைகளையும் பச்சைக்காய்கறிகளையும் கொண்ட சாலட் மற்றும் சுத்தமான கோதுமை ரொட்டி (பாண்) ஆகியவற்றை உணவில் சேர்க்க வேண்டும்.
- பச்சை (வேகவைக்காத) காய்கறிகள், சிப்பிச்சதை அல்லது நண்டு, இறால் வகை போன்ற கடல் உணவு ஆகிய வற்றையும் வாரம் ஒரு தடவை ஈரலும் உண்ண லாம். பழங்களையும் தினசரி உணவில், அளவுடன் சேர்த்துக் கொள்ளலாம். புரதம் செறிந்த மீன், கொழுப்புக் குறைந்த இறைச்சிவகை- கோழி இறைச்சி ஆகியவற்றை வாரத்துக்கு ஒரு தடவை மட்டும் உண்ணலாம். கீரைத் தண்டு, கரட், முள்ளங்கி, வெள்ளரி ஆகியவற்றையும் உணவுடன் சேர்க்கலாம். தண்ணீர் நிரம்பப்பருக வேண்டும். காலையில் எழுந்தவுடனும் இரவு படுக்கைக்குச் செல்வதற்கு முன்பும் ஒவ்வொரு கிளாஸ் தண்ணீர் குடிப்பது கட்டாயப் பழக்கமாக இருத்தல் வேண்டும் என்று கூறுகிறார் கிங்ஸ்லி.

மூன்று வேளை உணவும் எவ்வாறு அமைய வேண்டும் என்று ஒரு பட்டியலையும் கிங்ஸ்லி வகுத்துத் தந்துள்ளார்.

**காலை உணவு:**

தவிடு நீக்காத அரிசிக் கஞ்சி ஒரு கோப்பை. உலர் திராட்சை அரை கோப்பை, எண்ணை விடாமல் வறுத்த அல்லது அவித்த முட்டை ஒன்று, கொழுப்பு நீக்கிய பால் அரை கோப்பை, மற்றும் தேனீர் அல்லது காப்பி ஒரு கோப்பை.

**மதிய உணவு:**

வேகவைத்த ஈரல், கோதுமை ரொட்டி (பாண்) ஒரு துண்டு, பச்சை இலைகள் சேர்ந்த சாலட்-சூரியகாந்தி எண்ணை, எலுமிச்சம்பழச்சாறு அல்லது வின்னாரியுடன் புரட்டப்பட்டது; வேக வைத்த இறால் அல்லது சிப்பிச்சதை; கொழுப்புக்குறைந்த பாற்கட்டி (சீஸ்) பழம் ஒன்று.

**இரவு உணவு:**

கோதுமை ரொட்டி ஒரு துண்டு; தக்காளிப்பழம் அல்லது காடித்தன்மை யுடன் கூடிய பழச்சாறு; அவித்த மீன் அல்லது கொழுப்புக் குறைந்த இறைச்சி, சிறிதளவு வேகவைத்த நீர்க்கீரை, பூக்கோசு, ஒரு பழம், தேனீர் அல்லது காப்பி ஒரு கோப்பை.

டாக்டர் ஹார்வி வாக்கர் இளவல், என்ற மருத்துவநிபுணர், பிலிப்கிங்ஸ்லியின் உணவு முறை சுலபமாக எல்லோராலும் பின்பற்றக்கூடிய முறையாகும் என்று சிபார்சு செய்துள்ளார். இத்தகைய உணவுகளை மட்டும் கட்டுப்பாடாக உண்டு வாழக்கூடிய எவருக்கும் தேவை யற்ற கொழுப்பு உடலில் சேர வாய்ப் பேற்பட மாட்டாது என்றும், ஏற்கனவே சேர்ந்த கொழுப்பும் படிப்படியாக வடிந்து சுகதேகியாக ஒருவன் வர முடியும் என்றும் கூறுகிறார்.

## திருமணத்திற்கும் நீண்ட ஆயுளுக்கும் தொடர்பு உண்டா?

திருமணத்திற்கும் நீண்ட ஆயுளுக்கும் தொடர்பு உண்டா?

நிச்சயம் உண்டு. திருமணம் செய்து கொண்டு கணவன்- மனைவியாக வாழ்பவர் களையும், பிரம்மச்சாரிகளையும் ஆராய்ந்து ஒப்பிட்டு பார்த்தோம். திருமணமானவர்கள் நீண்டகாலம் வாழ்ந்து வருவது கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. கணவன்- மனைவியாக வாழ்பவர்களுக்கு நோய்த் தடுப்பு சக்தி அதிகம்.

ஆண்களை விடப் பெண்களுக்கு ஆயுட்காலம் அதிகமா?

அதிகம்தான். எப்போதுமே, எந்தக் காலத்திலுமே பெண்களுக்கு ஆயுட்காலம் அதிகம். அறுபது வயதுக்கு மேல்தான் அவர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்படு கிறது.

இளமையாக இருக்க செக்ஸ் அவசியமா?

அவசியம்தான் என்கிறது அமெரிக்க முதியோர் நல ஆய்வுக்கழகம். இளமையாக இருப்பது என்பது மனதைப் பொறுத்தது. வயது கூடக் கூட எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இன்றைய பொழுதை எப்படி இன்பமாக கழிக்கலாம் என்று நேரத்தைச் செலவிட வேண்டும். இதற்கு செக்ஸ் உறவு பெரிதும் உதவுகின்றது.

குழந்தைப் பேற்றுக்கும் நீண்ட ஆயுளுக்கும் தொடர்பு உண்டா?

நிச்சயம் உண்டு. அண்மையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின்படி இரண்டு, மூன்று குழந்தைகளைப் பெற்ற தாய்மார் களிடையே இறப்பு விகிதம் குறைவாக காணப்படுகிறது.

குழந்தைப் பேறு இல்லாதவர்களோடு ஒப்பிடும் போது குழந்தையுள்ளவர்கள் அதிக காலம் வாழ்வதாக சிகாகோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஒல்லியாக உள்ளவர்கள் நீண்ட காலம் வாழ்கிறார்களா?

நீண்ட ஆயுளுக்கும், உடல் பருமனுக்கும் தொடர்பில்லை. உணவு உட்கொள்வதில் முறைகேடான பழக்கங்கள் கடைப்பிடிக் கப்படுவதே உடல்நலன் பாதிக்கக் காரண மாகும். அளவோடும் முறையோடும் உண்பதால் எடையும், பருமனும் கட்டுப் படும். நீண்ட ஆயுளுக்கும் வழி உண்டு.




## லேடீஸ் ஸ்பெசல்

## அழகான குழந்தை அமைவதெல்லாம் பெற்றோர் மனம் தந்த வரம்!



பெற்றோரின் மனப்பாங்கு தான் பிறக்கும் குழந்தைகளின் ஆயுள், அழகு, பலம், புத்தி முதலியவைகளை நிர்ணயிக்கிறது என்று இது பற்றி ஆராய்ந்த மனோதத்துவ வல்லுநர் கள் பலர் கூறுகின்றார்கள். எனவே தாம்பத்திய உறவின்போது கணவன், மனைவியர் கீழ்வரும் விதிமுறை களைக் கடைப்பிடிக்கலாம். உடலின்பம் துய்க்கும் சமயத்தில், இருவர் உள்ளமும் தூய்மையாகவும், குதூகலம் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். இந்தச் சமயத்தில் தங்கள் எண்ணத்தை வேறெந்த விவகாரத் திலும் செலுத்தக்கூடாது. கணவன், மனைவி உடல்நிலை சுகத்துடனும், சுத்தியுடனும் இருத்தல் வேண்டும். படுக்கை அறையில் மிக அழகான மனித இனச் சித்திரங்களும், இயற்கைக் காட்சிகள் கொண்ட ஓவியங்களும், மதிநுட்பம் வாய்ந்த மகான்களின் படங்களும் வைக்க வேண்டும். மனதிற்கு அருவருப்பான சித்திரங்களையோ, மிருகங்களின் படங்களையோ, பயங்கரத் தோற்ற முள்ள தெய்வப் படங்களையோ வைக்கக்கூடாது. அப்படியிருந்தாலும் அவற்றின் மீது கவனத்தைச் செலுத்தக்கூடாது.

நாய் போலவும், பூனை போலவும், குரங்கு போலவும், ஆடுமாடு போலவும் கோர ரூபங்கள் கொண்ட குழந்தைகளும், கொடுங்குணம் கொண்ட முரட்டுக்குழந்தைகளும், கூன், குருடு, செவிடு, முதலிய அவலட்சணப் பிள்ளைகள் பிறப்ப தற்கும் மேற்சொன்ன அநாச்சார காட்சிகளைத் தாம்பத்திய உறவின் போது கணவன் மனைவியர் காண்பது தான் காரணம் என்று மனோவியல் வல்லுனர்கள் கூறுகின் றனர். இவை தவிர மனைவியின் கர்ப்பகால நடவடிக்கை, போஷாக்கு, கவனிப்பு, மனநிலை முதலியவை களைக் கொண்டும், பிறக்கும் குழந்தைகளின் உடல், மன இலட்சணம் அமைகின்றன.

## சமைப்போம் சுவைப்போம்

சில வாரங்களுக்கு முன்னர் வாழைக் காய் ஊறுகாய் செய்யும் முறையைப் பார்த்தோம். இம்முறை கிழங்கு ஊறுகாய் செய்யும் முறையினைப் பார்ப்போம்.

பெரும்பாலும் எலுமிச்சம்பழம், மாங் காய், நெல்லிக்காய் மற்றும் வெள்ளைப் பூண்டு ஆகியவற்றிலேயே ஊறுகாய் செய்து சுவைத்து வந்த எமக்கு வாழைக்காய் மற்றும் கிழங்கு ஆகியவற்றைப் பயன்படுத்தி ஊறுகாய் தயாரிப்பது சற்று வித்தியாச மானது தான். அதே போல் சுவையும் வித்தியாசமாகத்தான் இருக்கும்.

கிழங்கு ஊறுகாய்க்கு எல்லாக் கிழங்கு களையும் எடுத்துக்கொள்ள முடியாது. இதற்கு கருணைக்கிழங்கே பொருத்த மானது.

### கிழங்கு ஊறுகாய்



**தேவையானவை:**

கருணைக்கிழங்கு- 1 கிலோ
கடுகு- 50 கிராம்
கொத்தமல்லி- 25கிராம்
சீரகம்- 25 கிராம்
வெந்தயம்- 20கிராம்
பூண்டு- 50 கிராம்
சி.வெங்காயம்- 100கிராம்
மிளகாய்த்தூள்- 2 மே.கரண்டி
கடுகு எண்ணை- 1/4 கிலோ
வின்னாகிரி- 1 கோப்பை
உப்பு- அளவாக
மஞ்சள் தூள்- அளவாக

**செய்முறை:**

கிழங்கின் தோலைச் சீவி நன்றாகக் கழுவியபின் சிறு சிறு சதுரத்துண்டுகளாக வெட்டிக் கொள்ளுங்கள். ஒரு பாத்திரத்தில் கிழங்குத் துண்டுகளையிட்டு அதனை மூடுமளவுக்குத் தண்ணீரை ஊற்றி ஒரு தேக்கரண்டி உப்புத்தூளைக் கலந்து அரைமணி நேரம் ஊறவிடுங்கள்.

நீரை வடிகட்டியபின் மற்றொரு பாத்தி ரத்தை அடுப்பிலேற்றி ஒரு மேசைக்கரண்டி எண்ணையை விடவும். இதனுள் கிழங்குத் துண்டுகளையிட்டு சென்னிறமாகும் வரை பொரியுங்கள். பின்னர் அடுப்பிலிருந்து இறக்கி ஆறவிடுங்கள்.

மற்றுமொரு பாத்திரத்தை அடுப்பிலேற்றி எண்ணையை சிறிதளவுவிட்டு மிதமான நெருப்பில் எண்ணை கொதிக்கும் போது அதில் கடுகு, வெந்தயம், கொத்தமல்லி ஆகியவற்றை பொரிக்கவும். இதில் ஏற்கனவே அரைத்த வெங்காய- வெந்தயக்கலவை யையுமிட்டு பொன்னிறமாகும்வரை பொரியுங்கள். இத்துடன் கிழங்குத்துண்டு களையும் சேர்த்துமேலதிகமாக மிஞ்சியுள்ள எண்ணையையும் ஊற்றி பொரியுங்கள். ஒரே நிமிடத்தில் நன்றாகக் கிளறிவிட்டு அடுப்பிலிருந்து இறக்கி மிளகாய்த்தூள், உப்பு மஞ்சள் தூள் ஆகியவற்றையும் சேர்த்துக் கிளறியபின் ஆற விடுங்கள். நன்றாக ஆறிய தும் துப்பரவாகக் கழுவி ஈரப்பிடிப்பில்லாத அகன்ற வாயுடைய ஜாடியில் அல்லது போத்தலிலிட்டு வின்னாரியை ஊற்றி மூடிவிடுங்கள்.

இதனை அடிக்கடி வெய்யிலில் வைத்து எடுத்தால் பல நாட்களுக்குப் பழுதுபடாமல் இருக்கும்.

### நண்டுக்குழம்பு

**தேவையானவை:**

நடுத்தரமான நண்டுகள்- 4
காய்ந்த மிளகாய் அரைத்தது-3-4
மஞ்சள் தூள்-சிறிதளவு
சிறியவெங்காயம் வெட்டியது-2 மேசைக்கரண்டி
உள்ளி (அரைத்தது)- 5 பல்லு
இஞ்சி- சிறிதளவு
தேங்காய்-பச்சை அரிசி (அரைத்தது)- சிறிதளவு.
கறுவாப்பட்டை- 2 அங்குலத் துண்டு
உப்பு- தேவையான அளவு
எலுமிச்சம் பழம்-1 1/2
தேங்காய்ப்பால்- 3 கப்
இரண்டாம் பால்-1/2கப்

**செய்முறை:**

நண்டைத் துப்புரவாக்கிக் கழுவி, நடுத்தரத் துண்டங்களாக்கி ஒரு பாத்தி ரத்தில் இடவும். தேங்காய் பிழிந்த கட்டிப்பால், அரைத்த தேங்காயும் அரிசியும், எலுமிச்சம்பழச்சாறு தவிர்ந்த ஏனைய வற்றை நண்டுள்ள பாத்திரத்தில் இட்டு குழம்பு முழுவதும் நண்டுக்கறியி னால் உறிஞ்சப்படும் வரை வேகவைக்க வும். பின்பு அரைத்த தேங்காய், அரிசி யையும் கலந்து நண்டுள்ள பாத்திரத்தில் இட்டு வேகவிடவும். குறைந்த சூட்டில் 10 நிமிடம் வேகவைத்து இறுதியாக எலுமிச்சம்பழச்சாற்றை விட்டு இறக்கவும்.

### பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.

மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (17 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# பீதியைக் கிளப்பியுள்ள பில்லி சூனியப் புத்தகம் மறைந்த மாயம் என்ன? விளையப்போகும் கோரம் என்ன?



உலகிலேயே மிகவும் பயங்கரமான மந்திரம், மாயம், பேய், பிசாசு, பில்லி சூனியம் முதலான தீமைகளை உள்ளடக்கிய புத்தகம் ஒன்றை பிரெஞ்சு அதிகாரிகள் சர்வதேச மட்டத்தில் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

16ம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த நூல் சாத்தானின் சாபங்களைக் கொண்டதெனக் கருதப்படுகிறது. 400 ஆண்டுகளாக இந்த நூலை எவருடைய கண்ணிலும் படாமல், பிரான்சிலுள்ள மிகவும் ஒதுக்குப்புறமான சந்நியாசிகள் மடம் ஒன்றில் பாதுகாத்து வந்துள்ளனர். ஆனால் அந்த நூல் வைக்கப்பட்ட இடத்தில் இப்போது இல்லை. அதனை யாரோ கவர்ந்து சென்றுள்ளனர் என்று தெரிகிறது.

உலகையே பேரழிவுக்குத்தள்ளும் பயங்கர சக்திவாய்ந்த மந்திரங்களும் சூத்திரங்களும் இந்தப் புத்தகத்தில் உள்ளன என்று கூறப்படுகிறது.

பண்டைய மன்னனான ஆர்தரின் மகன் மொட்ரொட், அவனுடைய தாயான மோர்கானா மற்றும் மந்திரவாதியான மேளின் ஆகியோர் பயன்படுத்திய பயங்கர மந்திரங்களும் சூனியங்களும் இந்நூலில் இடம்பெற்றிருப்பதாக அறியப்படுகிறது. அத்துடன் அதேகாலத்தில் பிரசித்தி பெற்றிருந்த சூனியக்காரிகளினால் கையாளப்பட்ட வசிய முறைகள், பில்லி, ஏவல் போன்றவையும் இதில் இருக்கிறதாம்.

வரலாற்றின் இடைநிலைக்காலத்தைய சூனியக்காரிகளின் நடைமுறைகளை ஆய்வு செய்யும் ஹேக்கியுள் மானூட் என்பவர் இந்த நூல் பற்றிக்கருத்துத் தெரிவிக்கையில், "இந்தப் புத்தகம் சபல புத்தியுள்ள ஒரு தீயவனிடம் போய்ச் சேருமானால் அவன் இந்தப் பிரபஞ்சத்தையே ஆட்டிப்படைக்கும் சக்தியைப் பெறுவான். கொடிய சக்திகளைக் கொண்ட ஒரு பட்டாளத்தையே உலகில் ஏவிவிடுவான்." என்கிறார்.

"பேய்களை வணங்கும் ஐஸ்ரின் நோர்டனிடம் இந்நூல் இருந்தது. இவன் 1534ல் உயிருடன் கொழுத்தப்பட்டான்.

பின்னர் இயேசு சபை பாதிரிமாரிடம் இப்புத்தகம் வந்து சேர்ந்தது. இதில் காணப்படும் மந்திரங்களையும் சூத்திரங்களையும் அவர்கள் பரீட்சித்துப்பார்த்தனர்.

அவை பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தவல்லன என்பதனைத் தெளிவாக அறிந்துகொண்டனர்.

இதன் பின்னர் இந்த நூலை தீயிட்டு அழிக்க முயன்றனர். முடியவில்லை. சில திரவங்கள் மூலமும் இந்தநூலை அழிக்க முடியாமற்போய்விட்டது.

அதிக பாரமுள்ள கற்களில் இரும்புச்சங்கிலியால் இப்புத்தகத்தைக் கட்டி கடலில் ஆழ்த்தியபோதும், இது மூழ்காமல் மேலே வந்துவிட்டதாம். இதனை மானூட் கூறுகிறார்.

இதனைத் தொடர்ந்து ஆல்ப்ஸ் மலைச் சாரலிலுள்ள ஒரு கிறிஸ்தவ சந்நியாசிகள் மடத்துக்கு இந்நூலை எடுத்துச் சென்று கருங்கல்லாலான சிறு குகையுள் பூட்டி வைத்தனர்.

433 ஆண்டுகள் இந்நூல் இங்கு சிறை வைக்கப்பட்டிருந்தது. அண்மையில் அந்த இடத்தைப் பார்வையிடச் சென்ற சந்நியாசிமாருக்கு பெரும் வியப்பு ஏற்பட்டது.

குகையினை மூடியிருந்த 1000 இறாத்தல் எடையுள்ள பெரும் கல் இரண்டாகப் பிளந்துகிடந்தது.

இப்புத்தகத்தின் சக்தி தெரிந்த சில சந்நியாசிகள் இதனைக் களவாடி, அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவருக்கு விற்றிருக்கக்கூடும் என்று பிரான்ஸ் நாட்டுப் பொலிசார் கருதுகின்றனர்.



தொலைந்து போன பில்லி சூனியப் புத்தகம் இதுதான்.

# 250 அடி உயரத்தில் இருந்து விழுந்தவர் எழுந்து நடந்த அதிசயம்!




20 அடி உயரத்தில் இருந்து விழுந்தாலே இசகு பிசகாகிவிடும்.

இரு நூற்றி ஐம்பது அடி உயரத்தில் இருந்து விழுந்தால் என்ன ஆகும்?

உடல் சுக்குநூறாகிப் போகும் என்றுதானே நினைக்கிறீர்கள்.

உங்கள் நினைப்புச் சரிதான். ஆனால் இங்கிலாந்து

மான்செஸ்டர் நகரில் 250 அடி உயரக் கட்டிடத்தில் இருந்து விழுந்தவர் சிறிய காயங்களோடு தப்பிக்கொண்டார். எழுந்து நடந்தார்.

விழுந்தவரின் பெயர் கிறிஸ்சாகர். வயது 26.

26 வயதிலேயே தற்கொலை செய்யும் எண்ணம் வந்திருக்கிறது.

விறு விறுவென்று 22 மாடிக்கட்டிடம் ஒன்றின் உச்சிக்குப் போய் ஒரே குதியல்.

தலைக்குப்புற விழுந்தார். கிறிஸ் விழுந்த இடத்தில் ஒரு ஜப்பான் நிசான்கார் நின்றுகொண்டிருந்தது.

காரின் கூரையில் 'தொப்' என்ற சத்தத்தோடு கிறிஸ் விழுந்தார்.

அவர் விழுந்த வேகத்தில் கார் கண்ணாடி சிதறியது. பல அடி தூரத்துக்குச் சிதறல்கள் தெறித்தன. காரின் மேற்கூரையும் டமால், டுமால்.

வெடிகுண்டுதான் வெடித்துவிட்டது என்று அருகில் நின்றவர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினார்கள்.

சிறிது நேரத்தின்பின் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அருகில் சென்று பார்த்தனர்.

விழுந்த பின்னும் சில நிமிடங்கள் காருக்குள் கிடந்த கிறிஸ் திடீரென எழுந்தார். கை, கால்களை உதறியபடி சுற்று முற்றும் பார்த்தார். பின்னர் எதுவும் பேசாமல் எழுந்து நடந்தார்.

அவர் உயிரோடு தப்பியது பெரிய ஆச்சரியம்.

இதில் வேடிக்கை என்னவென்றால், கிறிசின் தற்கொலை முயற்சியில் பாதிக்கப்பட்டவர் கார் உரிமையாளர்தான்.

கிறிஸ் சாகவில்லை. ஆனால் கார் கிட்டத்தட்ட செத்துவிட்டது. இனி ஓசியில் கொடுத்தாலும் வாங்க ஆள் இருக்காது என்று கார் உரிமையாளர் புலம்புகிறார்.

## வசதியான சவாரி!



இதுவும் ஒரு மோட்டார் சைக்கிள்தான். ஆனால் ஒரு வசதி. காரில் இருந்து பயணம் செய்வது போல இதில் ஒரு ரவுண்ட் வரலாம். விபத்துக்களில் இருந்து தப்புவதும் எளிது.

## பாம்பை வைத்து பிழைப்பு!



சீனத் தலைநகர் பெய்ஜிங் தெரு மூலைகளில் இந்த வாலிபனைக் காணலாம்.

ஒரு பாம்பினை மூக்கினுள் செலுத்தி அதனை வாய்வழியாக வெளியே எடுக்கிறான்.

இது ஆச்சரியமான சாகசம்தான். இந்தச் சாகசம் இந்த இளைஞனின் வயிற்றையும் காக்கிறது. காண்போர் போடும் பணமே இவன் வாழ்க்கைக்கு உதவுகிறது.

பாம்பு கண்டால் படையே நடுங்கும். இவனோ பாம்பை வைத்து பிழைப்பே நடத்துகிறான். கில்லாடிதான்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## சந்திரனின் வருத்தம்

தமிழ் நடிகர்களில் ஒருவர், மாநிலத்தில் எரிப்போம் படத்தை என்கிறார்கள். ஆனால் அதற்கு ஒரு தெரிவிக்க என்று உணர்வு கொண்ட எல்லாஸ் சந்திரனும் "கன்னட ரஜனி படத்தை விஜயகாந்த் எரிப்போம் கன்னட வெறியர்கள் தமிழ்நாட்டில் கண்டனம் கூட இல்லையே" வருத்தப்படுகிறார்.






## காதோடு சொல்லுகிறோம்

கௌ நடிகைக்கு சமூக சேவை செய்யும் ஆசை வந்திருக்கிறதாம். இதை நீண்டகாலமாகவே சொல்லி வருகிறார். இன்னும் இறங்க காணோம் என்கிறார்கள் விஷயம் அறிந்தவர்கள். சான்ஸ் இல்லாமல் போனதால் சமூக சேவை எண்ணமோ?

ஆட்டம் போடும் சாந்த நடிகைக்கு நீண்டநாள் ஆசை ஒன்று. சொந்தமாக வீடு கட்டவேண்டும். பின்னர்தான் திருமணம். இப்போது அவரது வருமானத்தில் நாலுகால் கையைத்திருப்பதால் நட்சத்திர ஓட்டல் மூலம் பணம்திரட்ட நினைத்துள்ளாராம்.

பிரிய நடிகைக்கு அடுத்த வருடம் திருமணம் என்று கோடம்பாக்கம் வட்டாரத்தில் பேச்சு நடக்கிறது. இப்போது பிரிய நடிகை ஆக்சன் கிங்கோடு ஒரு படத்தில் மிக நெருக்கமாக நடித்து பூ நடிகையின் வயிற்றெரிச்சலை கிளப்பியிருக்கிறார்.

ரீஜு ஆட்டம்போட்ட இளம் நடிகர் இப்போதே பந்தாகாட்ட ஆரம்பித்துவிட்டாராம். அவர் பெரிய நடிகராக வருவார் என்று கருதி முக்கிய நடிகைகள் சிலர் இப்போதே அழைப்பு விடத் தொடங்கிவிட்டார்களாம்.

செவ்வாய நடிகைக்கு ஒரு பழக்கம். அதை அவரே பேட்டி ஒன்றில் சொல்லியிருக்கிறார். "தூங்கும் போது யார் எது கேட்டாலும் சரி என்று சொல்லிவிடுவேன்" பேஷ்நாளை பழக்கம்தான்.

படத்தில் முத்தக்காட்சி பற்றி இயக்குநர் விளக்கியதும் நான் ரெடி என்று அவசரப்பட்டாராம் விஜித நடிகை. காட்சி ரெடியானதும் ஆவேசமான நடிப்பு. இயக்குநரே அசந்து போனாராம்.

கிழக்கே போன ரயில் நடிகையின் தங்கை மீண்டும் ஒரு படத்தில் நடிக்க வந்திருக்கிறார். எப்படி வேண்டுமானாலும் நடிக்கத்தயார் என்று பச்சைக்கொடி காட்டியிருக்கிறார்.

ரூப நடிகை மீண்டும் நடனக் காட்சிகளில் மட்டும் நடிக்கத் தயார் என்று அறிக்கை விட்டிருக்கிறார். உழைப்பாளி வரையில் ஒரு காட்சியில் வந்து போனாலும் ஓ.கே என்கிறார். நாயகியாக மட்டுமே நடிப்பேன் என்று அடம்பிடித்தால் கையில் நாலு காசு தேறுமோ? அதுதான் இங்கும் வந்து ஆடிவிட்டுப் போனார்.

காட்சியில் நடிக்க வரும்போதுதான் உடையைக் காட்டுகிறார்கள் என்று கீர நடிகை புலம்புவது நியாயம். உடைக்கு அளவெடுக்கும் போது என்ன செய்துகொண்டிருந்தாராம் என்று கேட்கிறார்கள்.

நான் எப்போதும் சின்னநடிகர், பெரியநடிகர் என்று பாகுபாடு பார்ப்பதில்லை. எல்லோருடனும் ஒரே மாதிரியாக நடந்துகொள்கிறேன் என்று வெளிப்படையாகப் பேசுகிறார் பூ நடிகை. நல்ல பாலிசி.

## வழங்கியது மன்றம் வாங்கினார் பட்டம்!

நடிகை சிவரஞ்சனிக்கு ரசிகர் மன்றம் உருவாகிவிட்டது.

"வாழ்க தமிழ், வாழ்க கலை, வளர்க சிவரஞ்சனியின் தொண்டு." என்பதுதான் கோசம்.

மன்றத்தில் சேரவிரும்புபவர்கள் உடனடியாக சேரமுடியாது. நிபந்தனைகள் உண்டு.

சிவரஞ்சனியின் புகழைப் பரப்ப வேண்டும். சுவரொட்டிகள் ஒட்ட வேண்டும்.

அவர் நடித்த படம் வெளியாகும் முதல்நாள் வரும் ரசிக, ரசிகைகளுக்கு இனிப்பு வழங்க வேண்டும்.

சிவரஞ்சனியின் பிறந்த நாள் அன்று இனிப்பு வழங்கவேண்டும்.

அது மட்டுமா? சிவரஞ்சனிக்கு சில பட்டங்களையும் வழங்கியிருக்கிறது.

கலைக்குயில், கலைமான், அழகுமயில் நடிகையர் செல்வி, அழகுக்கன்னி. இதில் சிவரஞ்சனி தெரிந்தெடுத்த பட்டம் நடிகையர் செல்வி. பொருத்தம்தான்.



## உதயகுமார் இயக்கத்தில் சத்யராஜ்

சின்னத்தம்பி, பாண்டித்துரை, உத்தமராசா, பிக்பாக்கெட் போன்ற படங்களைத் தயாரித்த கே. பாலுவன் கே.பி. பிலிம்ஸ் அடுத்து தயாரிக்கவுள்ள புதிய படம் காளிங்கராஜன்.

கதாநாயகன் சத்யராஜ். மீனாதான் கதாநாயகி. இசை இளையராஜா. கதை-திரைக்கதை வசனம் பாடல்களை எழுதி இயக்கப்போவது ஆர்.வி. உதயகுமார்.

தமிழ் புத்தாண்டு தினத்தில் திரையிட எண்ணியுள்ளனர்.

## கவர்ச்சி ரோஜா

மொழிமாற்றுப் படங்களில் விஜயசாந்தி படங்களுக்கு அடுத்து ரோஜாவின் படங்களுக்குத்தான் அதிக கிராக்கியாம்.

காவேஜ் ரோஜா படம் கடச்சட தயாராகிறது. அதில் வில்லனின் மகளாக வருகிறார் ரோஜா. ரோஜாவைக் கற்பழிக்கும் காட்சி ஒன்று படத்தில் வருகிறதாம். அதில் கவர்ச்சியைப் பொழிந்து தள்ளியிருக்கிறாராம் ரோஜா. படமே அந்தக் காட்சியை நம்பி இருப்பதாக ஒரு தகவல்.

## முடக்கம்!

நீண்ட தலைமுடிக்குப் பெயர்போன மன்சூர் அலிகான் 40 நாட்களில் முடித்துக்காட்டுவதாக ஆரம்பித்த சூரபத்மன் படம் முடக்கத்தில் கிடக்கிறது. இப்போது சிந்துபாத் படத்தின் வேலைகளில் மன்சூர் பிசி.

## சினிமா உலகமே வேசம் இதுவரை புரியவே இல்லை

### ஹீரா சொல்கிறார்

ஒளிவு மறைவு இல்லாமல் பேசுகிறார் ஹீரா. இப்போது அவருடைய எண்ணம் மணிரத்னத்தின் மீது ஓடியிருக்கிறது. இது கிசுகிசு சமாச்சாரமில்லை! மணிரத்னத்தின் திறமை மீது ஏற்பட்ட மோகம். "அவர்மீது எனக்கொரு இருக்கு" என்கிறார் ஹீரா.

'திருடா-திருடா' படத்தில் நடிக்கிறது தான் இல்லையும், தன்னை முழுக்க முழுக்க விட்டாராம் மணிரத்னம். எனக்கு பேர்வழமான என்னை கிராமக் கதாநாயகியாக்கி அடையாளமே தெரியாமல் செய்துவிட்டார். இன் எனக்கு படங்களில் இப்படிப்பட்ட 'ரோல்கள்' நிறைய வரலாம். இந்த நம்பிக்கை வரக் காரணம் இயக்குநர் மணிரத்னமே. முதன் முதலாக இவர் நடித்த படம் "என்றும் அன்புடன்" படம். அதில் ஹீராவுக்கு அது முதல்படி. மடமடவென்று உயர முடியாவிட்டாலும் மணிரத்னம் கண்களில் மாட்டிக்கொண்டார். பரபரப்பாகிவிட்டார்.

சினிமாவைப் பற்றி அவர் பெறுகிறதும் அனுபவம். "நேர்மை பாசம் எதுவும் பேசுவாங்க ஊர். அதுக்கப்புறம் தவறைப்பற்றி மோசம் மோசமாக பேசுவாங்க. எந்த நடைமுறை வச்சிட்டு பேசுவாங்களோ. புரியவே மாட்டேங்குது" எல்லாருமே வேஷக்காரங்க. ஹீரா என்றால் கவர்ச்சி என்று பொருள். இந்த வார்த்தை அதிகமாக மறைக்கக்கூடாது என்றுதானோ என்னவோ, அவருக்கு அதிகமாகவே இவரை வெளிப்படுத்திக் காட்டுகிறார்கள்.

அதனால் தான் கவர்ச்சிக் கன்னியாகக் கண்ணுக்குத் தெரிகிறார் ஹீரா.

இதைப்பற்றி...

"என்ன மாரா செய்யச் சொல் நீங்க பாட்டுக்கு வந்தப்புறம் தான் என் உடைகளையே காட்டுறாங்க. போட்டாலும் டைரக்டர் சொல்படி நடிச்சாலும். சொல்லிக் கொடுத்த தை செய்யவேண்டியது தொழில் தர்மம் இல்லே! எடுத்த படத்தைப் போட்டுப் பார்க்கப்ப தான் தெரிஞ்சு என்னாலே" பளிச்சென்று சொல்லுகிறார் ஹீரா.



## நட்சத்திரத் துளிகள்

### படிக்கத் துடிக்கிறார்

'அமராவதி' படத்தில் அறிமுகமான சங்கவி இப்போது தமிழ் கற்றுக்கொள்ளத் துடிக்கிறார்.

தினமும் தமிழ் பத்திரிகைகளை வாங்கி எழுத்துக்களை கூட்டிக் கூட்டி படிக்க கற்றுக்கொள்கிறார். 'கன்னடத்துப் பெண்ணு நான் ஆனாலும் தமிழ் படங்களில் நடிக்கவே ஆசை' என்கிறார்.

சின்னக்கிளி, வண்ணக்கிளி, சிந்துபாத் ஆகிய படங்களில் நடித்துவருகிறார்.

தனது 18வது பிறந்த நாளை சமீபத்தில்தான் கொண்டாடினாராம். அவர் சொன்னால் நாம் நம்பவேண்டுமாக்கும்.

### இவரும் படிக்கிறார்

பேபி ஷாமிலிக்குப் போட்டியாக கருதப்பட்ட விஜயகுமார்-மஞ்சுளா தம்பதியினரின் செல்லப் புதல்வி பேபி ஸ்ரீதேவி தற்போது பள்ளிப்படிப்பில் கவனம் செலுத்தி வருகிறார். விடுமுறை நாட்களில் மட்டுமே படப்பிடிப்பில் கலந்து கொள்கிறார்.

### மெல் இடை யோ?

ஷர்மிலி அதிகமாகச் சாப்பிடுவதை நிறுத்திக் கொண்டாரோ தெரியவில்லை. இப்போது எக்கச்சக்கமாய் மெலிந்து காணப்படுகிறார். கவர்ச்சி வேடம் வேண்டாம் என்று சொன்னார். இப்போது உணர்ச்சியை கலந்த கவர்ச்சி வேடங்கள் வந்து கதவைத் தட்டுகிறதாம். இரண்டுக்கும் என்ன வேறுபாடு? யாமறியோம்.

### அந்த ஆசை இல்லை

முன்னணி நடிகைகள் வரிசையில் இடம்பிடிக்க வேண்டும் என்ற ஆசையெல்லாம் கிடையாது என்கிறார் கஸ்தூரி.

### முரளி இயக்குவார்.

பூவிலங்கு என்ற படத்தின் மூலம் அறிமுகமானவர் முரளி. தந்தையார் கன்னடப்பட இயக்குநர். இப்போது முரளியும் ஒரு படத்தை இயக்கப் போகிறார். இயக்கலாமா தெரிக்கலாமோ என்று படம் வெளியான பின்னர்தானே தெரியும்.



### பிரபுவின் புதிய படம்

பிரபு நடித்து வெற்றி பெற்ற சின்ன மாப்ளே திரைப் படத்தை அம்மா கிரியேசன்ஸ் சார்பில் தயாரித்தவர் டி. சிவா. இவர் பிரபுவை வைத்து மற்றொரு படத்தைத் தயாரிக்க உள்ளாராம்.

ராஜ்கபூர் இயக்கவிருக்கும் இப்படத்திற்கு மற்றைய நடிக நடிகையர் தேர்வு விரைவில் நடைபெறவுள்ளது. பொங்கல் அன்று வெளியாகவுள்ள பிரபுவின் ராஜகுமாரன் சம்பந்தப்பட்ட படவேலைகள் முடிவடைந்த பின்னர், இப்படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகும்.

### கவிதை ரெடி

ஓய்வு நேரங்களில் கவிதை எழுதும் பழக்கமுடையவர் நாசர். பழம்பெரும் எழுத்தாளர்களின் நாவல்களிலும் விருப்பம். ஒரு தலைப்பைக் கொடுத்து கவிதை கேட்டால் அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் புதுக்கவிதை ரெடி.

### சுண்டுவிரலைக்கடித்த போது...

ரஞ்சிதாவிடம் ஒரு கேள்வி. நாடோடித் தென்றல் படத்தில் கார்த்திக்கின் சுண்டுவிரலை கடிக்கும்போது உங்களுக்கு எப்படியிருந்தது?

அதற்கு ரஞ்சிதா சொன்னதில், "படத்திலேயே அந்த உணர்ச்சியை காண்பித்துவிட்டேன். மீண்டுமொரு முறை பாருங்கள் புரியும்." பார்த்து புரிந்து கொண்டால் சரி.

www.padippakam.com






## ரசிகன் கேட்கிறான்!

புலம்பல் மூலை

"...கலக்குது பார் இவர் ஸடைலே..." என்று பாடல்களை மட்டுமில்லை, சினிமாவை இன்று கலக்கிக்கொண்டிருக்கிறார்கள்! படங்களையும். இது இங்கே யாருக்குமே கேலிக்கூத்தாகத் தெரியவில்லை.

எப்படியாவது கலக்கிக்கலக்கி, கலங்கிய குட்டையில் மீன் பிடிப்பது போல் கலக்ஷனைப் பார்க்க வேண்டும் என்பதே சினிமாவின் நோக்கமாகிவிட்டது!

இப்படி ஒரு பரிமாணம் சினிமாவில் ஏற்படக்காரணம் தொலைக்காட்சியும் வீடியோவும் என்ற ஒரு கருத்து, பரவலாகப் புகைத்துவிடப்பட்டது. ஆகவே, தொலைக்காட்சிகள் சினிமாவின் எதிரிகள் என்று சொன்னவர்களுக்கு இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தம்மை அடையாளம் காட்டி வருகின்றன. நாங்கள் எதிரிகள் அல்ல; சிநேகிதர்களே என்று! பெரும்பாலும் சினிமாப் படங்கள், அல்லது சினிமா சம்பந்தப்பட்ட துண்டுகள்...துணுக்குகள்... பேட்டிகள். இவையே இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள. தொலைக்காட்சிகள்சினிமாவின் எதிரிகளா? அல்ல-இது நிரூபணம்!

இன்றைய சினிமாவின் பரிமாணம் உடைந்துப் போனதற்குக் காரணம்- இவை எல்லாமில்லை. வேறு ஏதோ இருக்கிறது.

என்ன அது? இன்றைய சினிமாவே சினிமாவின் எதிரியாக மாறிட யாது காரணம்?

கதையை விடச் சதையின் மீது அதிகக் கவனம் செலுத்த வைத்தவர்களைக் கூட சினிமா மாற்றியது. மறுபரிசீலனை செய்ய வைத்திருக்கிறது. ஆனால் இப்போது சினிமாவுக்குள் புகுந்துள்ள சர்க்கஸ்காரர்களையும், மேஜிக் நிபுணர்களையும் எப்படிச் சிறந்த திரைக்கதாசிரியர்களாகவும், இயக்குநர்களாகவும் மாற்றுவது என்றுதான் இன்றைய சினிமா திண்டாடிக் கொண்டிருக்கிறது. மாற்றுவது யார்?

நீங்களும் இந்த மூலையில் வந்து புலம்பலாம்.



## குஷ்புவைக் கொல்லச் சதி!

குஷ்புவைக் கொல்வதே அவனது திட்டம். கொல்லத்துடிக்கிறான். ஆனால் கொல்லப்போன இடத்தில் மனம் மாறிவிடுகிறது. கொல்லத்துடித்த மனது தனது காதலை குஷ்புவிடம் சொல்லத் துடிக்கிறது! இப்படியொரு காட்சி 'ரோஜாவைக் கிள்ளாதே' படத்தில் இடம்பெறுகிறது. மேடைப்பாடகியாக குஷ்பு நடிக்கிறார். கொல்லத்துடிப்பவராக நடிப்பது அரவிந். இயக்கம் அண்ணாமலை புகழ் சுரேஷ்கிருஷ்ணா.

### கமலின் முடிவு

தானே திரைக்கதை எழுதி இயக்கி நடிக்க கமல் திட்டமிட்டிருந்த படம் மருதநாயகம். இந்த ஆண்டு படப்பிடிப்பு தொடங்குவதாக இருந்தது. ஆனால் இப்போது நடிக்கும் மகாநதி படத்தை நடித்து முடித்து வேறு ஒரு படத்திலும் நடித்த பின்னர்தான் மருதநாயகம் வேலையில் கமல் இறங்கப் போகிறார்.

என்றாலும் முடிவு திடீர் என்று மாறக் கூடும். கமல் அப்படித்தான்.

### "வீட்டைப்பாரு நாட்டைப்பாரு"

வைகாசி பிறந்தாச்சு, தெற்குத் தெரு மச்சான், பொண்டாட்டி ராஜ்யம் ஆகிய படங்களைத் தயாரித்த கே. பிரபாகரனின் அன்பாலயா பிலிம்ஸ் புதிய படம் ஒன்றைத் தயாரிக்கிறது.

"வீட்டைப்பாரு நாட்டைப்பாரு" இதுதான் படத்தின் பெயர்.

சிவகுமாரும், சரவணனும் இணைந்து நடிக்கின்றனர்.

### வருஷம் பத்து ஆகும்

சிவரஞ்சனிக்கு காதல் திருமணத்தில் உடன்பாடு கிடையாதாம். இன்னும் பத்து வருடத்திற்கு திருமணம் பற்றிய பேச்சுக்கே இடமில்லை என்று அடித்துச் சொல்கிறார்.



### அடுத்தது இவர்கள் தான்

பிரபு-குஷ்பு திருமணம் என்ற வதந்தியை அடுத்து இன்னொரு திருமண வதந்தி விரைவில் வரக்கூடும். சரத்குமார் ஹீரா பெயர்கள் அதில் அடிபடக்கூடும்.

இருவரும் அதிக படங்களில் இணைந்து நடித்துள்ளனர்.

ஏனைய நடிகர்களை விட சரத்குமாரோடு ஹீரா தாராளமாக நடிப்பதாக ஏற்கனவே ஒரு பேச்சு.

சரத்குமாரிடம் கேட்டால் சிரிக்கிறார். ஹீராவிடம் கேட்டால் கோபத்தில் வெடிக்கிறார்.

எந்தப் பத்திரிகை இருவருக்கும் டும். டும் என்று செய்தி போடப் போகிறதோ?

நம்ம அண்ணாச்சி படத்தில் சரத்குமார்-ஹீரா

## மினி சினி



செந்தில்

- ★ அடுத்த ஆண்டில் சத்தியராஜ் படமொன்றை இயக்க எண்ணியுள்ளார். அந்தப் படத்தில் மேலும் ஒரு விசேஷம் என்னவென்றால், இளையராஜாவின் இசையில் சொந்தக்குரலில் சத்தியராஜ் பாடலொன்றைப் பாடப்போகிறார்.
- ★ ராதாபாரதி இயக்கிய அக்கரைச் சீமையிலே படம் முழுவதும் சிங்கப்பூர், மலேசியாவில் எடுக்கப்பட்டது. இவர் அடுத்ததாக எடுக்கவிருக்கும் படம் அந்தமான் ரோஜா. இப்படம் முழுவதும் அந்தமானில் படமாக்கப்படவுள்ளது.
- ★ படங்களுக்கு விளம்பரத்திற்காக பெரிய அளவில் கட்-அவுட்கள் வைப்பதுண்டு. பார்த்திபன், தான் இயக்கி நடிக்கும் கருப்பண்ணசாமி படத்திற்கு வித்தியாசமாக விளம்பரம் செய்துள்ளார். கட்-அவுட்டிற்குப் பதிலாக கருப்பண்ணசாமியின் உருவச் சிலையை செய்து வைத்துள்ளார்.
- ★ தங்க மனசுக்காரன், தங்கக்கிளி போன்ற படங்களை இயக்கியவர் ராஜவர்மன். இவர் அடுத்து இயக்கும் படத்திற்கு பாளையக்காரன் எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- ★ தமிழகத்தில் கலெக்டர் சந்திரலேகா மீது அசிட் ஊற்றப்பட்ட உண்மைச் சம்பவத்தை ஊழியன் படத்தில் சேர்த்துள்ளார்கள். இந்த வேடத்தில் கீதா நடிக்கிறார்.
- ★ மறைந்த பிரபல இயக்குநர் பீம்சிங்கின் மகன் எடிட்டர் பீ. லெனின் இயக்கிய குறுந்திரைப்படம் நொக்-அவுட். இப்படத்திற்கு சென்ற ஆண்டு மத்திய அரசிடம் இருந்து தங்கப்பதக்கம் கிடைத்தது. லெனின் மீண்டும் ஒரு குறும்படத்தினை எடுக்கவுள்ளார்.
- ★ சோலையம்மா படத்தில் வில்லனாக அறிமுகமாகிப் பலரின் பாராட்டுதல்களைப் பெற்றவர் கரிகாலன். இவரை திருடா திருடா படத்தில் இரண்டு காட்சியில் மட்டும் நடிக்க மணிரத்தினம் அழைத்தார். ஆனால், கரிகாலன் மறுத்துவிட்டார்.
- ★ நகைச்சுவை நடிகர்களில் முன்னணிக்கு வந்துகொண்டிருப்பவர் வடிவேலு. பிரபல நடிகர்கள் இவரைத் தமது சொந்தப்படங்களில் நடிக்க வைக்கின்றனர். கமலின் தேவர்மகன், ரஜினியின் வள்ளி போன்றவற்றைத் தொடர்ந்து பிரபுவின் ராஜகுமாரனில் நடிக்கிறார்.
- ★ விக்கிரமன் அடுத்து இயக்கும் படமொன்றிற்குஇசையமைப்பதற்காக ஏ.ஆர்.ரகுமான் ஒப்பந்தமாகியுள்ளார்.
- ★ முத்துராமன் நடித்த திக்குத் தெரியாத காட்டில் படத்திற்குப் பிறகு முழுக்க முழுக்க அடர்ந்த காடுகளில் எடுக்கப்படவுள்ள படம் என்னால் முடியும். என்கிறார் அப்படத்தின் இயக்குநர் தசரதன்.
- ★ அரண்மனைக்கிளியில் இரண்டாவது கதாநாயகியாக நடித்தவர் காயத்ரி. இவர் தற்போது மஞ்சக்காணி என்ற படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# பாப்பா முரசு

## பாப்பா முரசு சிறுகதை

# இனிப்பா? உப்பா?

ராஜவர்மனுக்கு ஏழு புத்திரிகள். ஏழுபேரும் எவ்வளவு விசுவாசமாக இருக்கிறார்கள் என அறிய ஆசைப்பட்டார் அரசர்.

அதனால் அந்தப்புரத்திற்குப் போனார்.

"குழந்தைகளே! என் மீது



உங்களுக்குப் பிரியம் இருக்கிறதா?" எனக் கேட்டார்.

"ஏன் அப்பா இப்படிக் கேட்டு விட்டீர்கள்? எங்களுக்கு உங்கள் மீது பிரியம் இல்லாமல் போகுமா?" என்று ஏழுபேரும் குரல்கொடுத்தனர்.

"இப்படிச் சொன்னால் போதாது. யார்யாருக்கு என்மீது எத்தனை பிரியம் இருக்கிறது, அது எந்தமாதிரிப் பிரியம் என்பதைக்கேட்டுத் தெரிந்து கொள்ளப்போகிறேன்." என்றார்.

"தாராளமாகக் கேளுங்கள்," என்றனர் அனைவரும்.

"அமுதா இங்கே வா! நீ எந்தளவு என்னை நேசிக்கிறாய்?" என்று கேட்டார்.

"அப்பா ஜாங்கிரி என்றால் எனக்கு மிகவும் பிரியம். அந்த அளவு பிரியம் உங்கள் மீதும் உள்ளது", என்றாள் அமுதா.

இதே கேள்வியை ஒவ்வொருவரிடமும் கேட்டுக்கொண்டே வந்தார்.

"லட்டு மாதிரி இருக்கப்பா" சுகன்யா.

"குலோப்ஜாமூன் மாதிரி இருக்கப்பா" அனுசூயா.

"மைசூர்பாகு மாதிரி இருக்கப்பா" வேணி.

"அல்வா மாதிரி இருக்கப்பா" சுவர்ணலதா.

"பாதுஷா மாதிரி இருக்கப்பா" மல்லிகா.

ஏழாவது பெண் லதா மட்டும் வித்தியாசமாகச் சொன்னாள்.

"உப்பு மாதிரி இருக்கப்பா" என்றாள்.

இதைக் கேட்டதும் ராஜாவுக்கு வந்ததே கோபம்.

"ஏண்டி கழுதை, எல்லாரும் இனிப்பு மாதிரி பிரியம் என்மீது இருக்குன்னு சொல்லுறாங்க. நீ மட்டும் உப்பு மாதிரி இருக்குன்னா சொல்லுறே. நீ இப்பவே வீட்டைவிட்டுப்போயிடு."

லதாவைத் தரதரவெனக் கையைப் பிடித்து இழுத்துக்குதிரை மீது ஏற்றி, காவலாளியை அழைத்து, "இவளை ஊருக்கு வெளியே யாரும் நடமாடாத இடத்தில் விட்டுவிட்டுவா. என்னை உப்போடு ஒப்பிட்டவள் அதை உணரும்வரை அங்கேயே இருக்கட்டும்." என்றார்.

லதா திகைத்தாள், அழுதாள் கதறினாள்.

மன்னர் மனம் இளகவில்லை. சகோதரிகள் ஆறுபேரும் இச்செயலை தடுக்கவில்லை.

லதா அழைத்துச்செல்லப்பட்டு நடுக்காட்டில் விடப்பட்டாள்.

ஒரு இளவரசர் அந்த வழியே போகும்போது லதா அழுதுகொண்டிருப்பதைப் பார்த்தார். குதிரையை விட்டு இறங்கி வந்து, "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார். இளவரசி நடந்தவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல் சொன்னாள்.

"மன்னர் மகளே நீ! அழாதே! என்னுடன் வா, நான் உன்னைத் திருமணம் செய்துகொள்கிறேன்," என்றார் அந்த மன்மதபுரி இளவரசர்.

இளவரசி லதாவும் இளவரசருடன் சென்றாள்.

சில வருடங்களுக்குப் பிறகு, காட்டில் வேட்டையாடப் போனார் இளவரசர். அங்கே ஒருபேரரசரும் வேட்டையாட வந்தார். இளவரசர் அவரைத் தன் அரண்மனைக்கு வந்து விருந்து சாப்பிட அழைத்தார். பேரரசருக்கு களைப்பும், பசியும் மேலிட சிற்றரசரின் அன்புக்குப் பணிந்து அவருடன் வந்தார்.

"லதா ஒரு பேரரசரை நமது விருந்தினராக அழைத்து வந்திருக்கிறேன் விருந்து ஏற்பாடு செய்," என்று கூறிவிட்டு இளவரசர் பேரரசருக்கு அரண்மனைப் பூங்காவைச் சுற்றிக் காட்டப் புறப்பட்டார்.

வந்திருப்பது தன் தந்தை தான் எனத் தெரிந்து கொண்ட லதா, லட்டு, அல்வா, மைசூர்பாகு, ஜிலேபி, குலோப்ஜாமூன் இப்படி இனிப்புகளுடன், உப்பிட்ட கீரைக்கூட்டும் சமையல் செய்யச் சொன்னாள். பிறகு அவற்றைத்தானே பரிமாறினாள். முக்காடு அணிந்து பரிமாறியதால் ராஜாவிற்குஅவளைத் தன் மகள் என அடையாளம் தெரியவில்லை.

பசியோடு இருந்த அவருக்கு முதலில்இனிப்பு வகைகளைப் பரிமாறினாள். பசி அடங்கவில்லை. கடைசியில் உப்பிட்ட கீரைக் கூட்டு பரிமாறியபோது, "அப்பாடா வயிறு நிரம்பிற்று," என்றார் அரசர்.

அப்போது முக்காடை எடுத்து விட்டு, "அப்பா! என்னைப் பார்த்துச் சொல்லுங்கள். இப்போது இனிப்பு பசியைப் போக்கிற்றா? இல்லை கடைசியில் பரிமாறிய உப்பிட்ட கீரை சாப்பிட்ட பிறகு வயிறு நிறைந்ததா?" எனக் கேட்டாள்.

மன்னர் தலை நிமிர்ந்து இதுவரை பரிமாறியது தனது கடைசி மகள் லதா என்பதைத் தெரிந்துகொண்டு, "நீ உப்பு மாதிரி இருக்கு என்பதன் பொருள் இப்போது புரிந்ததம்மா, என்னை மன்னித்துவிடு," என்றார்.

---

அமெரிக்க பள்ளி மாணவர்களிடையே நடத்திய ஆய்வில், காலை உணவை நன்றாகச் சாப்பிடும் மாணவர்கள் தான் பள்ளியில் சிறந்து விளங்குகின்றனர், தவறாமல் பள்ளிக்கு வருகின்றனர் என்று தெரிய வந்துள்ளது. நம் ஊருக்கும் இது பொருந்தும் அல்லவா? இனி ஒருபோதும் காலை உணவைப் புறக்கணிக்காதீர்கள்.



கனடாவில் எட்மன்டன் என்ற இடத்தில் 1988ம் ஆண்டு ஜூலை 24ம் திகதி பாம் டயரிஸ் என்ற கம்பெனி மிகப் பெரிய ஐஸ் கிறீமை செய்தது. அதன் எடை இருபத்து நாலாயிரத்துத் தொளாயிரத்து எட்டு கிலோ.



---

## தம்பிக்கொரு வார்த்தை



ஆசைத தம்பி இங்கே வா
அழகாய்ப் பாடம் படித்திடவா
அம்மா அப்பா சொல்கேட்டு
பண்பாய் நீயும் வாழ்ந்திடவா
உன்னை நம்பும் பாரினிலே
உண்மையாய் நீயும் வாழ்ந்திடப்பார்
ஆசைத்தம்பி இங்கே வா."

செல்வி தனுஷா கலியபெருமாள்
கனிஷ்ட பாலிகா வித்தியாலயம்
நாவலப்பிட்டி.

## விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை



1. கிரிக்கெட்-11
2. காற்பந்து-11
3. பேஸ்போல்-7
4. ஹொக்கி-11
5. ரக்பி-15
6. நெற்போல்-6
7. டென்னிஸ் (தனி) ஒற்றையர் 2 இரட்டையர் 4

எம்.சிவகுமார்
நு/ த.ம.வி.கொத்தனி பாடசாலை,
அக்கரப்பத்தனை.

## பதினாறு செல்வங்கள்

பதினாறு செல்வங்களும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்க எனப் பலர் வாழ்த்தும் போதிலும் அச்செல்வங்கள் எவை எனப்பலருக்குத் தெரியாது. அவை இதோ:

| | |
|---|---|
| புகழ் | கல்வி |
| ஆற்றல் | வெற்றி |
| நன்மை | பொன் |
| நெல் | அழகு |
| பெருமை | ஆயுள் |
| இளமை | அறிவு |
| துணிவு | நோயின்மை |
| நல்லூழ் | நுகர்ச்சி |

செல்வி பைனூஸா ஏ.றஸாக்
நிந்தவூர்-04.

## விடுகதைகளும் விடைகளும்

1. ஊத ஊத உடம்பு வைப்பான். ஊசி குத்தினால் செத்துப்போய் விடுவான். அது என்ன?
2. பச்சைச் சேலை கட்டியவளும் சிவப்புச் சேலை கட்டியவளும் தெருச் சந்தியில் நின்றனர். அது என்ன?
3. உரித்த கோழி சந்தைக்குச் சென்றது. அது என்ன?
4. அடிப்பாள், அணைப்பாள். அவள் யார்?
5. வெளியே பச்சை நிறத் தோல். உள்ளே வெள்ளை முத்துக்கள். அது என்ன?
6. முகத்திலே இரு வெள்ளைத் தட்டுக்களாம். ஒரு வெள்ளைத்தட்டில் ஒரு கறுப்பு நிறக் குண்டாம். மற்ற வெள்ளைத்தட்டிலும் ஒரு கறுப்பு நிறக் குண்டாம் அது என்ன?

விடைகள்
1. பலூன்
2. தபாற்பெட்டிகள்
3. தேங்காய்
4. தாய்
5. வெண்டிக்காய்
6. கண்கள்

செல்வி ச.கோமதி
விவேகானந்தாக்கல்லூரி-கொழும்பு.

1. கனலை ஏந்தியதும் கண்ணீர் வடிப்பாள். கண்ணீர் வடிந்ததும் கரைந்து போவாள்.
2. தினமும் வருவான். புதினம் தருவான்.
3. முள்ளம் பன்றி வயிற்றுக்குள்ளே வைக்கல் குடல். வைக்கல் குடலுக்குள்ளே வைர மணிகள்.
4. காட்டிலே ஊர்ந்து வரும் பாம்புமல்ல; பயங்கரமாய் ஊளையிடும் நரியுமல்ல; வெளிச்சம் எடுத்து வரும் சந்திரனல்ல; எதற்கும் பயப்படாத சிங்கமல்ல.
5. ஓராண்டு உயிர்வாழ்வாள், ஒயிலாகக் காட்சி தருவாள். பன்னிரு குழந்தைகளைப் படிப்படியாகப் பெறுவாள்.
6. வயல் வெளியில் ஆடும்போது வைரத் தோட்டைத் தொலைத்தாளாம். சந்திரன் பார்த்துப் போய்விட்டான். சூரியன் பார்த்தான். தூக்கிச் சென்றான்.
7. உனக்குச் சொந்தமான பொருள். ஆனால், உன்னைவிடப் பிறரே அதிகம் உபயோகிப்பர்.
8. பச்சைக் கொடியிலே தயிர்சாதம் தொங்குது.
9. காட்டிலே பச்சை! கடையிலே கறுப்பு! வீட்டிலே சிவப்பு.
10. சொல்லாமல் வரும்! நில்லாமல் போகும்.

விடைகள்
1. மெழுகுதிரி
2. புதினப்பத்திரிகை
3. பலாப்பழம்
4. ரயில்வண்டி
5. கலண்டர்
6. பனித்துளி
7. உன்பெயர்
8. மல்லிகைப்பூ
9. தேயிலை
10. நாளை

சு.சுமன்.
நு/தமிழ் மகா வித்தியாலயம்- தலவாக்கலை.

1. பகலிலே தூங்குவான். பல்லைக் காட்டுவான். தலைகீழாகத் தொங்குவான். தலையாலே கழிவான். அவன் யார்?
2. அடர்ந்த காட்டிலே இரத்தம் குடிக்கும். அரக்கர்கள் ஊர்ந்து செல்லுகிறார்கள். அது என்ன?
3. முகம் உண்டு பார்க்காது. முள் உண்டு குத்தாது. குரல் உண்டு நாக்கில்லை. அது என்ன?
4. அவள் என்னைத் தொட்டாள். என்னால் அவளைத் தொட முடியவில்லை. அவள் யார்?

விடைகள்
1. வௌவால் 2. பேன்
3. வானொலி 4. காற்று

ஸுலைஹா அஸ்ஹர்
ஆண்டு 3-சீ
அறபா கனிஷ்ட வித்தியாலயம்-வெலிகாமம்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 27.11.1933.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 16
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 13

பரிசுக்குரியவர்-தர்ஷினி நாகலிங்கம் - கொழும்பு-13.

பாராட்டுக்குரியவர்கள்-1. ஜெ.பிறசாந்தினி-விவேகானந்த மகளிர் மகாவித்தியாலயம்-மட்டக்களப்பு.
2. செல்வி. அஞ்சனா இரங்கசாமி-மகளிர் மகாவித்தியாலயம்-வவுனியா.
3. எம்.எம்.பௌஸி-அல்.அக்ஸா மகாவித்தியாலயம்-கிண்ணியா.
4. க.கார்த்தீபன்-இந்துக்கல்லூரி-கொழும்பு-4.
5. செல்வி. நர்மதா வேல்முருகு-வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை-மட்டக்களப்பு.
6. மெத்தியேஸ்.அகல்யா-இந்துக்கல்லூரி-வாழைச்சேனை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## துணிந்து எழு!

தொடங்குவோமே
பிறகு-
தொடங்குவோமே
என்று தூங்கிக்கொண்டிருந்தால்
தேல்விகளின் படையெடுப்பு
தொல்லையாகத்தானிருக்கும்;
தொடங்கிவிட்டேனென்று
துணிந்துவிட்டால்
தோல்விகளுக்கு நீயொரு
தொல்லையாயிருப்பாய்.

•

கடல் வற்றியதும்
கரை சேரலாமே என்று
கனவு கண்டாயானால்
தத்தளிப்பதை உன்னால்
தவிர்க்கவே முடியாது;

•

புயலையும் நீ
பிய்த்து எறிய வேண்டாமா?
முதலில்-
முடியாது என்பதை
மூட்டைகட்டிப் போடு;
உன் இடத்திற்கு
ஓடிவரும்
சந்தர்ப்பங்களோடு
சங்கமமாகிக் கொள்;
வெற்றியின் பாதை
விரிந்து கிடப்பதை
விளங்கிக் கொள்ளுவாய்!

•

ஆனால்-
கவலைகளுக்கு மட்டும்
கட்டுப்பட்டுவிடாதே!
சோம்பல் தீயால்
சுடுபட்டுப் போவாய்!

•

தோல்வி உன்னைத்
தொட்டு விட்டதற்காக
தூங்குவதற்கு மட்டும்
துணிந்துவிடாதே!
தோல்வி-
தொட்ட இடத்தைத்
திரும்பிப்பார்;
அங்கேதான்-
வெற்றியின் விலாசம்
விழுந்து கிடக்கும்!

•

தேன் தேவைப்பட்டவர்கள்
தேனீக்களால்
தீண்டப்படவில்லையா?
முன்னேற்றம் வேண்டுமென்றால்
முட்களோடு என்றாலும்
முத்தமிட்டுத்தானாக வேண்டும்!

•

கஷ்டங்களை ஒரு போதும்
கடிந்து கொள்ளாதே!
இஷ்டப்படுபவைகளை
இழந்து விடுவாய்

•

துணிந்து புறப்படு!
சூரியனையும் உன்னால்
சுட்டெரிக்க முடியும்;
துணிந்து புறப்படு!

-காத்தான்குடி அனு-



# தேன் கிண்ணம்

## வித்தியாசமான க(வி)தை

### வேட்டி கொயித?

மஞ்சள் இடுப்பழகி
மதிமுகத்துப் பொட்டழகி
சங்குக் கழுத்தழகி
சந்தனம் போல் மெய்யழகி...
சிரிப்பாலே மயக்கியதால்
யுகம் யுகமாய் டாவடித்தேன்.
கண்ணீர் கடல் நீந்தி
பெற்றோரைப்
பணிய வைத்தேன்.
இருமனம் சேர்ந்ததால்
திருமணம் முடிந்தது...
-மாலை-
தனியாக ஒரு இடம்
இருபுறமும் தேன் குடம்
நடுவிலே கட்டில்
கட்டிலெல்லாம் மல்லிகைப்பூ!
மெத்தை புல்லரிக்க
வெளிக் கதவு சடசடக்க
மெல்லத் திறந்தேன்...
ஒரு பாற்குடம்
ஒரு பாற்கிண்ணத்தை
ஏந்தி நின்றது!
உள்ளே இழுத்து
நனைத்தேன் இதழை!
நினைத்தேன் அதிகமாய்!!
பாலை அருந்துதற்கு
பாதி "ரா" போகுமின்னு
பக்கத்தில் வைத்தேன்
பாலை.
வெட்கத்தில் நெளிந்தாள்
சோலை....
காதல் கதை பேச
காரிகையே நேரமில்லை.
வாடி என்னருகில்-மலர்
வாடிப் போகுமுன்னே...
அதற்கு மேல் பேசவில்லை.
விளக்கு விழி மூட
காமன் இமை திறந்தான்!
சொர்க்கம் இறங்கி வந்து
பாயில் படுத்துக்கொண்டது!
தேன் குடித்தான் போல்
சில நிமிடங்கள்
வியர்வைக்குள் செலவழிய,
படபடன்னு பெரிய சத்தம்.
(சத்தியமாய் கதவிலிருந்துதான்!)
அகப்பட்டதை அணிந்து கொண்டு
வெறுப்போடு மீண்டும்
திறந்தேன், கதவை!
இருட்டுக்குள் இருட்டாய்,
காக்கி நிறத்தோடும்
கடுகடுத்த முகத்தோடும்
நாலைந்து பொலீசார்!
அன்பாய்க் கத்தி
ஆதரவாய் திட்டினார்கள்!
பெயரைப் பதிஞ்சாச்சா?
நம மொக்கத?
கம கொயித?...
கேள்விகள் நீண்டன
முதலிரவும் அதுவுமாய்
முக்கிய நேரத்தில்
கேள்வியா...?
யாராவது ஒருவன்
வேட்டி கொயித?
என்று கேட்டால்- நான்
என்ன சொல்வது?!!

எம். சுரேஷ்.

## மனிதன் ஒரு தீ!

மனிதனே
தூரத்தில்
ஒரு பிணம் தெரிகிறது
உற்றுப்பார்!
உன் முன்னால்
உன் கல்லறை
கட்டப் பட்டுக்கொண்டிருக்கிறது.
ஒவ்வொன்றாக
உதிர்ந்து போகும்-உனது
நாட்களால்-?

அதோ-அந்தப் பிணத்தில்
மொய்த்துக்கொண்டிருக்கிறது
ஈக்கள்.

உன் மண்ணறையில்
உன்னைக் கலைக்க
உருவாகிக்
கொண்டிருக்கிறது
புழுக்கள்.

உன் ஆயுளைக்
குடித்துக் கொண்டிருக்கின்றன
உன் முன்னால்
மாட்டப்பட்டிருக்கும்
கடிகார சப்தங்கள்.

விரைவுகளிலும்
பர பரப்புக்களிலும்
நீ
அழிந்து கொண்டிருப்பது
அதோ
உன் முகத்தின்
களைப்புக் கோடுகள்
படம் பிடித்துக் காட்டுகின்றன.

வீதியில்
ஒரு பிண ஊர்வலம்
சேகரித்தவைகளை
வாரிசுக்காரர்களுக்காக
விட்டுச் செல்லும்
ஒரு சடலம்.

நெருப்பு
நினவுகளால்
எரிந்து போகும் மனிதர்களுக்காக
கல்லறைகள்
குளிரூட்டப்பட்டிருக்கின்றன,

சவக்காட்டில்
சவம் ஒன்று
எரிந்து கொண்டிருக்கின்றன.

அதனோடு
அவன்
ஆத்ம விருப்புக்களும்
எரிந்து கொண்டிருக்கிறது.

மனிதன்
எரிந்து கொண்டே?
பிறக்கிறான்
வாழ்கிறான்
சாகிறான்.

பிறப்பு
அழுகைத் தீ

பசித் தீ
பொறாமைத் தீ
உணர்வுத் தீ
காமத் தீ
பாசத் தீ
பயத் தீ
அவன்
எரிந்து கொண்டே
இருக்கிறான்
இறக்கிறான்.

பௌஸர் ஷிஹாபத்
சீனன் கோட்டை.



## யாழ் குடாவைக் கவனியுங்கள்!

கோரப் பலியெடுக்கும்
குண்டுகளையும் வேட்டுகளையும்
ஒழித்துக்கட்டி
வேடிக்கையாக
பட்டாசும் மத்தாப்பும்
கொழுத்தி மகிழ வேண்டும்!

முகாம்களில்
சீரழியும் அகதிகளின்
நிலை மாறி
சொந்த இடங்களில்
வாழ சுதந்திரம் வேண்டும்!

போரிலே மாளும்
இன்றைய சந்ததியையும்
கருவிலே அழியும்
நாளைய சந்ததியையும்
காப்பாற்ற வேண்டும்!

மலிந்து கிடக்கும்
பட்டினியையும் பஞ்சத்தையும்
போக்க
தேங்கியிருக்கும்
பண்டங்களையும் பொருட்களையும்
பகிர்ந்தளிக்க வேண்டும்!

உதிரத்தை உறிஞ்சி
செந்நிறமாகும் மண்ணை
பயிர்களை வளர்த்து
பசுமையாக்க வேண்டும்!

நாட்டைவிட்டு ஓடும்
அகதிகளை
அணைத்தெடுத்து
தொழில் வளங்களை
பெருக்க வேண்டும்!

வழுக்கி விழும்
குறுக்குப் பாதைகளை
தவிர்த்துக்கொண்டு
நிமிர்ந்து நடக்கும்
நேர்வழிகளை
திறந்திட வேண்டும்!

மறைந்திருக்கும்
கல்வியையும் கலையையும்
வெளியுலகிற்கு
எடுத்துக்காட்டி
புகழ் பரப்பிட வேண்டும்!

சென்ற இடமெல்லாம்
தமிழன் அகதி!
அதிலும்
இருக்கும் இடத்திலும் அவதி!

-வை நிரு-

# அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:**

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



**இலக்கம்-17**
**சுப்பர் ஸ்டார் சந்திப்பு**

காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-..............................
படத்தின் இயக்குநர் பெயர்:-..............................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-..............................
இப்படம் வெளியான ஆண்டு:-..............................

*பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.*



## எங்களூர் எங்கிருக்கு?

புயலடித்தும் இடம் பெயர்ந்து ஓடாத நாங்கள்- வெள்ளம்
பெருக்கெடுத்தும் அடியெடுத்துப் போகாத நாங்கள்
பயிரழிக்க வந்த அறக்கொட்டினான் போல் வீரர்-அன்று
படையெடுத்து வரக்கண்டு பறந்தோடி வந்தோம்.

தயவு தாட் சணியங்கள் சற்றுமில்லா நாட்டில்- நாங்கள்
தவழ்ந்த மண்ணில் மீண்டும் கால் புதைப்பதெந்த நாளோ?
உயர்வு தாழ்வு ஒன்றாகிச் சங்கமித்து மீண்டும்- நாம்
ஒருகுலமாய் வாழ்வதற்கா வந்ததிந்தக் கோலம்?

என்வளவு, உன்வளவு இது எனது வீடு- என்ற
எல்லைகளைப் போட்டு வாழ்ந்த எல்லோர்க்கும் வாழ்வு

இன்றகதி முகா மொன்றில் கழிகிறதே காணீர்- இந்த
இனிமையான உணர்வினி மேல் எழுந்திடுமா நெஞ்சில்?

வீடுவாசல் அழிந்து தரை மட்டமாகப் போச்சாம்- எந்த
வளவெவர்க்கு என்ற சமர் தொடங்கிடுமா மேலும்?
ஓடிவந்த போது கொண்டு வந்த உயிர் மட்டும்- எங்கள்
உடமையென்று சொல்வதற்கும் முடியவில்லை இன்று!

காடுவெட்டிப் புதிதாகச் சேனைசெய்தல் போலே-எங்கள்
கவலைகளை மறந்தங்குபோய்வாழ வேண்டும்.
தேடுகின்றோம் எங்களூரை தெரியவில்லை விலாசம்- இது
தானுங்கள் ஊரென்று யார் காட்டுவார்கள்?

செ. குணரத்தினம்
மட்டக்களப்பு.

# இந்த வாரம் உங்கள் பலன்

**(21.11.93 முதல் 27.11.93 வரை)**

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

விருட்சிகம் - சூரியன், செவ்வாய், இராகு
மகரம் - சனி
இடபம் - கேது

மகரம், கும்பம், மீனம், மேடம் இராசிகளில் சந்திரன் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ச்சி, தனலாபம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, சிறப்பு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- | துயர் மிகுதி, கடன் பயம். | காலை 8 மணி |
| வியாழன்- | முதியோர் சீற்றம், வீண் பகை. | காலை 10 மணி |
| வெள்ளி- | எடுத்த கருமம் வெற்றி, பணவரவு. | பி.ப 3 மணி |
| சனி- | செய்தொழில் நஷ்டம், மேன்மை. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, கௌரவம், கீர்த்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | தொழில் மேன்மை, உயர்வு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | உயர்ந்த நிலை, மறைமுக எதிர்ப்பு. | காலை 9 மணி |
| புதன்- | காரியானுகூலம், வெளியிடப் பிரயாணம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | நடைக் கஷ்டம், அகால போசனம். | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் இழப்பு, செலவு. | பகல் 12 மணி |
| சனி- | மனக்குழப்பம், வீண் மனஸ்தாபம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | விருந்தினர் வருகை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, மனத் தெளிவு. | காலை 8 மணி |
| புதன்- | தொழில் மேன்மை, பணவிருத்தி. | பகல் 11 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, சேமிப்புத் தன்மை. | காலை 7 மணி |
| வெள்ளி- | வெளியிட வாசம், துயர் அதிகம். | பி.ப 3 மணி |
| சனி- | கடன் பயம், நிலைப்பிரிவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | பணவரவு, எடுத்த காரியம் வெற்றி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் விருத்தி, நிலைப்பிரிவு. | பி.ப 3 மணி |
| புதன்- | பணவரவுத்தடை, பிள்ளைகளால் கவலை. | பி.ப 1 மணி |
| வியாழன்- | தேகசுகம் பாதிப்பு, செலவு. | பகல் 11 மணி |
| வெள்ளி- | வீண்வாக்குவாதம், எதிர்பாரா நஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- | துயர் அதிகம், வீண் செலவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | நிலைப்பிரிவு, நடைக்கஷ்டம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | உறவினர் வெறுப்பு, கலகம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, முன்னேற்றம். | பி.ப 3 மணி |
| புதன்- | அந்நியர் சகவாசம், காரிய வெற்றி. | காலை 9 மணி |
| வியாழன்- | துயர் அதிகம், பணத்தட்டுப்பாடு. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | தெய்வ நம்பிக்கை, மனமகிழ்வு. | காலை 7 மணி |
| சனி- | செலவு மிகுதி, விருந்துபசாரம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்- 5

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தானதருமச் சிந்தை, மனமகிழ்வு. | காலை 7 மணி |
| திங்கள- | வெளியிட வாசம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | கோபம் மிகுதி, தொழில் கேடு. | காலை 8 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, வெளியாரின் காரியத்தலையீடு. | பகல் 1 மணி |
| வியாழன்- | சுபகாரிய மகிழ்ச்சி, எண்ணங்கள் வீழ்ச்சி. | காலை 9 மணி |
| வெள்ளி- | பணத்தட்டுப்பாடு, பாவையர் நட்பு. | பி.ப 4 மணி |
| சனி- | மனக்களிப்பு, காரியசித்தி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், பூமியால் சுகம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, அரச சன்மானம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | பூரண சுகம், வீண் மனஸ்தாபம். | பகல் 12 மணி |
| புதன்- | உறவினர் கலகம், கண்டத்திற்கு மேற்பட்ட நோய் | காலை 8 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, பணவரவு. | காலை 6 மணி |
| வெள்ளி- | வீண் செலவு, பணத்தட்டுப்பாடு. | பி.ப 2 மணி |
| சனி- | உற்றார் வெறுப்பு, துக்க சம்பவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -8

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | எதிர்பார்த்த கருமம் வெற்றி, பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தேகசுகவிருத்தி, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- | புத்திரரால் சோகம், வெளியார் நட்பு. | பி.ப 3 மணி |
| வியாழன்- | மறைமுக நோய், வாத சுரம் பாதிப்பு. | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, ஊதாரிச் செலவு. | பகல் 11 மணி |
| சனி- | விருந்தினர் வருகை, பணக்கஷ்டம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், கோபமிகுதி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | பணவரவுத்தடை, வீண் பிரயாசம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | முன்னேற்றம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப 2 மணி |
| புதன்- | உறவினரால் கெடுதி, செலவு மிகுதி. | காலை 10 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, செய்தொழில் பலிதம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | துயர்நீங்கும், தெய்வ நம்பிக்கை. | காலை 8 மணி |
| சனி- | இனசனக்கொண்டாட்டம், மகிழ்ச்சி. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் - 4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் வாக்குவாதம், செலவு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | தருமசிந்தை, காரியானுகூலம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | எண்ணங்கள் மேன்மை, மனத்துயர்நீங்கல். | பி.ப 3 மணி |
| புதன்- | இடமாற்றம், தொழில் கஷ்டம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | மனக்குளப்பம், வீண் செலவு. | காலை 6 மணி |
| வெள்ளி- | வெளியிடப்பிரயாணம், மனமகிழ்ச்சி. | பி.ப 3 மணி |
| சனி- | செலவு மிகுதி, மனத்துன்பம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | நோயினால் கஷ்டம், வீண் தொல்லை. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் சகவாசம், குறை கேட்டல். | காலை 6 மணி |
| செவ்வாய்- | கடன்பயம், பணத்தட்டுப்பாடு. | பி.ப 2 மணி |
| புதன்- | பணவரவு, செலவு. | பி.ப 1 மணி |
| வியாழன்- | நீடித்த நோய், நிலைப்பிரிவு. | காலை 7 மணி |
| வெள்ளி- | உறவினரால் கஷ்டம், மனவேதனை. | காலை 9 மணி |
| சனி- | எண்ணங்கள் ஈடேறல், பணக்கஷ்டம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் சிறப்பு, வாக்குவசீகரம். | பகல் 12 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், இல்லச்சிறப்பு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | வெளியாரினால் தொல்லை, வீண் மனஸ்தாபம். | பி.ப 3 மணி |
| புதன்- | கடன் சுமை நீங்கும், இல்லச்சிறப்பு. | பி.ப 1 மணி |
| வியாழன்- | தனவிருத்தி, வெளியிடப்பயணம். | பகல் 11 மணி |
| வெள்ளி- | மறைமுக எதிர்ப்பு, வீண் சந்தேகம். | காலை 10 மணி |
| சனி- | தெய்வ நம்பிக்கை, செலவு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## மருத்துவ விந்தைகள்

# எய்ட்ஸ் போலப் பரவும் தும்மல் நோய்!



## எச்சரிக்கை!

## இதுவரை பலியானோர் 47 பேர்!!

ஒரு புதுவகை தொற்றுநோய் உலகை எச்சரிக்கிறது. 'எய்ட்ஸ்' நோயைப் போன்று இந்நோயைக் குணப்படுத்துவதற்கும் மருந்து கண்டுபிடிப்பது கடினமாகவே இருக்கும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். இந்நோய்க்கிருமிகளைப் பெற்றவர் சதா தும்மிக் கொண்டேயிருப்பார். இதனால் மூச்சுக் கோளாறு ஏற்பட்டு, உணவு உட்கொள்ள முடியாமல் இறுதி மூச்சைவிட வேண்டியவராகிவிடுவார்.

நோயாளி தும்மிக்கொண்டிருக்கும் போதே நோய்க்கிருமிகள் காற்றில் பரந்து விடுகின்றன. இலகுவாக அயலிலுள்ளவர்களை கிருமி பீடித்துக்கொள்ளுகிறது.

எய்ட்ஸ் வைரஸ்களை எதிர்த்துப் போராடும் சக்தி உடலுக்கு இல்லாமல் போவதனாலேயே அந்நோய் கண்டவர்கள் அந்நோயினாலேயே மடிகின்றனர். இந்தப் புதிய நோய்க்கிருமிகள் உடலுள் புகுந்தாலும் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குன்றி விடுகிறது. இதனால் இந்நோயே அந்நபருக்கு இறுதியாகி விடுகிறது.

ARBS- 'ஆர்ப்ஸ்' என்று இந்நோய்க்குப் பெயரிட்டுள்ளனர். (ALLERGEY RESISTANCE BREAK DOWN SYNDROME) (ஒவ்வாத பிறபொருள் எதிர்ப்புத் திறனற்ற நிலை) என்று இந்நோயினை வர்ணிக்கின்றனர். இந்நோய்க்கு இதுவரை 47 பேர் பலியாகி உள்ளனர். பல்லாயிரக்கணக்கான பேருக்கு இந்நோய் பீடித்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

அற்லான்ரா நோய்த் தடுப்பு மையத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் கருத்து வெளியிடும் போது, "இந்நோய் 'எயிட்ஸ்' பரவுவது போல பரவி அடுத்தடுத்த ஆண்டுகளில் பெரும் அநர்த்தங்களை ஏற்படுத்தக் கூடும் என்று எச்சரித்திருக்கிறார்.

பிரேஸில் நாட்டு நிபுணரான டாக்டர் பௌலோ ஃபேர்னாண்டஸ், "எனது 30 வருட மருத்துவ ஆய்வுகளில் இத்தகைய ஒரு நோயினைக் கண்டதில்லை. இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் சிலருக்கு நான் சிகிச்சை அளித்துள்ளேன். ஆனால் அவர்களைக் குணப்படுத்த முடியாமல் போய்விட்டது. இரவு பகல் இடைவிடாது இவர்கள் தும்மிக்கொண்டிருப்பதனால் உணவு உட்கொள்ளவோ, மூச்சுவிடவோ தூங்கவோ முடியாமல் துன்புறுவர். நிமிடத்துக்கு 40 முதல் 50 வரை தும்மிக்கொண்டிருப்பதனால் ஒரு மணி நேரத்தில் சோர்ந்து போய்விடுவார்கள். மயக்க மருந்தும் பயனற்றுப் போய்விடும்.

"இதனால் அவர்களுடைய உடம்பிலுள்ள நீர்த்தன்மை குறைந்து போய்விடும். நீரும் சளியும் வாயாலும் மூக்காலும் வெளியேறிக் கொண்டிருக்கும். சிலர் உணவின்றியே தங்கள் முடிவினை தேடிக்கொண்டனர். ஊசிமூலமும் எதனையும் செலுத்தவும் முடியாமற் போய் விடுகிறது. இருதயமும் பலவீனமுற்று மூச்சுத் திணறும் போது உயிர் போவதைத் தவிர வேறு மார்க்கம் தென்படவில்லை" என்கிறார் டாக்டர் பெர்னான்டஸ்.

தென்பசுபிக் கடலிலுள்ள பப்புவா நியூகினி என்ற நாட்டில்தான் முதன் முதலில் இந்நோய் தலைகாட்டியதாக நிபுணர்கள் கருதுகின்றனர். அந்நாட்டில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காடுகளை தொழிலாளர்கள் வெட்டிச் சாய்த்தனர். இந்த நாட்டிலுள்ள வெவாக் என்ற பிரதேச மக்கள் இக்காடு அழிப்பிலீடுபட்ட போதுதான் அவர்கள் மத்தியில் இந்நோய் அறிகுறிகள் முதலில் தலைகாட்டின. ஒரு வகை வைரசின் தாக்கமே இந்நோய்க்கான காரணம் என்று கண்ட உள்நாட்டு மருத்துவர்கள் பிரேஸிலிலுள்ள பிரபலமான கிருமி நிபுணரான டாக்டர் பௌலோ பெர்னாண்டசை அங்கு வரவழைத்தனர்.

இந்தக்காடுகளை அழிப்பதற்கு உள்நாட்டு தொழிலாளர்களுடன் ஹொங்கொங், பாங்கொக் மற்றும் கல்கத்தா நகரங்களிலிருந்தெல்லாம் தொழிலாளர்கள் சென்றிருந்தனர். இவர்கள் தங்கள் நாடு திரும்பும் போது இந்த வைரஸ் கிருமிகளையும் தங்களுடன் எடுத்துச் சென்றார்கள். இதனால் இந்நோய் பல நாடுகளுக்கும் பரவும் பேரபாயம் ஏற்பட்டுள்ளது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்நோய்க்கிருமி ஒரு நபருக்குத் தொற்றி 5 வருடங்களின் பின்னரே அவரை தாக்கும் சக்தியினைப் பெறுவதால், இக்கிருமியின் தாக்கம் ஏற்பட்டுள்ளதா என்பதனைக் கண்டறிய அதிக காலம் பிடிக்கும் என்று தெரிகிறது. ●

# மனித உடலும் மீன் வாலும்!

## கால்கள் ஒட்டியபடி பிறந்த குழந்தை!!



சிகிச்சைக்குப் பின்னர்

ரிஃபானி யோக்ஸ் என்ற குழந்தை பிறக்கும் போதே கால்கள் இரண்டும் பாதம் வரை ஒட்டிப் பிறந்தது. 'மேர்மெயிட்' அல்லது 'மிராண்டா' என்று ஆங்கிலத்தில் கூறப்படும் ஒருவகைப் பிராணி சில ஏரிகளில் வாழ்வதாகக் கூறப்படுகிறது. இவற்றுக்கு இடையின் மேல் பகுதி மனித உருவிலும் இடையின் கீழ் பகுதி மீனைப் போன்றும் இருக்குமாம். இதே போன்ற உருவில்தான் தம்பா என்ற ஊரில் 15 மாதங்களுக்கு முன்னர் இக்குழந்தை பிறந்துள்ளது.

இந்தக் குழந்தையின் இருகால்களும் ஒட்டிப் பிறந்தாலும், இவற்றை வெட்டிப் பிரித்து விடலாம் என்று மருத்துவ நிபுணர்கள் திட்டமிட்டனர். செயலிலுமிறங்கி வெற்றியும் கண்டனர்.

இலட்சத்தில் ஒரு குழந்தைக்கு இத்தகைய கால் கோளாறு ஏற்பட வாய்ப்புண்டு என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இதனை 'சிசென் ஓமிலியா' என்று பெயரிட்டள்ளனர்.

ரிஃபானியின் பிஞ்சுக்கால்களை வெட்டிப்பிரிக்க, தம்பாவிலுள்ள ஷிரிநெர் மருத்துவமனையின் டாக்டர் ஜோண் ஜொட்கண் தலைமையில் மருத்துவ நிபுணர்கள் சத்திர சிகிச்சையினை மேற்கொண்டனர்.

ஒன்றன்பின் ஒன்றாகப் பல சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு குழந்தையின் கால்கள் வெட்டிப் பிரிக்கப்பட்டுவிட்டன.

இப்பொழுது கால்களை உரிய பரிமாணப்படி வடிவமைக்கும் பணியினை மருத்துவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

வலது காலுக்கான உருவமைப்புப் பணி துவங்கியிருக்கிறது. அதன்பின்னர் அடுத்த காலுக்கும் துவங்கும்.

ரிஃபானிக்கான சிகிச்சை சற்றுக் கடுமையானதொன்று என்று



டாக்டர் ஜோண் கூறுகிறார். 'இவ்வாறு ஒட்டியுள்ள குழந்தைகள் உயிரற்றே பிறக்கும். அல்லது பிறந்த சிறிது நாட்களில் இறந்து போய்விடும். ஆனால் இக்குழந்தை தப்பியிருக்கிறது. மிகக் கடுமையான அறுவை சிகிச்சையையும் தாங்கி ஆச்சரியப்படத்தக்க நிலையின் முன்னேற்றம் கண்டு வருகிறது." என்று அவர் கூறுகிறார்.

இக்குழந்தைக்குரிய சிகிச்சையின் முதற்கட்டமாக கால்களை ஊத வைப்பதற்கேற்ற திரவங்கள் உட்செலுத்தும் பணி துவங்கியது. இதனைச் செய்து சில நாட்களின் பின்னர்தான் கத்தியினை பயன்படுத்த வேண்டியதாயிற்று. காயங்கள் குணப்படுத்தப்பட்ட பின்னர் இவற்றை உருவமைக்கும் பணியினை டாக்டர்கள் துவங்கியுள்ளனர்.

இந்த அறுவை சிகிச்சையின் போது மருத்துவர்களுக்குச் சவாலாகவிருந்த விடயம், இதன் பாத எலும்புகள் ஒன்றாக ஒரே எலும்புபோல் இருந்தமையே, ஆனால் இதனையும் பக்குவமாகப் பிரித்து விட்டார்கள்.

இத்தனைக்கும் இக்குழந்தை தன் கால்களை ஊன்றி நடப்பதற்கான காலம் உடனடியாக வரப்போவதில்லை என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர்.

சாதாரணமாக நடப்பதற்கே பல ஆண்டுகளாகலாம் என்றனர். ●



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## புதுமைத் தொடர்

### அத்தியாயம்—21

பெண்ணின் உடல் அற்புதம். அதுவே சமயத்தில் ஆயுதம். கண்மூடி தியானத்தில் இருந்த முனிவன் கூட நடன மயிலாய் வந்து பெண் ஆட தன் விழிக்கதவம் விரித்து, புலன்கள் மயங்கி, தன் மனக்கதவம் திறந்து அவள் மடியில் புரண்டது கதை.

சாம்ராஜ்யங்களை கட்டியாண்ட சக்கரவர்த்திகள் கூட மோகன விழிகளின் கடைக்கண் வீச்சிலே கவிழ்ந்துபோனது சரித்திரம்.

பெண் பலவீனமானவள் என்று சொல்வது பொய். சாதாரண மனிதப் பலவீனங்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானவை. பெண்ணுக்கு மட்டுமே பலவீனம் சொந்தம் என்று செய்யப்படும் வரையறைகள் பெண்ணைப் புரிந்து கொள்ளாதவர்களின் புலம்பல்கள்.

பெண்ணிடம் ஏந்த இரகசியமும் தங்காது என்று சொல்லப்படுதல் சமூகத்தில் அவளை கீழே தள்ளிப்போட்டவர்கள் சொன்ன நியாயங்கள்.

ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும் புரிந்துகொண்டு பரஸ்பரம் நேசித்தலில் வாழ்க்கை வசீகரமான விசயமாகிறது.

நேசிக்கத் தெரிந்த புத்திசாலிப்பெண் துணையாகக் கிடைப்பது ஆணுக்கும் பெரிய பலம்.

வேகமும், விவேகமும், நெஞ்சு முழுக்க நேசமும் கொண்ட ஆணின் நட்பு கிடைப்பதும் பெண்ணுக்கு புதிய பலம்.

பெண் செய்யும் தியாகங்கள் அதிகம். ஆயினும் அவை வெளியே தெரிவதில்லை. ஆணின் தியாகம் பெரிதாகப் பேசப்படும் அளவுக்கு பெண்ணின் தியாகம் பேசப்படுவதில்லை. பெண்ணின் பலத்தை மெச்சுவது கூட தம் பலவீனமாய் தெரியுமோ என்று நினைக்கும் ஆண்களும் உண்டு.

பெண் ஒரு ஜடமல்ல. உணர்வுகள் உள்ள ஜீவன் என்று புரியவைக்கவும் பெண் இங்கே போராட வேண்டியிருக்கிறது.

இங்கே பெண் வெளிப்படையாய் சிரிக்கவே யோசிக்க வேண்டியிருக்கிறது.

அதனால் பெண்ணின் பலம் பூட்டிய சிறைக்கதவத்திற்குள் இருக்கும் புலியாய் அடங்கிக் கிடக்கிறது.

ரம்யா வெளியே வந்த புலி. சூழல்கள், நிர்ப்பந்தங்கள் காரணமாய் ஏற்பட்ட கறைகளை குலாம்ஷா என்ற நட்பின் மூலமாய் கழுவத் தீர்மானித்துவிட்டவள்.

குலாம்ஷா என்ற உயரிய நட்புக்காக தன்னை இழக்கத் தயாராகிவிட்டவள்.

ரம்யாவுக்கு அழகு பலம். புத்திசாலித்தனம் பலம். எதிரியை எடை போடத் தெரிந்தவனே போரில் வெல்லமுடியும்.

எந்த நேரத்தில் எங்கே அடிக்க வேண்டும் என்று தெரிந்தவனே கைகலப்பிலும் சரி, களத்திலும் சரி வெற்றிக்கனியை சுவைக்க முடியும்.

குறிவகுத்தபின் பயப்படுதலில் அர்த்தம் இல்லை. அதற்காக முட்டாள்தனமாய் சென்று எதிரியின் பொறியில் மாட்டுவதிலும் விவேகம் இல்லை.

ரம்யா சந்தோஷின் பலவீனம் புரிந்து வைத்த குறியே சந்தோஷின் சரிவுக்கும் பொறியாக அமைந்தது.

சந்தோஷ் ரம்யாவை உணர்ச்சியூட்டும் பெண்ணாக மட்டுமே கண்டான்.

ரம்யாவின் நெஞ்சில் இரு கிண்ணங்களாக நிமிர்ந்து எண்ணங்களை கொள்ளையிட்டுக்கொண்டிருந்த மார்புகள் மட்டுமே சந்தோஷின் கண்களுக்குத் தெரிந்தன.

ஈரமான சிவந்த ரோஜாக்கள் போல துடித்துக்கொண்டிருந்த ரம்யாவின் இதழ்கள் சந்தோஷுக்கு அவசியப்பட்டன.

பளிங்குத்தரைபோல வழவழப்பாக, அவள் பளிங்கு மேனியின் அழகிய பாரங்கள் சுமந்த கால்கள், கடினமாயும், காந்தமாயும் கவரும் தொடைகள் சந்தோஷிற்கு தொட்டுப் பார்க்க சுகம் கொடுப்பவையாக இருந்தன.

## -எழுதுவது ரசிகன்-

**"எந்த நேரத்தில், எங்கே அடிக்க வேண்டும் என்று தெரிந்தவனே கைகலப்பிலும் சரி, களத்து மோதலிலும் சரி வெற்றிக் கனியைச் சுவைக்க முடியும்."**



சந்தோஷ் தன்னை மறந்தான். ரம்யா குலாம்ஷாவோடு கொண்டிருந்த நட்பின் ஆழம் பற்றி யோசிக்க மறந்தான்.

சந்தோஷை மடக்க ரம்யா சொன்ன சமாதானங்களை ஆராய மறந்தான். சொன்னபோது துடித்த அவள் இதழ்கள் மட்டுமே அவனுக்குத் தெரிந்தன. எப்போது அவை கிடைக்கும் என்று மட்டுமே யோசித்தான்.

தழுவத்துடிக்கும் போது பெண் தடுத்தால் ஆணுக்கு மேலும் ஆசைவரும். மறைந்து கிடப்பதை அறிவதிலும், மறுக்கப்படுவதை பெறுவதிலும் வேகம் வரும்.

ரம்யா தருணம் பார்த்து சந்தோஷின் ஆசைக்குத் தடை போட்டாள்.




"...எண்பதடி பாய்ந்திருக்கிறேன். இனி பாயலாம் என்று நீ முயன்றால்...?"

"என்னடி செய்வாய்?"

"ஆறடிக் குழிக்கு உன் உடல் போகுமடா முட்டாள்."

"உன்னை"

உறுமியபடி முன்னோக்கி நகர முயன்றான்.

"நில்! கவனி! உன்பரந்த நெற்றியில் பொட்டு வைக்கப்படுவாய். சம்மதம் எனில் வா. சந்தோஷ் வா."

பிஸ்டல் வலது கரத்தில் இருக்க, இடது கரம் உயர்த்தி, சுட்டுவிரல் அசைத்து ரம்யா பேசினாள்.

"சாகப் பயப்படமாட்டான் சந்தோஷ்"

என்றான். எனினும் முன்னேற முயலாமல் நட்ட கல் போல நின்றான்.

"நீ செத்துவிட்டால் உன் கனவுகள் என்னாகும்? உன் எண்ணங்கள் மண்ணோடு மண்ணாக வேண்டுமா? சோ...நீ விரும்பமாட்டாய். எனக்குத் தெரியும். தலைவனாகக் கனவு காணும் எவனும் சாகவிரும்புவதில்லை சந்தோஷ். இது சாதாரண சூத்திரம். அதனால் ஆத்திரப்படமாட்டாய். என் விரலுக்கு வேலை கொடுக்கமாட்டாய்."

ரம்யா பதட்டம் காட்டாமல் சந்தோஷின் மீதிருந்த விழிகள் விலக்காமல் சோபாவில் இருந்தபடியே பேசினாள்.

ரம்யா துணிந்தவள். ஒரு முடிவு செய்தால் அது நிறைவேறும் வரை முனைந்து உழைப்பவள். சந்தோஷுக்குத் தெரியும். பணிவது தவிர வேறு பாதையில்லை. புரிந்தது.

"ஓகே. உனக்கு என்ன வேண்டும்?"

"இது முறை. அட......முறைக்காதே! உனக்கு என் வாழ்த்துகள். அட்வான்ஸ் வாழ்த்துக்கள்."

எதற்கு என்பது போல சந்தோஷின் முகபாவம் வினா விரித்தது.

சந்தோஷ் பிடறி அடிபட நிலத்தில் வீழ்ந்தான்.

வெளியே சத்தம் கேட்டதில் உள்ளே ஏதோ விபரீதம் என்று உணர்ந்து கதவு தட்டப்பட்டது.

ரம்யா மகசீனை பிஸ்டலின் வயிற்றில் செருகிவிட்டு, பிஸ்டலை லோட் பண்ணி, சுடும் நிலைக்கு தயார் பண்ணிக்கொண்டாள்.

வெளியே இருந்து இடிப்பது போல கதவை மோதினார்கள்.

சந்தோஷ் நிலத்தில் இருந்து தலை உதறியபடி எழுந்தான்.

■

வெளியே பொலிஸ் சுற்றிவளைத்திருக்கிறது என்று அறிந்ததில் மதுமிதா அதிர்ச்சியுற்றாள்.

எப்படியும் தப்பியே ஆகவேண்டும் என்று பதட்டமானாள்.

வேகமாய் இயங்கி, கதவின் தாழ் விலக்கி வெளியே பாய்ந்தாள்.

"டோண்ட் மூவ்"

என்றது அதிகாரக் குரல். மதுமிதா திகைத்துப் போய் குரல் வந்த திசையில் பார்த்தாள்.

இன்ஸ்பெக்டர் ரஞ்சித் மதுமிதாவை நோக்கி பிஸ்டலை நீட்டிக் கொண்டிருந்தார்.

மதுமிதாவின் கரத்தில் இருந்த பிஸ்டல் சுடலாமா, விடலாமா என்று கட்டளை கேட்பது போல காத்திருந்தது.

மதுமிதா முடிவு செய்தாள்.

இன்ஸ்பெக்டர் ரஞ்சித் மதுமிதாவை நெருங்கிக்கொண்டிருந்தார்.

■

வைத்திலிங்கம் பிஸ்டலை ,நீட்டிய போது டி.ஐ.ஜி டென்சில் வாய்விட்டுச் சிரித்தார்.

வைத்தி டி.ஐ.ஜியை வியப்பான பார்வையால் தடவியபடியே,

"என்ன டி.ஐ.ஜி வேடிக்கை காட்டுகிறேன் என்று நினைக்கிறீர்களா? வைத்தி...

## மதுமிதா

"பொறு சந்தோஷ்" என்று சொல்லி "எனக்காக ஒரு காரியம் செய்வாயா?" என்று கேள்வி வீசினாள்.

சந்தோஷ் சூடாக இருந்தான். உள்ளே எரிந்த காமம் உடலை நெருப்பாய் சுடவைத்தது.

"சொல்லு ரம்யா"

என்று அவசரமானான். கண்கள் சிவந்திருந்தன. ஏற்கனவே குடித்திருந்தான்.

ரம்யா நிதானமாகச் சொன்னாள்.

"குலாம்ஷாவை விட்டு விடு?"

நிறை வெறியில் இருக்கும் போது கன்னத்தில் ஓங்கி ஒரு அடி கொடுத்தால் சிலருக்கு போதை இறங்கிவிடும்.

அப்படித்தான் இருந்தது சந்தோசுக்கும். நெற்றியடி பட்டது போல திடுக்கிடலாய் நிமிர்ந்து ரம்யாவின் முகம் பார்த்தான்.

"ரம்யா நீ....நீ என்ன சொல்கிறாய்?"

கேட்டபடியே சோபாவைவிட்டு எழுந்தான். ரம்யா சோபாவில் இருந்து கால்களை ஆட்டியபடி சந்தோஷைப் பார்த்தாள். குரலில் எவ்வித பரபரப்பும் இல்லாமல் சொன்னாள்,

"குலாம்ஷாவை விட்டுவிடு என்கிறேன்."

"விடாவிட்டால்"

நிதானம் இழந்து, குரலில் கடுமை கலந்து கேள்வி வீசினான்.

ரம்யா ஒரு புன்னகையை இதழ்களில் மலர்த்தினாள். மெல்ல, அமைதியாய் சொன்னாள்,

"உன்னை சுட்டுவிடுவேன் என்கிறேன்."

"என்ன,"

"பொய்யல்ல சந்தோஷ். தாழிடப்பட்ட இந்த அறையில் உன்னை சாவின் மடியில் போட எவ்வளவு நேரமாகும் என்கிறாய்?"

சந்தோஷ் பற்களை நறநறவென்று கடித்தபடி, இடுப்பிலே கைவைத்தான்.

மறுநொடியே அதிர்ந்தான்.

அங்கே அவன் பிஸ்டல் இல்லை.

"அது எங்கேயும் போகவில்லை சந்தோஷ். உன் பிரியமான பிஸ்டல் இங்கே இருக்கிறது பார்."

ரம்யாவின் கரத்தில் இருந்தது பிஸ்டல்.

சந்தோஷ் ரம்யா மீது மயங்கிச் சரிந்த நொடியில், மிகக் கவனமாய் ரம்யாவால் சந்தோசை விட்டு விலக்கப்பட்டது பிஸ்டல்.

"ஏமாற்றிவிட்டாய் நீ."என்றான். குரலில் இயலாமை ஏறியிருந்தது.

"நீ மட்டும் பெண் வேஷம் போட்டு ஏமாற்றலாம். றிமோட் கொன்ட்ரோலை காட்டி, உடம்பில் குண்டு இருப்பதாகப் பொய் சொல்லி ஏமாற்றலாம். டியர் சந்தோஷ், நீ எட்டடி பாய்ந்தாய். நான் ...

"எப்போது உன்னை காப்பதில் அக்கறை கொள்ளத்தொடங்கிவிட்டாயோ அப்போதே நீ தலைவனாகும் தகுதி பெற்றுவிட்டாய் என்று அர்த்தம்."

"கேலி செய்கிறாயா நீ?"

"இல்லை. சுயநலமே தலைமைப் பண்பின் அடிப்படை விதி என்று மாறிவருகிறது பார். அதைத்தான் சொன்னேன்."

"உன் போதனையை குப்பையில் போடு."

"நான் காந்தியல்ல. கோட்சேக்களை எல்லாம் கூட்டிவைத்து போதனை நடத்தி, திருத்திவிடலாம் என்று தப்புக்கணக்குப் போட! என் பாதை அடிக்கு அடி. பதிலுக்குப் பதில். இப்போது நீ என்ன செய்ய வேண்டும் என்றால்....!"

சொல்லி நிறுத்தினாள்.

"என்ன செய்ய வேண்டும்?"

"எங்களை எப்படி காரில் கொண்டு வந்தாயோ அப்படியே பத்திரமாகத்திருப்பிக் கொண்டுபோய் இறக்கிவிட வேண்டும்."

"பொறியில் சிக்கச் சொல்கிறாய். அதைவிட இங்கேயே சாகலாம்."

"ரம்யா வார்த்தை தவறுவதில்லை. எதிலும் ஒரு நேர்மை வேண்டும். என் பொலிசி அது. உனக்கும் தெரியும். சத்தியமாய் சொல்கிறேன் உன்னை பொலிசின் கரத்தில் சிக்க வைக்க மாட்டேன்."

"நம்பலாமா நான்?"

"நூற்றுக்கு நூறுவீதம் நம்பலாம்."

நம்பினான். கதவு திறக்கச் சென்றான்.

"நில் சந்தோஷ். உன்னை நான் நம்பமாட்டேன். ஏனென்றால் நீ நரி."

சொல்லிக்கொண்டே எழுந்து சந்தோஷை நெருங்கினாள். அதற்குமுன் பிஸ்டலை சரிபார்க்க நினைத்து அதன் மகசீனை கழற்றி தோட்டாக்கள் இருக்கிறதா என்று பார்த்தாள்.

சந்தோஷ் உசாரானான். மகசீன் கழட்டப்பட்டதால் சுடமுடியாது. ரம்யாவை நோக்கிப் பாய்ந்தான்.

பாய்வதை அவதானித்து ரம்யா வலது கால் பக்கவாட்டில் உயர்த்தி, இரு கரங்களாலும் உடலை சமப்படுத்தி, சந்தோஷின் நெற்றிமையத்தில் குதிக்காலின் அதிவேக பலம் காட்டினாள். சைட் கிக் சரியாக வேலை செய்தது. சந்தோஷ் தடால் என்று பின்னால் சரிந்து போக, முன்னால் சென்று, அவன் பின்கால்கள் இரண்டுக்கும் குறுக்காக தன் வலது காலை நீட்டி, மார்பிலே முழங்கையால் இழுத்து தள்ளினாள்.

...பிஸ்டல் வெளியே எடுத்தால் ஒரு தோட்டாவுக்கு எனினும் விடுதலை கொடுக்காமல்..."

"பிஸ்டலை உள்ளே வைப்பதில்லையாக்கும்."

டி.ஐ.ஜி டென்சில் வைத்திக்கு மேலும் சினமூட்டினார்.

"உண்மைதான். இப்போது அதை நிரூபிக்கட்டுமா?"

"அட.....சும்மா துள்ளாதே வைத்தி. பிஸ்டலின் வயிற்றைப் பார் காலியாக தெரிகிறது. மகசீன்- அதுதான் ரவைக்கூடு இல்லவே இல்லை."

டென்சில் சொல்லிக்கொண்டிருக்க வைத்தி அவசரமாய் பிஸ்டலை திருப்பிப்பார்க்க விழிகளை கீழே இறக்கினார்.அதுதான் சமயம்.

டி.ஐ.ஜி டென்சிலின் நீளமான கால்களில் ஒன்று காற்றில் எழுவது போல உயர்ந்து வைத்தியின் மணிக்கூட்டில் இறங்கியது.

வைத்தியின் பிஸ்டல் தரையில் விழுந்தது.

இன்ஸ்பெக்டர் அரவிந்த் முன்னேறி வைத்தியின் கரங்களை பின்புறமாய் மடக்கிப் பிடித்தார்.

வைத்தி திமிறினார்.

"டி.ஐ.ஜி! உன் தங்கை உயிர் போக வேண்டுமானால் என்னை உள்ளே போடு."

"அதற்கு அவசியமே இல்லை. உள்ளே எதற்கு போடவேண்டும்? உன் உயிரே போகப்போகிறது."

என்றது பெண்குரல்.

திரும்பிப் பார்க்க...

மதுமிதா.....

வைத்திலிங்கத்தை எரித்துவிடுவது போலப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். திகைத்துப் போன வைத்தி,

"நீ...நீ..."

"டுப்ளிகேட் மதுமிதா அல்ல.
ஒரிஜினல் மதுமிதா. யெஸ்.
நான்தான் மதுமிதா."

என்றாள். பின் டி.ஐ.ஜி டென்சிலைப் பார்த்து,

"டி.ஐ.ஜி. உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா? இவர் என் தந்தையே அல்ல. அதுமட்டுமா? இன்னும் ஒரு கதையே இருக்கிறது சொல்லட்டுமா?"

"வேண்டாம்...வேண்டாம் சொல்லாதே."

பதறினார் வைத்தி.

ஆனால் மதுமிதா வைத்தியை அலட்சியம் செய்தாள். கதையைச் சொல்லத் தொடங்கினாள்.

(இன்னும் வரும்) ■

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: அ. ரஜீசன்
முகவரி: 280/3,
லெயாட்ஸ் புறோட்வே,
கொழும்பு-14.
பொழுதுபோக்கு: கவிதை, சிறுகதை, கட்டுரை எழுதுவது, சினிமா, முத்திரை சேகரித்தல், அரட்டை அடித்தல்.



பெயர்: இ. மாலிக்கா
வயது: 20
முகவரி: பாரதிபுரம், கன்னியா றோட்,
திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், ஓவியம் வரைதல், கைவேலைகள் செய்தல்.



பெயர்: இ. சிவநாதன்
வயது: 18
முகவரி: 4, வெயிலி குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.



பெயர்: எம். இஸ்ஹாக்
முகவரி: 27/74, விஸ்ட் வைக் வீதி,
கொழும்பு-14.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், எதிர்காலம் பற்றிச் சிந்தித்தல்.

பெயர்: எஸ். சிவா
வயது: 23
முகவரி: 16, திய சிறிகம,
டிக்கோயா.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பேனா நண்பர் தொடர்பு.

பெயர்: எம்.ஐ.எம். ரம்சின்
வயது: 21
முகவரி: 64, ஸாஹிராக் கல்லூரி வீதி,
தர்கா நகர்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல்.

பெயர்: எம்.எஸ். பஹார்தீன் சில்மியா
வயது: . 17
முகவரி: நடுத்தீவு, மூதூர்-07.
பொழுதுபோக்கு: கைப்பணி வேலை செய்தல், வானொலி கேட்டல், ரீ.வி. பார்த்தல்.

பெயர்: ந. சரஸ்வதி
வயது: 19
முகவரி: டாலை தோட்டம்,
திவிதிகலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், பாடம் சொல்லிக் கொடுத்தல், புத்தகங்கள் படித்தல்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# நிலவு தூங்கும் நேரம்

-எம். சுரேஷ்-

காதலுக்கும் நேர்மைக்கும் இப்போது இடைவெளி அதிகம்!!



இன்று நிலவைக் காணோம். வழமைக்கு மாறான நிசப்தம். இருந்த ஒன்றிரண்டு தெருவிளக்குகளும் நடந்து முடிந்த கோஷ்டி மோதலுக்குப் பலியாகிப் போனதால், அந்தப் பகுதியே இருளுக்குள் மூழ்கிக் கிடந்தது.

ராஜ்மோகன் திரும்பத்திரும்ப அந்தக் காகிதத் துண்டை வாசித்தான். "அன்பின் மோகன்.... வீட்டில் யாருமில்லை. இரவு 10 மணிக்குப் பிறகு கண்டிப்பாக வரவும். இப்படிக்கு உங்கள் வரவை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் ஜெயா."

ஏன் இவள் இந்த நேரம் கெட்ட நேரத்தில் வரச்சொல்கிறாள்? தயங்கினான் ராஜ்மோகன். ஏற்கனவே ஓர் இரவு விருந்தின்போது அவன் ஜெயாவுக்குக் கொடுத்த பிரத்தியேக கவனிப்பினால் அவள் இப்போது மூன்றுமாதக் கர்ப்பிணி!

அந்த அழகான கவிதையை முழுமையாக வாசித்து முடித்து, அகராதியைப் புரட்டி அர்த்தம் பார்த்தபின் ராஜ்மோகன் மெல்ல விலக ஆரம்பித்தான். ஜெயாவோ இன்னும் நெருங்கி உரிமையோடு பழக ஆரம்பித்தாள்.

நீண்ட நேரம் சிந்தித்தவன், கடிகாரத்தைப் பார்த்தான். ரேடியம் பதித்த சின்ன முள்ளும், பெரிய முள்ளும் கும்மிருட்டில் 11 மணியைக் காட்டி அம்மணமாய் சிரித்தன!

"பூவே வண்டை அழைத்து முத்தமிடச் சொல்லும் போது, சந்தர்ப்பத்தை நழுவ விடுவது முட்டாள்தனம். இப்போது அனுபவிப்போம். மத்தவிடயங்களைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்." நினைத்தான். எழுந்தான். கட்டியிருந்த லுங்கியோடே புறப்பட்டான். (இப்படியான நேரங்களில் லுங்கி அணிவதால் ஏற்படும் நன்மைகளும், வசதிகளும் ஆண்களுக்குத் தெரியும். சில பெண்களுக்கும் தெரியும்!!) எங்கோ நாய்கள் ஊளையிடும் சத்தம், ஆந்தை அலறும் பயங்கர ஒலி, வாசல்வரை சென்றவன் மீண்டும் திரும்பி வீட்டுக்குள் சென்று சிரித்தபடியே "அதை" எடுத்து பத்திரப்படுத்திக்கொண்டு புறப்பட்டான். சிறிது நேரத்தில் அவனை முழுமையாக இருள் விழுங்கியது.

•••

ஜெயாவின் வீட்டுக் கதவில் கைவைத்த ராஜ்மோகன் திடுக்கிட்டான். கதவு தானாகத் திறந்துகொண்டது. உள்ளே சோக கீதம்... ஏன் இவள் கதவைத் திறந்தே வைத்திருக்கிறாள்? சோக கீதத்தை ஒலிக்க விட்டிருக்கிறாள்? யோசித்தவாறே வீட்டிற்குள் நுழைந்தவன் "ஆ" அலறினான்!

வீடெங்கும் இரத்தம்! குருதி தோய்ந்த காலடிச் சுவடுகள் மாடிப் படியேறிச் சென்றிருப்பது தெளிவாகத் தெரிந்தது. ராஜ்மோகன் பயத்தில் உறைந்து போனான். கையில் அகப்பட்ட ஒரு இரும்புக் கம்பியை எடுத்துக் கொண்டு, குருதி தோய்ந்த பாதச் சுவடுகளைப் பின்பற்றி, மாடிப்படியேறி... பாதச் சுவடுகள் ஜெயாவின் ரூமிற்குள் சென்ற அடையாளத்தைப் பார்த்ததும் மீண்டும் திடுக்கிட்டான்.

கைகால்கள் உதற ஆரம்பித்தது. கட்டுப்படுத்திக் கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தான். டேப் ரெக்காடரில் சோக கீதம் ஒலித்துக் கொண்டிருந்தது. அவன் பல தடவை "கவிதை வாசித்த" கட்டிலைப் பார்த்தான். பெருமூச்சு விட்டான்! அங்கே ஜெயா மார்புப் பகுதியிலிருந்து இரத்தம் கொப்பளிக்க இறந்து கிடந்தாள்!

மெல்ல அருகில் சென்றவன் ஜெயாவின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தான். கன்னத்தை லேசாகத் தடவிக் கொடுத்தான், முத்தமிட்டான்... சோகமாய் நடந்துவந்து "டேப் ரெக்காடர்" இருந்த மேசையில் கைகளை ஊன்றி விரக்தியால் அமர்ந்தான்.... சோக கீதத்தைப் பரப்பிக் கொண்டிருந்த ஒலிப்பதிவு நாடா திடீரென்று "என் தற்கொலைக்கு யாரும் காரணமல்ல, முழுக்க முழுக்க நானே காரணம். இப்படிக்கு ஜெயா" ஜெயாவின் தேன் குரல் அமைதியாய் ஒலித்தது. மீண்டும் சோக கீதம்...

ராஜ்மோகன் அப்படியே தலைகுனிந்து நின்றான். சற்றும் எதிர்பாராத விதமாக அந்த பழக்கப்பட்ட "கலகல" சிரிப்பொலியைக் கேட்டு, திடுக்கிட்டு நிமிர்ந்தான். "என்னங்க, நான் உண்மையிலேயே செத்துப் போயிட்டதா பயந்துட்டீங்களா? இங்க பாருங்க மோகன் டாலிங், நான் கண்டிப்பா அப்பிடியெல்லாம் செய்யவே மாட்டேன். ஏன்னா என்னோட வயித்தில வளர்ற ஒங்க மகன் கோவிச்சுக்குவான்." ராஜ்மோகன் ஒன்றும் பேசவில்லை. எதையோ கடுமையாக யோசித்தான்.

"என்னங்க கோவமா? இன்னிக்கு என்னோட பிறந்தநாள். அதுக்குத்தான் இந்த வித்தியாசமான நாடகம்... என்ன?.. ஒரு மாதிரியாகப் பார்க்கிறீங்க? சுவீட்ஸ் வேணுமா? அதுதான் இன்னும் கொஞ்ச நேரத்தில் மொத்தமா தரப் போறனே" சிரித்தாள் ஜெயா. ராஜ்மோகன் மீண்டும் டேப் ரெக்கோடரை ரிவைன் பண்ணி ஜெயா பேசிய (என் தற்கொலைக்கு யாரும் காரணமல்ல....) வசனத்தை புன்னகையோடு கேட்டு இரசித்தான்.

"என்னங்க நான்தான் பேசி ரெக்கோட் பண்ணினேன். பயந்துட்டீங்களா?" கேட்டவாறே அவனை முதுகுப்புறமாக அணைத்துக்கொண்டாள். அவள் அணைத்த அணைப்பில், அவளின் முக்கிய கவிதைகள் முதுகிற்குள் முற்றாக மறைந்து போயின. அத்தனை அழுத்தம்!

சில பொருட்கள் உறுதியாக இருப்பதைப் போல் தோன்றினாலும் அதற்குள்தான் எத்தனை மென்மை! அவள் அணிந்திருந்த மெல்லிய நைட்டிக்குள் வஞ்சகமில்லாமல் தெரிந்த ஏற்ற இறக்கங்களையும், நீள அகலங்களையும் வர்ணிப்பதற்கு ஆசைதான். இருப்பினும் சில பெண்களுக்கு ஏற்கனவே இறைவனால் எழுதப்பட்ட கவிதைகளுக்கு உள்ளபடி பொருள் சொல்வது பிடிப்பதில்லை. ஆகவே நான் அதிகம் வர்ணிக்கவில்லை. (அவள் அவனுக்கு கவிதை வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் போது ஒழுங்காக வாசித்துக் கொள்ளுங்கள்!)

ஜெயா அவனின் தலையை அன்போடு கோதி விட்டபடி, "ஏதாவது பேசுங்களேன். "இதழுக்குள் இதழ் நனைத்து மீண்டாள்! ராஜ்மோகன் டேப்ரெக்கோடரை மீண்டும் நன்கு 'ரிவைன்' பண்ணி இயங்க விட்டான். இப்போது ஆரம்பத்திலிருந்து சோககீதம் ஒலிக்க ஆரம்பித்தது.

மெல்லத் திரும்பி ஜெயாவை இழுத்து மடியில் அமர்த்தினான். இறுக அணைத்து முத்தமிட்டான். மீண்டும் முத்தமிட்டான். நிறுத்தினான். "உண்மையிலேயே நல்லா பயந்துட்டேன் ஜெயா" கன்னங்களை ஸ்பரிசித்து மீண்டும் முத்தங்களைப் பதித்தான். (விரைவாக எனக்கு எண்ண வராது என்பதால் எத்தனை முத்தங்கள் கொடுத்தான் என்பதை சரியாகச் சொல்ல முடியவில்லை.)

"ஜெயா! நீ போய் கட்டில்ல இரு. நான் வந்து பிறந்தநாள் பரிசை முழுசாத் தர்றேன்." குறும்பாகச் சிரித்தபடியே மேலாடையைக் கழற்றினான். எங்கெங்கோ கைவிட்டு எதை எதையோ சரிபார்த்துக் கொண்டான்! ஜெயா ஆசையோடு கட்டிலில் சாய்ந்தாள். அருகில் வந்த ராஜ்மோகன் சடுதியாக ஆனால் நிதானமாக 4 முத்தங்களைப் பதித்தான். (அந்த 4 முத்தங்களைப் பதித்த இடமும், பதித்த விதமும் வயதுக்கு வராதவர்களைக் கருத்தில் கொண்டு குறிப்பிடவில்லை) அந்த முத்தங்கள் உடலுக்குள் நெருப்பை மூட்டின. ஜெயா ஆழமாகச் சுவாசித்தாள். உதடுகள் காய்ந்த போதும், உடல் முழுக்க வியர்த்துக் கொட்டியது.

எங்கோ இருந்த கவனத்தை மீண்டும் முகத்திற்குத் திருப்பி, இதழை விரலால் இதமாக வருடிக்கொடுத்தபடி,

"ஜெயா ஆரம்பிக்கலாமா?"

"சீ போங்க...வெக்கமா இருக்கு."

"அப்பிடின்னா வேணாங்கிறியா?"

"ம்.... (சிணுங்கினாள்)"

"இங்க பாரு ஜெயா! இன்னிக்கு மட்டும் நீ சொல்லாம நான் ஆரம்பிக்கவே மாட்டேன்..... என்ன ஆரம்பிக்கவா?"

....."ம்...."தலையசைத்தாள்.

"அப்படின்னா கண்ணை இறுக்க மூடிக்கோ"

"சீ! நீங்க ரொம்ப மோசம்." சிணுங்கியபடியே கண்ணை மூடிக்கொண்டாள். "அப்போ ரெடி. வன், டூ, த்ரீ....டுமீல், டுமீல், டுமீல்....இடுப்பில் செருகி வைத்திருந்த துப்பாக்கி கணப்பொழுதில் ராஜ்மோகனின் கைக்கு வந்து மூன்று குண்டுகளை ஜெயாவின் மார்புக்குள் புதைத்தது.

மார்பிலிருந்து உண்மையான இரத்தம் கொப்பளிக்க ஜெயா எழுந்திருக்க முயன்றாள். முடியவில்லை. "மோ... மோகன், நீ...நீயா?" அதோடு அவளின் அசைவுகள் அடங்கிப் போயின.

ராஜ்மோகன் சிரித்தான். ஜன்னலால் வெளியே எட்டிப்பார்த்தான். இன்னும் நிலவு தூங்கிக் கொண்டிருந்தது. மனதிற்குள் ஒரே சந்தோஷம். துள்ளிக்குதித்தான். தன் சட்டையை எடுத்து டேப் ரெக்கோடர் உட்பட தான் தொட்ட எல்லாப் பொருட்களிலும் இருந்த தனது கை ரேகைகளை நன்கு அழித்தான். ஒரு தடயமும் விடவில்லை என்பதை மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டு, நிம்மதியாய் வெளியேறினான். அவன் வெளியேறிய காட்சியைக் கூட, ஜெயா அறைக்குள் விளையாட்டாகப் பொருத்தி வைத்திருந்த "தன்னியக்க" வீடியோ கெமரா விட்டு வைக்கவில்லை!!

(நன்றி)

சிறுகதை

# அக்கினிப் பிரவேசம்

-வாழையூர் ஸ்ரீவரணி-

கலா வந்து சொன்ன விடயத்தைக் கேட்க கேட்க ஜீவாவிற்கு தலை சுற்றியது. உண்மையாக இருக்குமோ? என்ற சந்தேக துளிர்வுடன் கேட்டாள்,

"உண்மையாகவா கலா?"

"என் இரு கண்ணாலும் பார்த்தேன் ஜீவா, இருவரும் கதைத்துக்கொண்டு போனதையும் ஒரு ரெஸ்ரோறண்டினுள் புகுந்து தனியே இருந்து சிரித்துச் சிரித்துப் பேசியதையும் என் கண்ணால் பார்த்தேன்."

"பேசிச் சிரித்தால் காதலாக இருக்குமா கலா?"

"என்னமோ தெரியாது ஜீவா, இது உன் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட விடயம். இப்படி கனகாலமா நடக்குது, ஆனா உங்கிட்ட இப்பத்தான் சொல்றன்" சொல்லிவிட்டு அவள் தோழி கலா சென்றுவிட,

ஜீவாவின் குழம்பிப்போன மனசினுள் சந்தேக விதையொன்று முளைத்து துளிர்விட்டது.

தினேஷ், ஜீவா இருவரும் அலுவலகமொன்றில் ஒன்றாக வேலை செய்பவர்கள். ஒரே தடவையில் இருவருக்கும் வேலை கிடைத்தபோது, பரஸ்பர சிரிப்பில் ஆரம்பித்த உறவு, காலப்போக்கில் கனிந்து காதலாகியது.

கடந்த மூன்று வருடங்களாக தினேஷைக் காதலிப்பவளுக்கு, கலா சொன்ன வார்த்தை கசந்த காரணம், தினேஷ் இன்னொரு பெண்ணுடன் சுத்துகின்றான் என்பதுதான்.

மறுநாள், தினேஷைச் சந்தித்த போது கேட்டாள்,

"தினேஷ்! யாரந்தப் பெண்?"

"எந்தப் பெண்?"

"உங்களோட சுத்துறவதான். ரெஸ்ரோறன்டில் சந்தித்தீர்களே அந்தப் பெண்."

"ஓ, நிலாவைச் சொல்றியா? சின்ன வயதிலிருந்து என்னுடன் படித்தவள். என்னில் நிலைத்து நிற்கும் ஒரேயொரு நட்பு. இதே ஊரில்தான் இருக்கிறாள்!"

"பழைய கதை எதுவும் வேண்டாம். இனி அவளோட கதைக்க வேணாம்."

"டோன்ற் பி ஸில்லி ஜீவா. என்ன பேசுகிறாய்? அவள் எனக்கொரு நல்ல ஃப்ரெண்ட் அவ்வளவுதான். அதையேன் தப்பிதமாகப் பார்க்கிறாய்?"

"இல்ல. எனக்குப் பிடிக்கல்ல. அதால கதைக்காதீங்க."

"பைத்தியமா உனக்கு? எந்தவொரு காரணமும் இல்லாம ஏன் கதைக்காம விடணும்?"

"ஓ. பைத்தியம்தான் உங்கள்ல." சொல்லிவிட்டு கோபமாய் எழுந்து போனாள்.

•••

அன்று சென்ற ஜீவா பல நாட்களாக சந்திக்க முடியவில்லை தினேஷிற்கு. வேலைக்கும் வரவில்லை. "சுகயீனம்" என தந்தியடித்திருந்தாள். வீட்டிற்குப் போகலாமென்றால் "அவர் -அப்பரின் பார்வை, வேண்டாமப்பா."

தனிமை அவனை வருத்த, அதைப் போக்க எண்ணி பூங்காவினுள் நுழைந்து அமர்ந்த போது அவள் வந்தாள்.

'ஹலோ, தினேஷ், என்ன இந்தப் பக்கம்?"

"ஓ, நிலாவா? சும்மா பொழுது போகத்தான்."

"என்ன தனிய வந்திருக்கீங்க, எங்க உங்கட பாட்னர்?"

"அதையேன் கேட்கிறீங்க, உங்களோட நான் சுத்துகிறனாமென்று பெரிய சண்டை. கனநாளா ஆளையே காணக்கிடைக்கல. ஒஃப்பிசுக்கும் வரல்ல. கவலையாயிருக்கு நிலா."

"கவலைப்படாதீங்க தினேஷ். எல்லாச் சிக்கலும் தீர ஒரு வழி இருக்கும். இதுக்கும் இருக்கு."

"என்ன வழி" ஆர்வமாய்க் கேட்டான்.

"சொல்ல மாட்டன், அனா இன்னும் இரண்டு நாள்ல தபாலில வரும்."

"தபால்லையா?" அவன் யோசித்துக் கொண்டிருக்க,

இவர்கள் பேசிச் சிரிப்பதையே தூரத்திலிருந்து இரு கண்கள் இமை வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தன. அவை..... ஜீவாவினுடையவை.

•••

ஜீவாவிற்குஅன்றிரவு தூக்கம் வரவில்லை.

"எவ்வளவு நேசித்தேன். ஏன் என்நேசிப்பை புறக்கணித்தான்? பல நாள் பார்க்காமலிருந்தால் தவிப்பு வருமென்றல்லவா நினைத்தேன். அவளைத் தள்ளிக்கொண்டல்லவா வந்திருந்தான், பார்க்கிற்கு. என்ன சிரிப்பு? என்ன பேச்சு-? ஏன் என்னை ஏமாற்றினான்?



பெண் மனம் நிஜம் அறிய விழையாமல் நிழலை நம்பிக்கொண்டது.

"ச்சீ, இவனும் ம்னுசனா?" நினைத்துக்கொண்டாள்.

விடிந்த போது தீர்மானமாய், பாதிப்பாய் ஒரு முடிவெடுத்திருந்தாள்.

•••

தினேஷ் அலுவலகத்துள் நுழைந்த போது அவனிருக்கையில் அமர்ந்திருந்தாள் ஜீவா. சந்தோஷம் கொப்பளிக்க தினேஷ் அருகே செல்லவும், வெடித்தாள்- கீழ்க்குரலில்.

"தினேஷ் நீங்க செய்த துரோகத்திற்கு ஆண்டவன் உங்களை சும்மாவிட மாட்டான். நீங்களும் அவளும் கல்யாணம் பண்ணி சந்தோஷமாயிருங்கள். ஆனா இந்தக் கணத்திலிருந்து உங்களுக்கென வாழ்ந்த ஜீவா செத்துப்போய்விட்டாள். இதைச் சொல்லத்தான் வந்தனான்- போறன்."

"என்ன துரோகம்?" ஒரு கனம் புரியாமல் நின்ற தினேஷ், சுதாகரித்து நகர எத்தனித்தவளை

"ஒரு நிமிஷம் ஜீவா, இதுதான் உன் முடிவா?"

"ஆமாம்"

"நன்றாக யோசித்துச் சொல் பின்னால் வேதனைப்படாதே."

"இன்னுமென்ன வேதனைப்பட இருக்கு? தாராளமா நீங்க நிலாவையே கட்டிக்கோங்க." சொல்லிவிட்டு நகர்ந்தவளை,

வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் தினேஷ்.

இரு நாட்கள் கழிய தபாலில் ஜீவாவிற்கு திருமண அழைப்பிதழ் ஒன்று வந்திருந்தது. அழைப்பிதழை பிரித்தவள் அதனுள்ளிருந்து விழுந்த கடிதத்தை எடுத்தாள். கடிதத்திலிருந்த எழுத்துக்கள் தினேசினுடையது என அடையாளப்படுத்த, கடிதத்தை தூக்கியெறிந்தாள். அழைப்பிதழில் மணமக்கள் பெயர் பார்த்தவள் அதிர்ந்தாள்.

மணமகள் "நிலா" என்றிருக்க, மணமகன் "ரகு" என்றிருந்தது. ஒரு கணம் தடுமாறியவள்,

"அப்போ தினேஷ்"...சிந்திக்கத் தொடங்கியவளின் தலைக்குள் கரப்பான் பூச்சி ஊர்ந்தது. உணர்வுக்கு வந்தவள் தினேஷின் கடிதத்தைப் பாய்ந்தெடுத்தாள்.

என்றும் என் பிரிய ஜீவா,

இக்கடிதத்துடன் வரும் அழைப்பிதழைப் பார்த்திருப்பாய். சகலதும் புரிந்திருக்கும். ஒரு பெண் ஒரு ஆணுடன் பேசிச் சிரித்தால் அது காதலாகத்தான் இருக்க வேண்டுமா? உன்னைப் பல வருடங்களாக காதலிப்பவன் நான். என்னை நீ புரிந்துகொண்டது இவ்வளவுதானா? நம்பிக்கைகள் நசுங்கிப் போனதா? நம்பிக்கையின் அடிப்படைதான் வாழ்க்கை. நம்பிக்கை சிதறினால், சந்தேக விதை விழுந்தால் வாழ்க்கையே நாசம்தான். உன் சந்தேகம் இப்போது தெளிந்திருக்கலாம். ஆனால் இனியும் இன்னொருவர் பேச்சைக் கேட்டு சந்தேகம் கொள்ளமாட்டாயென்று என்ன நிச்சயம்? எனவே.........

மேலே படிக்கப் படிக்க, கையிலிருந்த கடிதம், கனத்தது-ஜீவாவிற்கு.

(யாவும் கற்பனை)

## இடது காதோடு ஜோக்!



பெண்களின் இடது காதில் ஜோக் சொன்னால் அதிகமாக இரசிப்பார்களாம். ஆனால் ஆண்களிடமோ வலதுகாதில் சொல்ல வேண்டுமாம். கனடா நாட்டு ஆராய்ச்சியாளர் டாக்டர் ஜோன் சல்லிவன் கண்டறிந்த உண்மை இது. காரணம் என்னவென்றும் அவரே சொல்கிறார். பெண்களைப் பொறுத்தவரை மூளையின் வலது பாகத்துக்குச் செய்திகளை அனுப்பிவைப்பது இடதுகாதில் இருந்து கிளம்பும் நரம்புகள்தான். ஆண்களைப் பொறுத்தவரை இதற்கு நேர்மாறான அமைப்பாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# அவளொரு தமிழ் பெண்தான்!

-முகில் வண்ணன்-




அபிராமி கணவனுடன் தன்னால் இனியும் சேர்ந்து வாழமுடியாது என்று கூறிக்கொண்டு தாய்வீடு வந்து விட்டாள். தாய் எவ்வளவோ மன்றாடிப் பார்த்து விட்டாள்.

"இனி விவாகரத்து ஒன்றே எனது முடிவு" என்று இறுதியாகக் கூறிவிட்டாள் அபிராமி.

"என்னம்மா சொல்கிறாய் நீ ஒரு மேல் நாட்டுப் பெண் என்றா எண்ணி விட்டாய்? நீ ஒரு தமிழ் பெண்ணம்மா. தமிழ் பாரம்பரியம் கலாசாரத்தைக் கைவிடச் சொல்கிறாயா? தமிழ்ப் பெண்கள் மணம் முடித்தபின் 'கண்கண்ட கணவன்' என்று கணவனைக் கொண்டாட வேண்டும். அவர்கள் தவறுகளைப் போட்டுத் தாட்டு மூடி மறைத்து அவை வெளியில் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதுதான் தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது. 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்று. அவன் எப்படிப்பட்டவன் என்றாலும் விதியே என்று அவனுடன் வாழ்வதுதான் ஒரு தமிழ்ப் பெண்ணின் கடமை. அதைவிட்டு விட்டு நினைத்தவுடன் கட்டிக்கொள்ளவும் வேண்டாத போது வெட்டி விடவும் சட்டம் இடம் தரலாம். ஆனால் தமிழ்ச் சமூகம் இடந்தராதம்மா. மனதை மாற்றிக் கொண்டு கணவனிடம் செல்லம்மா. வா நானே கூட்டிக்கொண்டு போகிறேன்."

"அம்மா நான் படித்தவள். எனக்குப் பத்தாம் பசலி போல் விதியே என்று ஆண்டவனை நொந்து கொண்டு என் வாழ்க்கையைப் பாழ்படுத்த முடியாதம்மா. அந்தக் காலத்தில் பெண்கள் வேறு வழியின்றி அப்படி இருந்திருக்கலாம். ஆனால் இப்போதும் பெண்கள் அப்படி இருக்க வேண்டும் என்பதில்லை. நாகரிகம் வளர்ந்துவிட்டது. விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றுவிட்டது. பெண்களும் முன்னேறி விட்டார்கள்."

"படித்து விட்டாய், பட்டம் பெற்று விட்டாய் என்பதற்காக பண்பாட்டை மறந்து விடலாமா? விஞ்ஞானமும் நாகரிகமும் வளர்ந்தால் பெண்கள் மாற முடியாது. பெண்கள் பெண்களாகவே வாழவேண்டும். அழுதாலும் பிள்ளை அவளே பெற வேண்டும். உனக்குத் தெரியுமா? விஞ்ஞானத்தாலும் இவற்றை மாற்ற முடியவில்லை. நீ ஒரு மனோதத்துவப் பேராசிரியையாக இருக்கலாம். ஆனால் நான் உன் தாயம்மா. உலக அனுபவம் எனக்கு உன்னைவிட்டு கூடுதல். 50வருடங்கள் இந்த உலகில் வாழ்ந்த அனுபவம் சொல்வதைக் கேளம்மா....."

"அம்மா நீங்கள் அனுபவசாலிதான். எனது அம்மா தான், நான் மறுக்கல்ல. ஆனா உங்கள்அறிவுக்கு எட்டியபடிதான் உங்களால் பேச ம்முடியும். அம்மா என்னை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையே! உங்கள் உலக அனுபவத்தைவிட எனது படிப்பனுபவம் கூடுதலாகப் பேசும் அம்மா. ஆனால் உங்களுடன் நான் வாதாட விரும்பவில்லை. உங்கள் மகளை முதலில் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமம்மா. நான் படித்த பெண்ணாக இருந்தாலும், எனக்கும் ஒரு பெண்ணின் சராசரி ஆசைகள் இருக்கிறதம்மா. அதையெல்லாம் குழிதோண்டிப் புதைத்துவிட்டு ஒரு ஜடமாக என்னால் வழமுடியாது. என்னை மன்னித்து விடம்மா?"

"நீ என்ன சொன்னாலும் நீ வாழா வெட்டியாக இங்கு வந்து இருந்தால் உன்னைக் குறை சொல்லாவிட்டாலும் பெற்றவர்கள் எங்களைத் தான் ஊர் உலகம் பழி சொல்லும். மகள்நீ உழைப்பதால் பணத்துக்கு ஆசைப்பட்டு உன்னைப் பிரித்து வைத்திருப்பதாக அல்லவோ கூறப்போகிறார்கள்?"

"உங்கள் பக்க நியாயம் எனக்கு விளங்குதம்மா. அதுக்காக தமிழ்ப் பெண்கள் எல்லாம் விதியை நொந்து வாழ்ந்து செத்துமடிந்தால் நமது சமூகம் உருப்படாது. அதிலும் புரட்சிகரமான மாற்றம் வேண்டுமம்மா. எனக்குத் திருமணம் வேண்டாம், வேண்டாம். என்று எத்தனை தரம் சொன்னேன்.நீங்கள் கேட்டால்தானே! இப்படியெல்லாம் வரும் என்று எனக்குத் தெரியும். இந்த ஆண்கள் செய்வது எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு என்னால் மாடுபோல வாழ முடியாமல் இருக்கிறதே. நான் என்ன செய்ய?" அவள் குறைப்பட்டாள்.

மகள் இத்தனை சொல்கின்றபடியால் ஏதோ பாரதூரமான சம்பவம் நடந்திருக்க வேண்டும் என்று அந்தத் தாயின் மனம் கணக்குப் போட்டுக்கொண்டது.

அவள் ஆரம்பத்தில் 'திருமணம் வேண்டாம்' என்று மறுத்ததற்குக் காரணம் இதுதான் என்று கூறுகின்றாளே! அப்படியானால்...

முகுந்தன் என்னும் ஒரு பட்டதாரி ஆசிரியரை முதலில் அவளுக்குப் பேசி முற்றாகி இருந்தது. அவர் அடிக்கடி அவள் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தார். அவருடன் பேசவும் பழகவும் அவளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒருமாதம் இருக்கும் அவர் வந்து போகத் தொடங்கி. அவரில் என்ன குறை கண்டாளோ தெரியவில்லை. நேரே அவனிடம் சொல்லிவிட்டுத்தான் தாய் தந்தையரிடமே சொன்னாள்.

"அம்மா இவரை எனக்குப் பிடிக்க வில்லை.இப்படி வக்கிர புத்தியுடையவருக்கு நான் மனைவியாக விரும்பவில்லை. இதைவிட நான் கன்னியாகவே காலத்தைக் கழிக்க விரும்புகின்றேன். மனதைச் சுத்தமாக வைத்திருக்க முடியவில்லை. வண்டுபோல அலைந்து திரியுறானுகள். இவங்களெல்லாம் எதிர்பார்ப்பது ஒரு கண்ணகியாகவோ சீதையாகவோ இருக்க வேண்டும் என்று ஆனால் 'ஆண்கள் சேறுகண்ட இடத்தில் மிதித்து தண்ணீர் கண்ட இடத்தில் கழுவலாமாம்' எப்படி பகிடி?

"அம்மா நான் அவரிட்டச் சொல்லிப் போட்டன். உங்களுக்கும் எனக்கும் ஒத்து வராது. நீங்க போகலாம்" என்று. இனி உங்கள் மாப்பிள்ளை இந்த வீட்டுப் பக்கம் திரும்பியும் பார்க்க மாட்டார். விட்டது பெரிய தலையிடி" என்றாளே பார்க்க வேண்டும்.

தாய் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள். "ஒரு மாப்பிள்ளை பேசி முடிக்க எத்தனை கஷ்டம் என்று உனக்குத் தெரியுமா? நீ உன்பாட்டுக்கு எப்படிச் சொல்வாய்? எங்களிடம் கேட்காமல் இனி எப்படி அந்தப் பொடியன்ட முகத்திலை விழிக்கிறது? ஒரு அடங்காப் பிடாரியைப் பெற்று வைத்து இருக்கிறீர்களே என்று கேட்கப் போகிறானே!" என்று ஒப்பாரி வைத்தாள்.

"அம்மா வாழப்போறது நான். நான் முடிவெடுத்தால் சரிதான். அதுதான் எனது முடிவை இப்ப உங்களுக்குச் சொல்றேனே! எனக்கு விருப்பமில்லாத எந்தச் சம்பந்தத்தையும் வைத்துக்கொள்ள வேண்டாம்" என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டாள்.

"அவள் படித்தவள். அவனுடன் பழகிய பின்னர் வேணாம் என்று சொல்கிறாள் என்றால் ஏதும் காரணம் இல்லாமலா இருக்கும்? அதையேன் நாம் கேட்பான்?" என்று விட்டுவிட்டார் அப்பா.

தாயும் மௌனமானாள். அதன்பின்னர் பேசிவந்த பல சம்பந்தங்களை அவர்களுடன் தொடர்புடையவர்களே விசாரித்தறிந்த பின்னர் வேண்டாம் என்று மறுத்து விட்டாள். காரணம் கேட்காமலே அவளது திருமணம் தள்ளிப்போடப்பட்டு வந்தது.

இறுதியாக இந்த மாப்பிள்ளை கொழும்பில் ஒரு கம்பனியில் 'மனேஜிங் டிரக்டர்' என்று வந்த போது அவளால் மறுப்புச் சொல்ல முடியவில்லை.

வயது இருபத்தி ஏழாகிவிட்டது. தாய் தகப்பனுக்குப் பாரம் என்பவற்றை விட அவனுடன் பழகுவதற்கும் அவனைப் பற்றி அறிவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை.

அதைவிட பிரதீப் கம்பனி மூலம் மேல்நாட்டுப் பயிற்சிக்காக அடுத்த மாதம் அமெரிக்கா செல்வதாகவும் அதற்கு முன்னர் எழுத்தை வைத்து அனுப்ப வேண்டும் என்றும் அவனது பெற்றோர் விரும்பியதும் ஒருகாரணமாயிற்று.

எதிர்பாராத வேகத்தில் எல்லாம் நடந்தேறிமுடிந்துவிட்டது. திருமணத்தின் பின்னர் அபிராமி கொழும்பில் வேலையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதைத் தவிர வேறு எந்த நிபந்தனையும் இல்லை.

இவற்றிற்கு மேலாக தனது கணவன் நடிகர் போன்று அழகாக இருப்பதில் பெருமைப்பட்டுக்கொண்டாள். எந்தப் பெண்ணுக்கும் இருக்கும் நியாயமான உரிமை அது.

வெளிநாடு சென்று வந்ததும் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. கணவனுடன் கொழும்பில் வேலையையும் மாற்றிக் கொண்டு ஒரு மாதத்தில் தனிக் குடித்தனம் சென்று விட்டாள் அபிராமி.

மகளைக் கொண்டு விட்டு வந்த பெற்றோர் பெருமையில் பூரித்துப் போயினர். வளமான வாழ்க்கை அமைத்துக்கொடுத்த திருப்திதான் அது.

அது நிலைத்து நிற்கவில்லை. ஆறு மாதத்தில் அனாதரவாக தட்டத்தனியே வந்து நிற்கிறாள் மகள். எப்படியாவது திருப்பியனுப்பி விடுவோம். என்றால் வெட்டி எறிந்து விட்டல்லவா வந்து இருக்கிறாள். இனி அவள் தனிமரமாக எப்படி வாழ முடியும்? அதை பெற்ற மனம் எப்படித் தாங்கிக்கொள்ளும்? அத்தனைக்கும் என்ன நடந்தது என்றும் சொல்கிறாள் இல்லையே!

அதை எப்படிச் சொல்வது என்றுதான் அவளும் தவித்தாள்.

படித்ததாலும், படித்ததைப் பரீட்சித்து அனுபவம் பெற்றதாலும், இன்னும் அதையே படிப்பித்துக்கொண்டிருப்பதாலும் மனித மனங்களைத் துல்லியமாக அறிந்து கொள்ளும், அளவிடும் திறமை பெற்று இருக்கிறாள் அபிராமி. அவள்தான் மனோதத்துவத்தில் சிறப்புப்பட்டம் பெற்றவளாயிற்றே!

பிரதீப் தன்னை மணக்க முதல் எப்படி வாழ்ந்தான் என்பதிலோ வெளிநாடுகளுக்கு சென்ற போது எப்படி இருந்தான் என்பது பற்றியோ அவள் கவலைப்படவில்லை. ஆனால் திருமணமான பின் அவன் தனக்குக் கணவனாக இருக்க வேண்டும், கடந்த கால கெட்ட நினைவுகளை மறந்து நல்ல குடும்பஸ்தனாகத் திகழ வேண்டும் என்பது தான் அவள் எதிர்பார்ப்பாக இருந்தது.

வெளிநாடடில் பெண்களுடன் பழக ஏற்பட்ட அனுபவம் பற்றி எல்லாம் கதை கதையாக அவன் கூறும்போது அவளுக்கு வெறுப்புத் தோன்றும். என்றாலும் நடந்து விட்ட தவிர்க்க முடியாத நிகழ்வு என்று விட்டுவிட்டாள்.

அத்துடன் விட்டானா? கந்தோரில் இருக்கும் அழகான பெண்களைப் பற்றியும் அவர்கள் தன் அழகில் மயங்கி வழிவதைப் பற்றியும் கூறும்போது அவளால் கேட்டுக்கொண்டிருக்க முடிவதில்லை.

"நீங்கள் அழகன் தான். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இனி அந்த அழகு எனக்கு மட்டும்தான் சொந்தம். அதை நான் கொள்ளை கொண்டு விட்டேன்." -அபிராமி.

"அதெப்படி? நான் உனக்குக் கணவன் என்றாலும் மற்றப் பெண்கள் என் அழகை இரசிப்பதையும் புகழ்வதையும் உன்னால தடுக்க முடியாதே!" என்றான்.

"அப்படி உங்கள் மனைவியின் அழகையும் மற்றவர்கள் இரசிக்க அனுமதிப் பீர்களா?" ஒருபேச்சுக்குத்தான் கேட்டாள்.

"அடி செருப்பால...நான் ஆண் பிள்ளை. எனக்குச் சமமாக நீ வரலாமா? நீ எனக்கு மட்டுமே உரியவள்....."

"அதுபோலத்தான் நீங்களும் எனக்கு மட்டுமே உரியவர். ஒரு குடும்பத்தில் சமநீதி நிலவவேண்டும். அங்கே ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியில்லை," என்றாள்.

அன்று இவ்வாறு நடந்த விவாதத்தில் முதன் முதலில் விரிசல் விழ ஆரம்பித்தது. அவன் வந்து வந்து சொல்லும் கதைகளில் இருந்து அவனது மனதில் இருக்கும் காரியாலயப் பெண்களைப் பெயர் விபரத்துடன் அறிவாள் அபிராமி.

அன்றிரவு அவனது நடத்தைக்குப் பின் காலையில் கேட்டாள். "இரவு யாரை இரசித்தீர்கள்?" என்று.

"வெரிகுட்! இரவு ஜாலியை அனுபவித்த உணர்வு ஏற்பட்டது எனக்கு. ஆனந்தமாக இருந்தது." என்றான் அவனும் மறைக்காமல்.

"நானறிவேன். அதுதான் கேட்டேன்." என்று கூறியவளுக்கு அவனுடன் படுக்கைக்குச் செல்ல விருப்பம் இல்லாமல் இருந்தது. அப்படிச் சொல்லும் ஒவ்வொரு இரவும் அவன் எவளோ ஒருத்தியை அனுபவிப்பதாக நினைத்து நடந்து கொள்ள, தான் அதற்கு ஒரு ஜடமாக ஈடுகொடுக்க வேண்டியிருந்தது.

இதை எண்ண எண்ண அவன் மீது வெறுப்பு வளர ஆரம்பித்தது. அதைவிடத் தான் ஒரு பெண். அவனது மனைவி என்று கருதாமல், அவளை அனுபவிப்பதாக எண்ணாமல், வேறு எவளோ ஒருத்தியை அனுபவிக்கத் தான் கருவியாக இருப்பதை அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மெல்ல மெல்லப் புகைந்து கொண்டிருந்தது. ஒரு நாள் வெடித்தே விட்டது. அவளது மனோதத்துவ உணர்வுகள் விழித்துக்கொண்டன.

"எவளோ ஒருத்தி என் மனதில் இருந்தால் என்ன? நீ ஏன் அதுபற்றிக் கவலைப்படுகின்றாய்? உன்னைத் திருப்திப்படுத்தினால் சரிதானே!"

"அதற்கு நான் ஆளில்லை. காசுக்கு முந்தானை விரிப்பவர்கள் வேண்டுமானால் அப்படி இருக்கலாம். நான் ஒரு சராசரிப் பெண்ணுக்கு மேற்பட்டவள். எனது உரிமை, உடமை பாதுகாக்கப்பட்டு எனக்காகவே இருக்க வேண்டும். வேறு ஒருத்திக்காக என் உடலைத் தர முடியாது."

"அபிராமி, படித்தவள் என்பதற்காக அதிகம் பேசாதே. நீ என் மனைவி. என் சொற்படி நடக்க வேண்டிய கடமை உனக்கு உண்டு. எனக்குத் தேவையானபோது தேவையான மாதிரி அனுபவிப்பது எனது விருப்பம். "இதில் தலையிடும் உரிமை "உனக்கில்லை....."

"நெருப்பில் புழுப்போல எவளோ ஒருத்திக்காகப் படுக்கையைப் பகிர்ந்து கொள்ள நான் தயாரில்லை. அதற்கு வேறு ஆளைப் பார்த்துக்கொள்ளுங்கள்." என்றாள்.

"எவளோ ஒருத்தியை ஒரு 'சுண்டில்' கொண்டுவர என்னால் முடியும். நீ பெரிய 'இவ' போல பேசவேண்டாம். நீ என் மனைவி என்பதே மறந்து பேசுகிறாய்."

"அதைத்தான் அறுத்துவிட நான் தீர்மானித்துவிட்டேன். இனி நீங்கள் உங்கள் விருப்பம் போல நடக்கலாம்." அவள் அறைக்குள் சென்றாள்.

அவன் திக்பிரமை பிடித்தவன் போல் இருந்தான்.

சில நாட்களில் புறப்பட்டவள் தான், இன்று தாய்வீட்டில் வந்து நிற்கிறாள். இப்போது "இனி எனக்கு அவர் வேண்டாம் விவாகரத்து கோரப்போகிறேன்" என்றாள்.

"அதுதான் எதற்காக?" என்றாள் தாய்.

"அம்மா நான் அவருக்கு மனைவியாக இல்லையம்மா. ஒரு வேசியைப் போல் இருக்க என்னால் முடியாது. எவளோ ஒருத்தியாக என்னைப் பாவிக்கிறார். அவருடைய இன்பத்திற்காக நான் என் வாழ்க்கையைப் பலியாக்க முடியாதம்மா. ஒவ்வொரு முறையும் அவரது மனநிலையை அறியும் போது அசூசையும் வெறுப்புமே எனக்கு வருகின்றது. இப்படிப் பட்டவருடன் எப்படி அம்மா வாழ்வது? பிளீஸ் என்னை என் விருப்பத்து விடம்மா.."

தாய் மௌனித்து விடுகிறாள்.

அவளுக்கு மகளுடைய விளக்கம் தெளிவாக இல்லை என்றாலும். படுக்கையில் திருப்தி இல்லை என்றால் குடும்பம் நிலைபெறுவதில் அர்த்தமில்லை என்பதை விளங்காதவளா?

மகளின் தலைஎ்ய பரிதாபத்துடன் தடவிக்கொடுக்கிறாள். ஒரு பசு தன் கன்றை நக்கி விடுவது போன்ற பரிவு அது.

அபிராமி- அவளும் ஒரு தமிழ்ப் பெண்தான். அதற்காக அனைத்தையும் விட்டுக்கொடுத்து அடிமையாக அவள் தயாரில்லை என்பதை நிரூபித்து விட்டாள், மற்றவர்களும் விழித்தெழ வேண்டும் என்பதற்காக.

(வெளிநாட்டு உண்மைக் கருவுக்குக்கு உள்ளூர் கற்பனைக் கதை)

---

குட்டிக்கதை

## காதலிக்கு ஒரு கடிதம்



நான்
கடைசியாகச் சந்தித்த
முதற்தர அழகியே!

உன்-
பெயரைச் சொல்லிப்
பூனை கத்தும்!
என் கனவுக் கால்கள்
உன் (ஞாபக) நகரைச் சுற்றும்!

நீ எனது மகிழ்ச்சி!
நான் உனது தொடர்ச்சி!

நீ சம்மதி!
எனக்கு நிம்மதி!

மீண்டும் ஒரு தடவை அந்த லவ் லெட்டரை வாய்விட்டுப் படித்துப் பார்த்தான் ரமீஸ்.

இன்று எப்படியாவது லெட்டரை அவளிடம் கொடுக்க வேண்டும். உயர்திணைக் குயில் உலாவரும் நகர வீதியில் விழி புதைத்து நின்றான். அவனோடு சேர்ந்து அவளும் ஓவியக் கலையகத்தில் கலை படைக்கும் ஓர் மாணவி. அவனுடைய சமகாலக் காதலி.

அவன் மயங்கினான் அவளுடைய குரல் இனிமையில்!

அவனைப் பொறுத்தவரையில் அவனுக்கு அவள்தான் குயில்! உதடுகள் திறந்தால்தான் உதவிகள் பெறக் கூடும்... ஞாபகம் வர-

அவனுடைய பேனா உதடுகள் காதல் கவி பேச ஆரம்பித்தன.

தூரத்தில்...

தென்றல் நடந்து வந்து கொண்டிருந்தது.

லவ் லெட்டரைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

யாராவது பார்க்கிறார்களா. சுற்று முற்றும் பார்த்தான். குயில் அவனுக்கு மிக அருகில் நெருங்கியது. 'சனியன்...இந்த நேரம் பார்த்து நாஸிர் வர்றான்...'

நின்றான்.

நாஸிரோடு அவளுக்கென்ன பேச்சு வேண்டிக்கிடக்கு?

சிநேகிதன் மீது சின'கிதனானான் ரமீஸ்.

அவளையும் நாஸிரையும் ஒப்பிட்டுப் பார்த்தான்.

அவள் குயில்!

அவன் காகம்!

நாஸிரும் அவனோடும் அவளோடும் அதே ஓவியக் கல்லூரியில் பயிலும் மாணவன்தான். ஆனால்- அவன் 'கலை என்றால் கிலோ என்ன விலை' ஜாதி, சும்மா பொழுதுபோகவில்லை என்று கலை பயில வந்தானாம் பாவி.

அவள் மீது நாஸிருக்கும் ஒரு 'இது'.

லவ் லெட்டரைக் கையில் எடுத்தான் ரமீஸ்.

நாஸிருக்குத் தெரியாமல் லெட்டரை அவளிடம் கொடுக்க வேண்டும். அவள் நாஸிரின் அருகில் நெருங்கினாள்....

டயறியை விரித்தாள். வெளியே எடுத்தாள். லெட்டர். லவ் லெட்டர்!

கொடுத்தாள்!

நாஸிர் அவள் கரத்தைப் பற்றினான்....

பாவம் ரமீஸ்!

இனி-

'சரிதான் நான் சொன்னது நீ குயில்தான்!

அழுதழுது வாழுகிறேன் தனிமையில் நான்!

நீ இட்ட ஞாபக முட்டைகள்...

அடைகாத்தேன்! அவையாவும்..

சோகக் கவிதைக் குஞ்சுகள்!

குயிலுக்காகக் கூடு கட்டும் காகம் நானடி....

உனது குரல் கேட்டு! 'எனக்கும் வரும் பாட்டு!

குயிலே! உன்னை மறக்க முடியுமா? புதிய திசை பார்த்து..பறந்த தென்ன நேற்று...

உயிரே! உன்னை வெறுக்க முடியுமா? எனது 'நெஞ்சோடு நெஞ்சமே!'

'மனதில் சந்தோஷம் பஞ்சமே!'- என்று, அவளுடைய- அந்தக் குயிலுடைய ஞாபகங்களை மீளாய்வு செய்து சோகக் காவியங்கள் பாட வேண்டியதுதான்.

பாவம் ரமீஸ்...

அந்தக் குயிலோடு சேர்ந்து கூவ.... ஆசைப்பட்டான்...

குயில் மீண்டும் அவனைத் தேடி வருமா? வந்தால் வாழுவான்...

பாவம் ரமீஸ்!

அருகில் இருந்த சோலைக்குள் காகத்தோடு ஒன்றாகிப்பறந்து போனது அந்தக் குயில்.

ரமீஸின் கையிலிருந்த லவ் லெட்டர் சுக்குநூறாகிக் கொண்டிருந்தது. அவனுடைய இதயத்தைப் போல!

(யாவும் கற்பனை)

-குயில் ரசிகன்-

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# காதலின் பொன் வீதியில் பயணம் செய்ய பயனுள்ள விதிகள்!

இரண்டு உள்ளங்களின் சங்கமிப்பே காதல். காதலில் காமமும் உண்டு. ஆனால் காமம் மட்டுமே காதல் அல்ல.

காதலிப்பது எப்படி என்று ஒருவருக்கு இன்னொருவர் சொல்லிக்கொடுக்க முடியாது. வகுப்பு நடத்த முடியாது. ஆனால், காதல் என்பதை வெறும் தசைக்கவர்ச்சி மட்டுமேயாக புரிந்துகொண்டு வழுக்கி விழுந்து கொண்டிருக்கும். இளைய தலைமுறையினர் சிலருக்கு ஆலோசனைகள் தேவைப்படுகின்றன.

வயது வேறுபாடுகள் தாண்டி மலரும் விசயம் காதல்.

காதலர்கள் தோல்வி அடைந்திருக்கிறார்கள். காதலர்கள் சாவைத் தழுவியிருக்கிறார்கள். ஆனால் காதல் மட்டும் சாகாவரம் பெற்றதாக சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

இன்னும் இளமையாக இருக்கிறது.

காதலிப்பவர்களின் பிரச்சனைகளை ஆராய்ந்த பிரபல பேராசிரியர் டாக்டர் பனோஸ்.டி.பார்டிஸ் கூறியுள்ள சில ஆலோசனைகள் இங்கே தரப்படுகின்றன.

"அன்பு செலுத்துவதனால் ஏற்படும் பலதரப்பட்ட உணர்வுகளை எவ்வாறு நெறிப்படுத்தலாம் என்பதனை நன்றாக உணராத நிலையிலுள்ளவர்களே சிக்கலான பிரச்சனைகளை எதிர்கொள்ளுகின்றனர்." இவ்வாறு டாக்டர் பனோஸ் டி.பார்டிஸ் தெரிவிக்கிறார்.

"திருமண உறவிலும் அதற்குட்படாமல் பிற வழிகளிலும் காதல் மலர்கிறது, மாற்ற முமடைகிறது. இதற்கேற்ப ஒவ்வொருத்தரும் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். காதலை ஒரு ஜெற் விமானத்துக்கு ஒப்பிடலாம். நெறி பிறழ்ந்து போகாத வண்ணம் காதலின் பாதை அமைதல் வேண்டும். இல்லையேல் எல்லாம் சிதைந்து போய்விடும்."

காதலின் உணர்வுகளைத் தக்க முறையில் நெறிப்படுவது தொடர்பாக 'குடும்பத்தின் வரலாறு' (History of family) என்ற நூலினை எழுதிய டாக்டர் பார்டிஸ் இவ்வாறு கூறுகிறார்.

- காதல் வயப்படுவதற்கான ஆரம்ப நிலை உங்களிடம் ஏற்படுகிறது என்று தோன்றினால் உடனடியாக நீங்கள் அந்த உணர்வில் முற்று முழுதாகத் தோய்ந்து விடாதீர்கள். உங்கள் அன்புக்குப் பாத்திர மாகப் போகின்றவர் உங்களுடன் நீண்ட நெடுங்காலம் ஒத்துப்போகக் கூடியவராக இருக்கிறாரா என்பதை முதலில் கண்டறிந்து கொள்ளுங்கள்.

ஆணைப் பெண்பாலாரும் பெண்ணை ஆண்பாலாரும் ஒருவருக்கொருவர் கவர்ந்திழுக்கும் தன்மை பெற்றவர்களே.

> "காதலை ஒரு ஜெட் விமானத்திற்கு ஒப்பிடலாம். நெறி பிறழ்ந்து போகாத வண்ணம் அதன் பாதை அமைதல் வேண்டும். இல்லையேல்........"

ஆனால் பெரும்பாலான ஆரம்பக்கவர்ச்சி விரைவில் உதிர்ந்து போகும் தன்மை யுடையது. இருதிறத்தாருக்குமிடையில் பற்றுக்கோள், குறிக்கோள், மன ஒற்றுமை ஆகிய யாவும் பொதுவானவையாக இருக்குமானால் அன்பு நீடிப்பதற்கான அறிகுறிகளுண்டு.

- இருவருக்குமிடையில் தப்பபிப் பிராயங்கள் தலைகாட்ட நேர்ந்தால் காலந்தாழ்த்தாமல் இருவரும் மனம் விட்டுப் பேசி கருத்துக்களைப் பரிமாறி முடிவினை சீராக்கிக்கொள்ளுதல் வேண்டும். வெளிப்படையாகவும்- உண்மையினை மறைத்து விடாமலும் பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டும். உறவுகள் நொறுங்கிப் போய் விடக் கூடிய நிலையில் இருந்தாலும் இருவரும் மனம் திறந்து பேசுவதன் மூலம் பிளவுகள் மூடப்பட வாய்ப் புண்டு.

பிரச்சினைகள் தோன்றியதும் தாமத மின்றி அதனைத் தீர்க்க வழி தேட வேண்டும்.

வேகமான, சாதாரண காற்றினைப் போல் உருவெடுக்கும் பிரச்சனையை காலம் தாழ்த்த விட்டால் அதுவே விசுவரூபம் கொண்ட பெரும் புயலாக மாறிவிடக்கூடும்.

- உங்களுக்கு மன அமைதியின்மை ஏற்படுமானால், உணர்வுகளை அலைக்கழித்து விடாதீர்கள், தவறுகளை உங்கள் துணைவர் மீதோ துணைவி மீதோ போட்டு பழி சுமத்தி விடாதீர்கள். அவரைப் பற்றி விமர்சனம் செய்யவும் முற்பட்டு விடாதீர்கள். இதனால் அவரின் எண்ணங்களையும் உளப் பாங்கையும் முற்றாக முறியடித்து நல்லுறவும் சீர்குலைந்து போகக்கூடும்.
- சில சந்தர்ப்பங்களில் சிலருக்கு அடக்க முடியாத பல கோளாறுகள் தலை காட்டலாம். அதனைத் தனியாக அடக்கி விடமுயலாதீர்கள். உங்கள் நண்பர்களுடன் கருத்துப் பரிமாறி அவர்களுடைய ஆலோசனைகளையும் பெறுவது நல்லது. இவர்கள் மன உளைச்சலைப் போக்க வல்ல கருத்துக் களையும் தரக்கூடும்.

அவசியமானால் குறிப்பிட்ட துறை களில் மேன்மை பெற்றவர்களிடம் ஆலோசனை பெறத்தயங்க வேண்டாம். ஒருவர் காதல் வயப்பட்டு உணர்ச்சி வசப்படும் போது அவர் தன்னைப் பற்றிய சிந்தனைகளை ஓரளவு மறந்து விடுகிறார். இக்கால கட்டங்களில் அவதானம் முக்கியமானது. தன் நிலை பிறழாமல் தற்காத்துக்கொள்வது பயன்தரும்.

## இலக்கிய நயம்

**கலைஞரின் சங்கத்தமிழ் நூலில் இருந்து கொஞ்சும் தமிழில் உங்கள் உள்ள வயலில் உவகைமழை பொழிய வரும் இலக்கிய நயம் இது!**

# ஒரு பொது மகளின் புலம்பல்!

—கலைஞர் மு. கருணாநிதி—



வயலின் ஓரம் வரப்புகள் மீது
வளர்ந்து நிற்கும் மாமரக் கொப்பில்
உண்ணத் தெவிட்டாத ஒட்டுமாங்கனிகள்
வன்ன மாதர்கள் பெருந்தனம் போல
காய்த்துக் குலுங்கி கடைசியில் அவைகள்
கயல்கள் ஆடும் கழனியின் பக்கம்
வாவியின் நீரில் வளைந்து துள்ளும்
வாளைமீன் வாய்வீழ் வளநாடிதுவே!
வழுவில் விழுந்த மாங்கனிதன்னை
வாளைமீன் விழுங்கி மகிழ்தல் இயல்பே!
அவ்வாறே,
வாணன் என்னும் இவ்வூர்த்தலைவன்- காம
பாணம் தைத்தது என்று; உள்ளம்
கருகி வந்தான்! கருணை செய்க என்றே- என்முன்
உருகி நின்றான்!
வாளைமீன் வாய்க்குள் மாம்பழமொன்று
வலிய விழுந்தால் சும்மா விடுமா?
காளை அவன்; என் மடியில் வீழ்ந்த
கதையும் இதுதான் தோழி!
பிறகென்ன! நான் அவனை
உறவென்று உரைத்தேனா? அல்லால்
வரிசை வைத்து வா என்று அழைத்தேனா?- விழி
வலையை வீசி வஞ்சித்துப் பிடித்தேனா?- என்
பொலிவைக் காட்டிப் பொடிபோட்டு இழுத்தேனா? ஒரு
புன்னகை வீசி அந்தப் "புனிதனைக்" கவிழ்த்தேனா?
வசைபாடி எனைத்தாற்றும்
வாணன் மனைவியிடம் கேள்!- இன்ப
இசைபாடிக் களிப்போம் என்று;
இரவலன் போல் கெஞ்சியது யார்?
வந்த வாணன் எனை நோக்கி
நொந்த மனத்துடன் சொன்னது என்ன?
"கட்டிலுக்குத் துணையாய் வாய்த்த மங்கை- பிள்ளைத்
தொட்டிலுக்கு முழுநேரக் காவல் ஆனாள்!
தொடர்ந்து பல நாட்கள் பட்டினியால் வாடி- இன்று
துணிந்து உனைத்தேடி இன்பம் பருகவந்தேன்!
கட்டியணைத்துக் காய்ச்சல் போக்கி- மார்புக்
கச்சை அவிழ்த்துக் காம நோய் தீர்த்திடு" என்றான்.
ஒப்பினேன் நானும்- பொன்னால்
உப்பிய பையை உதறினான் என்மேல்!
பரத்தை நான் எனினும் உன்பால் பற்றுவைத்த பின்னர்- என்
தரத்தை உணர்வாய்; தாகம் தணிக முதலில்- என்றேன்!
தட்டிலே உள்ள சோற்றைப் பசியால் உண்ணப்பறந்து
கொட்டிக் கவிழ்த்த ஒரு குழந்தையைப் போலே
பரபரப்புணர்வுடன் பாய்ந்தான் என்மேல்- நான்
பயத்தால் நடுநடுங்கிப் போனேன் எனினும்- எனக்குப்
பழகிய கலைதான் என்ற துணிவில்
படுக்கைப் போட்டியில் சமமாய் நின்றேன்!
பலாச்சுளை- தேன் கதலி- தினைமா- என்று
பல நாள் இன்பம் பகிர்ந்துமகிழ்ந்தோம்!
திடீரென்று ஒரு நாள்
தெவிட்டியதாலோ அல்லது அவன் தேவியாம் திருமகள்
தேடி அலைகிறாள் என்ற செய்தி தெரிந்ததனாலோ;
தேர் ஏறிப்போன வாணன்,
திரும்பவே இல்லையடி!
பொருள்மட்டும் தரவில்லை; என்னைப் பொதுமகள் என்னும்
இருள் விரட்டும் ஒளிப்பிழம்பாய் அருகிருந்தான்.
உருள்கின்ற காலத்தின் கோலம் பார்-
சுருள்கின்ற கத்திபோல நாக்குச் சுழலும்
ஆடவனின் பாராட்டெல்லாம்- பஞ்சணையில்
கூடுகின்ற நேரத்தில் தான்!
அதன் பின்னர்ப் புதன் வருவேன்; வியாழன், வெள்ளி
வருவேன் என்று
அடுக்கடுக்காய் நாள்குறித்து 'சனி' காணாமற்
போய்விடுவான்,
குறை சொல்லி அவனை நான் குமுறுவதால் பயனில்லை தோழி!
பறைமுழக்கி ஊர்கூட்டி என்மீது பழியுரைக்கும்
கல்நெஞ்சக்காரி இருக்கின்றாளே; அவன் துணைவி
கண்ணீரையே கயிறாய்த் திரித்து அவனைக்
கட்டிப்போடுகின்றாளாம்!
கண்ணாடி முன் நின்று ஒருவர்
கண்டபடி அங்கங்கள் அசைத்திட்டால்
கண்ணாடியில் தோன்றும் உருவும்
கச்சிதமாய் அவ்வாறே அசைத்திடுமே!
அது போலத்தான்
அவளோ கண்ணாடிக்குமுன் அசைகின்ற அம்மை!
அவனோ அந்த அசைவு அனைத்தையும் பிரதிபலிக்கும் பொம்மை!
காத்திருந்து இனி என்ன பயன்?
பூத்திருக்கும் முல்லை நான்- இதழ்
மதுவுண்டு செல்வதற்குப்
புதுவண்டு வராமலா இருந்து விடும்! .
கலைமகளாய் மாற்றம் பெறக்கனவுகண்டேன்; ஆனால்
விலைமகளாகவே வாழ்க என்று
வாணன் வாழ்த்திவிட்டான்; அந்த
வீணன் வாழ்க நன்று!"
இவ்விதம் ஒரு காதல் பரத்தை
இதயத்துயர் எடுத்துச் சொல்லி
ஆருயிர்த் தோழியிடம் அலறிப் புலம்பியதை
ஆலங்குடி வங்கனார் எனும் புலவர்
தங்கத் தமிழ் உவமை கூறி,
சங்கக் கவியாய்த் தருகிறார் இங்கே!
"கழனி மா அத்து விளைந்து உகு தீம்பழம்
பழன வாளை கதூஉம் ஊரன்
எம்இல் பெருமொழி கூறித், தம் இல்
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப்பாவைபோல,
மேவன செய்யும்தன் புதல்வன் தாய்க்கே!"
(குறுந்தொகை: பாடல்:8; பாடியவர்: ஆலங்குடிவங்கனார்.)

பொருள் விளக்கம்:
கழனிமா அத்து விளைந்து உகு தீம்பழம்= கழனியருகே உள்ள மாமரத்தில் பழுத்து விழுகின்ற இனியபழம்.
பழனவாளை கதூஉம் = பக்கத்துப் பொய்கை யில் உள்ள வாளைமீன் கவ்விக் கொள்ளும்.
ஆடிப்பாவை = கண்ணாடியில் தோன்றும் உருவம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—25



**இடமிருந்து வலம்**

1. மாதங்களில் ஒன்று.
3. கடை வழிக்கு இதுவும் கூட வராது.
5. தற்போது இந்த யுகம் தான் நடந்து கொண்டிருக்கிறது. (மாறியுள்ளது)
6. தரணி எங்கும் இதற்கு மதிப் பிருக்கிறது.
7. தெளித்தால் வாசம் தான்.
8. துள்ளி ஓடி வரும். குளித்தால் சுகமாக இருக்கும்.
9. சுருக்கமாகவும் எழுதலாம், விரிவாகவும் எழுதலாம்.
10. இங்கே தான் நாமும் வாழுகிறோம்.
11. இடியோடும் கூட வரும்.

**மேலிருந்து கீழ்**

1. இசைத்துறையோடு தொடர் புடையது.
2. வியாபாரியை இப்படியும் அழைக்கலாம்.
4. நோய் முற்றுவதற்கு முன் இதைச் செய்து விடுவது நல்லது.
7. சோமாலியாவில் இதற்குப் பஞ்ச மில்லை.
8. அடிமேல் அடி வைத்தால் இது கூட நகரும் என்பர்.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 27.11.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-25**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு-05.**

*சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.*

**குறுக்கெழுத்துப் போட்டி இல-23க்கான சரியான விடைகள்:**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பு | க | லி | ட | ம் | ■ | 2 ஊ |
| த் | ■ | 3 ச | 4 மு | ■ | 5 லி | தா |
| 6 த | ச | ர | த | ன் | ■ | ரி |
| ர் | ■ | ணா | லு | ■ | 7 கா | ■ |
| ■ | 8 பை | ல | த | 9 ந | ந் | தி |
| 10 ர | ம் | ய | வி | ■ | த | ■ |
| 11 வை | ர | ம் | ■ | 12 அ | ம் | பு |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.23இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. கே. ரஞ்சன் நீர்கொழும்பு.
2. செல்வி. நாஸிஹா நிஜாம் புத்தளம்.
3. செல்வி.ரீ.லோஜனா கொழும்பு-15
4. யூ.சஹீனாஸ் திருகோணமலை.
5. எஸ். காயத்திரிதேவி கொழும்பு-15.
6. எஸ்.எச். பாயிசா குருநாகல.
7. ஆர். கவிதா பண்டாரவளை.
8. பி. பிலோமினி நுவரெலியா.
9. ஏ. இராசரத்தினம் மட்டக்களப்பு.
10. என். நாதன் கண்டி.

**இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா50/= வழங்கப்படும்.**

## சிந்தியா பதில்கள்

கிருபானந்த வாரியாரின் மறைவு குறித்து?
சுபத்ரா பெருமாள்-கோட்லோஜ் (எஸ்டேட்)

*தமிழுக்கும், சைவத்திற்கும் ஏற்பட்ட இழப்பு. அந்த கணீர்க்குரல் தமிழுக்கு ஒரு அணிகலன். அவரது உபதேசங்களில் எல்லாவற்றோடும் எனக்கு உடன்பாடு இல்லை. ஆயினும் அந்த இனிய தமிழ்நடை செவிவழி பாய்ந்து உள்ளத்தில் சுகம்தரும். மறக்கமுடியாது.*

•

மலரவிருக்கும் புத்தாண்டில் தங்களது எதிர்பார்ப்பு?
ஏ.என்.எம்.ஜவாத்-புத்தளம்.

*தீராத நோயாய் அவஸ்தைப்படுத்தும் இனப்பிரச்சனைக்கு இறுதியான சிகிச்சை செய்யமுடிகிறதோ இல்லையோ, சிகிச்சைக்கான பரிசோதனைகள் என்றாலும் நடக்கவேண்டும்.*

•

"சர்மிளாவின் இதயராகம்" எதிர்பார்த்த வெற்றியைத் தராதது பற்றி?
எஸ்.பிறேமேந்திரன்-அம்புகாமம் எஸ்டேட்.

*எவ்வாறான வெற்றியை எதிர்பார்த்தார்கள் என்று தெரியவில்லையே.*

•

திரு. அநுரா பண்டாரநாயக்கா ஜனாதிபதி யாவது போலக் கனவு கண்டேன். பலிக்குமா?
ரயிகம- ஸ்ரீகாந்தன்-இங்கிரிய.

*பகல் கனவுகள் பலிப்பதில்லை ஸ்ரீகாந்தன்.*

•

வள்ளி திரைப்பட வெற்றி கதையினாலா? அல்லது ரஜனிகாந்த் நடித்ததாலா?
எச்.எம்.மஸ்னலி-புத்தளம்.

### துரோகங்களை மன்னிக்கலாமா?

*கதை இருந்தால் மட்டும் படம் வெற்றியாவதில்லை. காட்சியமைப்புக்கள், கதை போகும் லாவகம், நடிப்பவர்களின் திறமை இப்படிப்பல விசயங்கள் வள்ளியில் ஓ.கே. ரஜனி நடித்ததும் வெற்றிக்கு ஒரு பிரதான பலம்.*

•

ஒருவனின் முன்னேற்றத்திற்கு காரணம் தாயா? தாரமா?
மரியம் காலித்-கண்டி.

*அன்புள்ள அம்மாவும், பண்புள்ள தாரமும் முன்னேறும் ஒருவனுக்கு இரு கண்கள்.*

•

பெண்கள், தூய்மையானவர்கள், மென்மையானவர்கள், புனிதமானவர்கள் என்று குறிப்பிடுகிறார்களே. அப்படியென்றால் ஆண்களை எப்படி குறிப்பிடுவீர்கள்?
கருணா-கருணாநிதி-பொகவான எஸ்டேட்.

*நீங்கள் குறிப்பிட்டுள்ள விசயங்கள் இருபாலுக்கும் பொருந்தும். தொப்பி அளவாக இருந்தால் போட்டுக்கொள்ள வேண்டியதுதான்.*

•

அன்பான கணவனை எப்படித் தேர்ந்தெடுப்பது?
ஆஸீனா சீனத்-கொழும்பு-12.

*சுயம்வரம் நடத்தியல்ல. சுயமனம் அறிந்து.*

•

"சோகத்தில் கலந்த சுகம்" விளக்கம் சொல்ல முடியுமா சிந்தியா?
ஆர்.பவானி-மட்டக்களப்பு.

*பிரிய முடியாத உறவு ஒன்று பிரிகிறது. சோகம் இதயத்தை சூழ்கிறது. பிரியும் உறவோ வளமான பாதை நோக்கி போகிறது. அதை நினைத்து பார்க்கையில் சந்தோசமும் வருகிறது. இந்த நிலை பெற்றோருக்கும் வரும். உற்ற நேசங்களைப் பெற்றாருக்கும் வரும். என்ன விளக்கம் ஓ.கேயா?*

•

துரோகங்களை மன்னிக்கலாமா?
மா.திருச்செல்வம்-திருமலை.

*கூடாது. வேறு யாரும் பாதிக்கப்படக் கூடாதல்லவா? அதனால் பாடம் புகட்டுவதே சரி.*

•

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்படியிருக்கும்?
கு.மகேஸ்வரி-பதுளை.

*ஆளும் கட்சியின் பக்கமே காற்று வீசும் போலத் தெரிகிறது.*

•

வாழ்வே மாயம் என்கிறார்களே?
சி.தயாநிதி-கொழும்பு-11.

*கலப்படமில்லாத பொய்.*

•

அன்பை வெளிப்படுத்த என்ன செய்யலாம்?
கா. கணேசராஜ்-ஹட்டன்.

*வெளிப்படுத்த வேண்டுமே என்று ஏதாவது செய்வது வேசம் ஆகிவிடும். உண்மையான அன்பு நடைமுறையில் தானாகவே வெளிப்படும்.*

•

# 'இல்லை' என்று ஒன்றுமில்லை

கனித்ரன் நிறைய யாகங்களைச் செய்த மாமன்னன். அவனுக்கும் ஒரு குறை- குழந்தை இல்லையே என்ற குறை.

அக்னியை ஆராதித்துக்குழந்தையைப் பெற அதற்காக மான் மாமிசத்தைக் கொண்டு வரவேண்டி வேட்டையாடச் சென்றான். ஒரு மானை அடிக்கப் போகும்போது மற்றொரு மான் வந்து, "என்னைக்க கொன்று என் மாமிசத்தை ஹோமம் செய்யுங்கள்." என்றது.



அரசன் திகைத்து, "நீயாக உன் உடலைக் கொடுக்க என்ன காரணம்?" என்று கேட்டான்.

"மன்னவா, நான் குழந்தை இல்லாத பாவி, எப்படியும் ஒரு நாள் இறக்கப் போகிறேன். உமது யாகத்திற்கு என் உடல் உபயோகமானால் அடுத்த ஜென்மத்திலாவது எனக்குக் குழந்தை பிறக்காதா என்ற ஆதங்கத்தில் வந்தேன்" என்றது.

இதற்குள் மற்றொரு மான் ஓடிவந்து "மன்னவா, என்னைக் கொன்று, எடுத்துச் செல்லுங்கள்" என்றது.

அரசன் அந்த மானையும் பார்த்துக் காரணம் வினவ "மன்னா! நான் பெரிய சம்சாரி. தனியாக இருக்கும்போது, இப்படித் தனியாக இருக்கிறோமே என்று கஷ்டப்பட்டேன். மனைவி கிடைத்தாள். ஆனால் சுகம் கிடைக்கவில்லை. கஷ்டம் இரண்டு பங்காக மாறியதுதான் மிச்சம். போததற்கும் குழந்தைகள் வேறு பிறந்தன. துன்பம் பல மடங்காகியது. என்னால் தாங்க முடியவில்லை. செத்துத் தொலைந்தால்தான் எனக்கு நிம்மதி. அதற்காகச் சொன்னேன்," என்றது.

எந்த மானையும் கொல்லாமல் திரும்பினான் மன்னன்.

இல்லை என்பதற்காக ஒரு மான் வருந்தி சாகத்துணிந்தது.

இருக்கிறது என்பதற்காக மற்றொரு மான் சாகத் துணிந்தது. ஆக இன்பம், துன்பம் அவரவர் மனப்போக்கில் தான் இருக்கிறது.

இருப்பதைக் கொண்டு திருப்தியாக வாழ்பவனே துன்பத்தைத் துரத்தியடிக்கும் புத்திசாலி.

பிரகலாதன் - கண்டி.

## ஆன்மீகம்

# நபி மொழி தந்த நல்வழிகள்

- முதுமை வருமுன் இளமையையும், நோய் வருமுன் ஆரோக்கியத்தையும், வறுமை வருமுன் செல்வத்தையும், மரணம் வருமுன் வாழ்வையும், துன்பம் வருமுன் மகிழ்ச்சியையும், நல்வழிகளில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
- பிறர் மனம் நோகும்படி நடந்து கொள்வோரும், சாபமிடுவோரும், வரம்பு மீறி தகாத சொற்களைப் பேசுவோரும், பரிபூரண விசுவாசிகளாக மாட்டார்கள்.
- இரக்கமுள்ள இதயத்தவரே சுவர்க்கம் புகுவர்.
- உண்மைபேசுதல் எனும் ஒரேயொரு செயலை மட்டும் செய்து வாருங்கள். சொர்க்கம் உங்களைத் தேடி வரும்.
- உள்ளம் நலமாக இருக்குமானால் உடல் முழுவதும் நலமாக இருக்கும். அது கெட்டுவிட்டால் உடல் முழுவதும் கெட்டுவிடும்.
- வாக்குறுதி காப்பாற்றாதோரும், பொய் பேசுவோரும், நம்பிக்கை மோசம் செய்வோரும், தம்மை முஸ்லிம்கள் என்று சொல்லத் தகுதியற்றவராவர்.
- மது அருந்தாதீர்கள். ஏனெனில் எல்லாவிதமான பாவங்களுக்கும் அதுவே வழிகாட்டியாகவும் இருக்கிறது. இழிவான செயல்களுக்கு அதுவே தலைமை தாங்குகிறது.
- இறந்தவர் செய்த நற்செயல்களை எடுத்துச் சொல்லுங்கள். அவர் செய்த தீமையான காரியங்களை மறைத்து, மறந்து விடுங்கள்.
- உங்கள் முன்னோர்களின் நற்குணங்களை நினைவு படுத்திக் கொள்ளுங்கள். ஆனால் அவர்கள் செய்த பாவங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்.
- முதியோரைக் கண்ணியப்படுத்துங்கள். முதுமையில் கண்ணியம் பெறுவீர்கள்.
- தற்பெருமை, பிறரை ஏமாற்றிச் சேர்ந்த பொருள், கடன் இல்லாமல் மரணிப்போர் சொர்க்கவாசியாவர்.
- நீங்கள் நோயாளியைப் பார்க்கச் சென்றால் அவருடைய துன்பத்தை மறக்கும்படியாக மகிழ்ச்சியாகப் பேசுங்கள். ஏனென்றால் அது எதையும் மாற்றாவிட்டாலும் கூட அவருடைய மகிழ்ச்சியை அதிகரிக்கும்.
- நற்குணமுள்ளவர் அந்நியரிடத்திலும் நெருக்கமானவர். தீயகுணமுள்ளவர் தனது குடும்பத்திலும் அந்நியரானவர்.
- எவரிடம் நீங்கள் கல்வி, அறிவு பெறுகின்றீர்களோ அவர்களுக்கு மரியாதை காட்டுங்கள். யாருக்கு நீங்கள் கல்வி கற்பிக்கின்றீர்களோ அவர்களை மரியாதையாக நடத்துங்கள்.

தொகுப்பு: ஏ.எச்.ஏ.ஹுஸைன்
ஏறாவூர்

# தேவனைக் கூப்பிட்டு தப்பினார்!

தாவீது சிறுபையனாக இருந்த போது, கோலியாத் என்ற இராட்சதனைக் கொன்று வெற்றி பெற்றான். இதனால் மக்கள் அவனைப் புகழ்ந்து பாடினார்கள். அப்புகழ்ச்சியை தாங்க முடியாத அந்நாட்டு அரசனான சவுல், தாவீதைக் கொல்ல முயன்றான். அரசனே தன் மீது கோபமாயிருப்பதை உணர்ந்த தாவீது நகரத்தைவிட்டு விட்டு, காட்டுக்கு தப்பி ஓடினான். ஆனால் சவுலின் அரசாங்கமோ அவனை காடு மேடாக தேடியது. இராணுவத்தின் கண்களுக்கு தப்ப ஒழிந்து ஒழிந்து வாழ்ந்தான். மேலும் இறைவனின் அடைக்கலத்துக்குள் நுழைய அவன் இறைவனை நோக்கி ஜெபம் செய்தான்.

"கண்மணியைப்போல என்னைக் காத்தருளும். என்னை ஒடுக்குகிற துன்மார்க்கருக்கும், என்னை சூழ்ந்து கொள்கிற பிராண பகைஞருக்கும் மறைவாக, உம்முடைய செட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும்." (சங்கீதம் 17:8,9) என்று விண்ணப்பம் செய்தான்.

அவன் ஏறக்குறைய 15 வருடங்கள் துரத்தப்பட்டான் என்று கணிக்கப்படுகின்றது. முடிவிலோ "உயரத்திலிருந்து அவர் கை நீட்டி, என்னைப் பிடித்து ஜலப்பிரவாகத்திலிருக்கிற என்னைத் தூக்கிவிட்டார். என்னிலும் அதிக பலவான்களாயிருந்த என் பலத்த சத்துருவுக்கும் என்னைப் பகைக்கிறவர்களுக்கும் பிடிபடாமல் என்னை விடுவித்தார். என் ஆபத்து நாளில் எனக்கு எதிரிட்டு வந்தார்கள். கர்த்தரோ எனக்கு அதரவாயிருந்தார். அவர் விசாலமான இடத்திலே என்னைக் கொண்டு வந்து என்மேல் பிரியமாயிருந்தபடியால் என்னைத் தப்புவித்தார்." (சங்கீதம் 18:16-19) என்று பாடினார். இதன் பின்பு தாவீது எருசலேமிலே நாற்பது வருடங்களாக அரசாட்சி செய்தார், என்று நாம் காணலாம். இவர் இறைவனை நம்பி வாழ்ந்த மனிதர் எனலாம்.

ரி.ஐ.இன்பநாதன்
நுகேகொடை.

# அம்மா பெயரில் மருத்துவமனை இம்ரான்கானின் இன்னொரு பக்கம்

பாகிஸ்தான் கிரிக்கெட்டில் மட்டுமல்ல, உலக போட்டிகளிலும் தன்னுடைய சாகசத்தை நிகழ்த்திய பெருமை இம்ரான் கானுக்கு உண்டு.

37 வயதிலும் திருமணம் செய்து கொள்ள விரும்பாத இம்ரான்கான், குழந்தைகள் மீது அளவு கடந்த பாசம் வைத்திருக்கிறார். வாழ்க்கை முழுவதும் தனிமையில் இனிமை காணும் மனிதராக இருந்து விடுவது என்று முடிவெடுத்து இருக்கிறார்.



"கிரிக்கெட்டை விட்டு விலகியதால் எந்தவித வருத்தமும் கிடையாது. என்னுடைய முழு சிந்தனையெல்லாம் முப்பது கோடி ரூபா செலவில் புற்றுநோய் மருத்துவமனையைக் கட்ட வேண்டும் என்பதே" என்கிறார் இம்ரான்.

தன்னுடைய தாய் நினைவாகக் கட்டப்படும் மருத்துவமனைக்குப் பல இடங்களில் இம்ரான் கிரிக்கெட் போட்டி நடத்துகிறார். சமீபத்தில் இங்கிலாந்திலுள்ள கிறிஸ்டல் பலஸில் இந்தியா-பாகிஸ்தான் பந்தயத்தை நடத்தினார்.

பந்தயத்தில் பாகிஸ்தான் அணி தோற்கும் நிலையில் இருந்தது. இதை விரும்பாத அந்த அணி ஆதரவாளர்கள் மைதானத்திற்குள் புகுந்து ஆட்டத்தை நிறுத்தினர். இப்படிப் பாதி ஆட்டத்தில் நிறுத்தவேண்டியதாகிவிட்டதே என இம்ரான்கான் அதிர்ச்சி அடைந்தார். போரா நடந்து இருக்கிறது. நட்பு முறையில்தானே ஆட்டம் நடந்துள்ளது. வெற்றி, தோல்வியைச் சகஜமாக எடுத்துக் கொள்ளக்கூடாதா என்கிறார் அவர்.

இம்ரான்கான் கட்டும் மருத்துவமனை முதலில் டிசம்பர் மாதம் திறக்க முடிவு செய்யப்பட்டிருந்தது. தற்போது அது வரும் மார்ச் 23ந் திகதிக்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. இதுவரை மருத்துவமனை கட்ட பதினைந்து கோடி ரூபாய்க்கு மேல் சேர்ந்துள்ளது. இதே போன்ற தொகை இன்னும் தேவைப் படுகிறது. அதற்கான முயற்சியில் அவர் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

பெரும்பாலானவர்களால் பாராட்டப் படுகின்ற இம்ரான்கான் ஒரு சிலரின் விமர்சனத்திற்கும் உள்ளாகிறார். இவரது நெருக்கடி காரணமாகத்தான் அணியின் கப்டன் பதவியிலிருந்து மியான்டாட் இறக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது. "என்ன இது மோசமான கருத்து. நான் எதற்கு இப்படி நடந்துகொள்ள வேண்டும்? மியான்டாட் மீது எனக்கு கோபம் கிடையாது," என்று வருத்தப்படுகிறார் இம்ரான்.

தற்போது பாகிஸ்தான் அணிக்குத் தலைவராக இருப்பவர் வாசிம்அகரம். இவரது தலைமை திருப்தி தருவதாக இம்ரான்கான் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

# "அங்கே ஆடினால் இங்கே இடமில்லை"

கால்பந்து உலகின் நட்சத்திர வீரர் நெதர்லாந்து நாட்டின் கப்டன் ருட் குல்லிட். 31 வயதாகும் இவர் இத்தாலியின் பிரபல சாம்ட்டோரியா கிளப்பிற்காகத் தற்போது ஆடி வருகிறார்.

அடுத்த ஆண்டு நடைபெறும் நெதர்லாந்து தேசிய கால்பந்து அணியில் ருட் குல்லிட்டிற்கு இடமிருக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

தான் தனது நாட்டு தேசிய அணியில் விளையாட வேண்டுமென்றால், உலகக் கோப்பை இறுதியாட்டத்திற்கு நெதர்லாந்து தகுதி பெற்றிருக்க வேண்டும். ஜோகன் குருயுப் என்பவனை அணியின் கோச்சாக நியமிக்க வேண்டும் என்று நிபந்தனையெல்லாம் போட்டுள்ளார்.

ஆனால் நெதர்லாந்து, ருட் கில்லிட்டின் நிபந்தனைகளை ஏற்கவில்லை. இப்படி நிபந்தனை போடுவதானால் ருட் கில்லிட் எங்களுக்குத் தேவையில்லை என்று கூறிவிட்டது நெதர்லாந்து தேசிய அணி.

# இந்தியாவுக்கு அழைப்பு!

1996-97ம் ஆண்டில் அவுஸ்திரேலியாவில் மூன்று நாடுகள் பங்கு கொள்ளும் உலகத் தொடர் கிரிக்கெட் (டபிள்யூ.எஸ்.சி) போட்டியில் கலந்துகொள்ள இந்திய கிரிக்கெட் அணிக்கு அவுஸ்திரேலிய அணி அழைப்பு விடுத்துள்ளது. இந்தப் போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் இந்தியாவுடன் மோதும் மூன்றாவது அணி, மேற்கிந்தியத்தீவு அணி என்றும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.

## ஸ்போர்ட்ஸ்

# 'போதும் போய் வருக' கூச்சுக்கு நேர்ந்த கதி



டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக பட்ச ஓட்டங்களைக் குவித்த இங்கிலாந்து வீரர் என்ற சாதனையை நிலைநாட்டியவர் கிரஹாம் கூச். உலகத் தரம் வாய்ந்த வலது கை துடுப்பாட்ட வீரர். டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அதிகபட்ச ஓட்டங்களைக் குவித்தவர்கள் பட்டியலில் அலன்போடர், சுனில் கவாஸ்கர், விவியன் றிச்சட்ஸ், ஜாவிட் மியான்டாட் ஆகியோர்களுக்கு அடுத்தப்படியாக ஐந்தாவது இடத்தில் இருக்கிறார் கிரஹாம் கூச்.

40 வயதான கூச்சின் கப்டன் பதவி சமீபத்திய அவுஸ்திரேலியா அணியின் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தின்போது பறிக்கப் பட்டது. தற்போது, மேற்கிந்தியத் தீவில் சுற்றுப்பயணம் செய்யும் இங்கிலாந்து அணியில் கிரஹாம் கூச் இடம்பெறவில்லை. கூச்சுடன் புகழ்பெற்ற வீரர்களான டேவிட் கவர், மைக் கட்டிங், அலன் லாம்ப் போன்ற முன்னணி வீரர்களும் மேற்கிந்தியத்தீவு அணியில் இடம்பெறவில்லை.

இளம் வீரரான மைக் ஆதர்ட்டன் தலைமையில் 17 வீரர்கள் மேற்கிந்தியத்தீவு சுற்றுப் பயணத்திற்கு இங்கிலாந்து அணியில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

# டென்னிஸ் உலக மன்னர்கள்

உலக புரஃபெஷனல் ஆண்கள் டென்னிஸ் ஆட்டக்காரர்களின் நடப்பு வரிசைப் பட்டியலை கடந்த மாதம் டென்னிஸ் புரஃபெஷனல் சங்கம் வெளியிட்டது. அதில் பீட் சாம்பிரஸ் நம்பர்-1ஸ்தானத்தில் இருக்கிறார்.

இப்பட்டியலில் முதல் 20 இடங்களைப் பிடித்துள்ள வீரர்களின் நாடு மற்றும் அவர்கள் சம்பாதித்துள்ள புள்ளிகளுடன் விபரம் கீழே தரப்பட்டுள்ளது:

| ஸ்தானம் | பெயர் | நாடு | புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | பீட் சாம்பிரஸ் | அமெரிக்கா | 3925 |
| 2. | ஜிம் கூரியர் | அமெரிக்கா | 3729 |
| 3. | ஸ்ரெபான் எட்பேர்க் | ஸ்வீடன் | 2649 |
| 4. | செர்ஜிபுருகெய்ரா | ஸ்பெயின் | 2638 |
| 5. | பொரிஸ் பெக்கர் | ஜெர்மனி | 2617 |
| 6. | மைக்கல் ஸ்டிச் | ஜெர்மனி | 2598 |
| 7. | மைக்கல் சாங் | அமெரிக்கா | 2200 |
| 8. | அன்ட்ரி மெட்வெடெவ் | உக்ரைன் | 2119 |
| 9. | கோரன் இவானிசெவிக் | குரோசியா | 2061 |
| 10. | ரிச்சட் கிராஜிசெக் | நெதர்லாந்து | 2001 |
| 11. | தோமஸ் மஸ்டர் | ஒஸ்ரியா | 1999 |
| 12. | செட்றிக் பயோலைன் | பிரான்ஸ் | 1785 |
| 13. | பீற்றர் கோர்டனா | செக். | 1728 |
| 14. | அலெக்சாண்டர் வோல்கோவ் | ரஷ்யா | 1538 |
| 15. | இவான் லெண்டில் | அமெரிக்கா | 1423 |
| 16. | வொலி மசூர் | அவுஸ்திரேலியா | 1413 |
| 17. | காரல் நோவோசெக் | செக். | 1413 |
| 18. | டோட் மார்டின் | அமெரிக்கா | 1384 |
| 19. | மக்னஸ் குஸ்டோப்சன் | ஸ்வீடன் | 1279 |
| 20. | மார்க் ரோஸ்சட் | சுவிற்சர்லாந்து | 1239 |



எட்பேர்க்



சாம்பிரஸ்

# யோசித்தது சரிதானா?



www.padippakam.com


நாள் குறையாத தங்க-வைர நகைகள்.
அழகூட்டும் எடுப்பான தயாரிப்புக்கள்.
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு.
அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொ.பேசி: 436331


# எறிபோ எறி!

வாரமலர் தினமுரசு

தென்கொரிய நாட்டின் தலைநகரான சியோலில் 1988 செப்டம்பரில் நடைபெற்ற ஒலிம்பிக்போட்டிகளில் ஜாக்கி ஜோய்னர்-கேர்சி என்ற அமெரிக்க பெண் பல விளையாட்டுகளில் சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். இவர் கலந்து கொண்ட எட்டுப்போட்டிகளிலும் இவர் பெற்ற மொத்தப்புள்ளிகள் மொத்தம் 7291. ஈட்டி எறிதல் போட்டியில் மட்டும் இவர் 776 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இப்போட்டிகளில் ஜாக்கி கலந்து கொண்ட போது இவருக்கு வயது 26. 100 மீட்டர் தடைதாண்டி ஓடுதல், உயரப்பாய்தல், குண்டெறிதல், நீளப் பாய்தல், 800 மீட்டர் ஓட்டம் ஆகிய போட்டிகளிலும் இவர் கலந்து கொண்டு 7291 புள்ளிகளையும் பெற்று முதலிடத்தைத் தட்டிக்கொண்டார். உலக சாதனைப் புத்தக மான கின்னஸிலும் இடம்பிடித்துக்கொண்டார். பெரிய புள்ளிதான்.


பிரீந்துக்குறையா தங்கத்தோடு
எழிலூட்டும் தொழில் நுட்பம்
இணையற்ற கலைநயம்
அதுவே
எங்கள் ஆபரணங்களின் இரகசியம்
9tc Gold House
49, COLOMBO STREET
KANDY
SRI LANKA
TEL: 08-24256




## ஆடலுடன் பாடலைக் கேட்க....

போராளன் என்பது இவருக்கு ஒரு போர்வை. உடலை வெளிப்படுத்தி ஆடலுடன் பாடலும் வழங்கி கூட்டம் திரட்டும் பாடகி வின் னி. புத்திசாலி.



## பயின்றார் சிறந்தார்



## திரிலான தொழில்



பத்திரிகைத் துறையில் ஈடுபாட்டோடு இறங்கிவிட்டால் அற்புதமும் உண்டு. ஆபத்தும் உண்டு. வெளிநாடுகளில் ஊசி நுழைய முடியாத இடத்திற்குள்ளும் பத்திரிகையாளர்கள் நுழைந்துவிடுவார்கள். கையோடு கமரா வையும் கொண்டுபோய் விடுவார்கள். தத்ரூபமான படங்கள் கிளிக் கிளிக். திரிலான தொழில். சில நேரங்களில் மரணம் தப்பினால் மரணம். இந்தப்படம் பொஸ்னியாவில் துப்பாக்கி மனிதன் ஒருவரால் அப்பாவி மனிதன் பின்புறமாக் குறிவைக் கப்பட்டபோது கமராவுக்குள் சிறைப்பிடிக்கப் பட்டது.



## அட...கமரா வலம்!

செவிகளை அதிரவைக்கும் இசையின் இரைச்சலோடு நடனங்கள். நடனங்கள் என்ற போர்வையில் உணர்வுகளை, உணர்ச்சிகளைத் தூண்டும் முயற்சிகள். மேலைநாடுகளில் இப்போது வேகமாகப் பரவிவரும் கவர்ச்சி நடன மோகத்தின் மத்தியில் நமது பரதக் கலைக்கும் மதிப்பு இருக்கிறது. அற்புதமான பரதக்கலை பசில மேலை நாட்டவர் பலர் விருப்பம் கொண்டு அதற்காகவே நம் அயல்நாடான பாரதத் துக்கு வந்துவிடுவது புதிய செய்திகள் அல்ல. படத்தில் பரத நாட்டிய அபிநயத்தோடு இருப்பவர் மேலைநாட்டுப் பெண் சௌரன் லோவென். பாலே நாட்டியத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர் பரத நாட்டியத்தின் பெருமை உணர்ந்து பயின்று சிறந்தார். நமக்கும் பெருமைதான்.

## இதனால் இழப்புத்தான்

முன்னொரு காலத்தில் சிறுவர்கள் யுத்த அரங்கின் பக்கம் செல்லுவதற்கே அனுமதியில்லை. இப்போது நிலைமை மாறிவிட்டது. யுத்த அரங்கின் பக்கம் செல்வது மட்டுமல்ல யுத்தத்திலும் இறங்குகிறார்கள். யுத்தம் விடுவரை அந்த பின்னர் வேறு வழியில்லையோ?

இயல்பாகவே ஆயுதங்கள் மீது ஒரு ஈர்ப்பும். அந்த ஆயுதங்கள் கைக்கெட்டும்போது அதன் பின்னால் செல்ல வைத்துவிடுகிறது. படத்தில் உள்ள சிறுவர்கள் அஸாபாந்தைச் சேர்ந்தவர்கள். இளம் கன்றுகள் பயமறியாது எனினும் அந்த இளம் கன்றுகள் கொடிய யுத்தத்தில் சருகிப் போவதும், வன்முறையில் அதிக விருப்பம் கொள்வதும் சம்பந்தப்பட்ட சமூகங்களுக்கு இழப்புத்தான்.



## யார் தடுத்தாலும் விடேன்!



மனித குலத்தின் தலைவிதியே அணு ஆயுதப்போரில் தலைகீழாக மாறிவிடும். எனவே அதைத்தடுக்க அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் வந்தது. விதிகள் எழுதப்பட்டன. ஆனால் அணு உற்பத்திசெய்யக் கூடிய வல்லமையுள்ள நாடுகள் செய்துகொண்டு தான் இருக்கின்றன. இப்போது அணு உற்பத்தியில் குதித்திருப்பது வடகொரியா. யார் தடுத்தாலும் விடேன் பாணியில் உற்பத்தி நடக்கிறது. அணு உற்பத்தியை வட கொரியா நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா சொல்கிறது. ஆனால் அந்த அமெரிக்காவும் அணு உற்பத்தியில் கில்லாடியாக இருக்கிறது. எப்படியோ மனித குலத்தின் தலைமீது அணுக்குண்டுகள் தொங்கிக்கொண்டிருக்கின்றன.

தன்நிலைம்

நேர்மை உண்மை வெளிப்படைத்தன்மை அதுவே முரசின் பாதை